



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:275 | 20-04-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

20.04.2026 சித்திரை 7
திங்கள்கிழமை

சூரிய உதயம் 5:57

திதி:
சதுர்த்தி

நட்சத்திரம்:
கார்த்திகை காலை 7.52

யோகம் :
மரண–அமிர்தம்

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

நல்ல நேரம்
காலை 6:30 – 7:30

இராகு காலம்
காலை 7.30 – 9.00

எமகண்டம்
காலை 10.30 – 12.00

குளிகை
மதியம் 1.30 – 3.00

சூலம்
கிழக்கு

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பட்டாசு ஆலையில் வெடி விபத்து: 23 பேர் பலி!

## விபத்தில் படுகாயம் அடைந்த 6 பேருக்கு தீவிர சிகிச்சை

**விருதுநகர், ஏப்.20**

விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 23 பேர் பலியானதாக தகவல் தெரியவந்துள்ளது. பட்டாசு ஆலை வெடி விபத்தில் 4 அறைகள் சேதமடைந்த நிலையில் காயமடைந்த 6 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விருதுநகர் அருகே கட்டனார்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில், 10க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை பட்டாசு ஆலை இயங்காது. தேர்தல் காரணமாக 23ம் தேதி விடுமுறை அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளதால் தொழிலாளர்கள் ஞாயிற்றுக்கிழமையான நேற்று பணியில் ஈடுபட்டிருந்தபோது பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், இந்த விபத்தில் முதலில் 4 பேர் பலியானதாக தகவல் தெரியவந்தது.



பட்டாசு ஆலையில் வெடி மருந்துகள் பயங்கர சப்தத்துடன் வெடித்துள்ளன. விபத்தின் தாக்கத்தால் பட்டாசு ஆலையின் 4 அறைகள் முழுமையாக இடிந்து தரைமட்டமானதுடன், சுமார் 10 கி.மீ தூரம் வரை அதிர்வு உணரப்பட்டுள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் முதலில் 4 பேர் உயிரிழந்ததாக கூறப்பட்ட நிலையில், தற்போது உயிரிழப்பு 23ஆக உயர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. போலீசார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்தின் போது பணியில் இருந்த 23 பேர் இதுவரை பலியாகி உள்ளனர். மேலும் விபத்தில் படுகாயம் அடைந்த 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது.

பட்டாசு ஆலை வெடி விபத்தில் வானுயரம் புகை சூழ்ந்துள்ள நிலையில் தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் தமிழ்நாட்டின் பட்டாசு தயாரிப்பு மையமாக அறியப்படுகிறது. சிவகாசி மற்றும் சாத்தூர் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பட்டாசு தயாரிப்பு ஆலைகள் உள்ளன. தொடர்ந்து இப்பகுதி பட்டாசு ஆலைகளில் வெடி விபத்துகள் நிகழ்ந்து வருகின்றன. வெடி விபத்துகள், பட்டாசு தொழிலில் பாதுகாப்பு நடைமுறைகளின் போதாமை குறித்து கேள்வி எழுந்து வருகிறது.

## விருதுநகர் பட்டாசு ஆலை பலி : முதல்வர் இரங்கல்

**சென்னை, ஏப்.20:**

முதல்வர் ஸ்டாலின், தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, "விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரைக் கேட்டுக்கொண்டுள்ளேன் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க தலைவர் விஜய் இரங்கல்

விருதுநகர் அருகே, கட்டனார்பட்டியில், பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த செய்தியறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன். அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைந்து பூரண குணமடைய விழைகிறேன். உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் மக்களுக்கான உண்மையான ஆட்சி அமைந்த உடன், பட்டாசுத் தொழிலாளர்களின் நலன் காக்கும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உதயநிதியை முதல்வராக்க விரும்புகிறார் மு.க.ஸ்டாலின்: அமித்ஷா

**ஈரோடு, ஏப்.20:**

திமுகவின் வாரிசு அரசியலை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில் பாஜக தேர்தல் பிரசாரத்தில் மத்திய அமைச்சர் அமித் ஷா பேசியதாவது,

"எங்கள் அரசு திமுகவின் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

மு.க. ஸ்டாலின், தனது மகனை (உதயநிதி ஸ்டாலின்) முதல்வராக்க விரும்புகிறார். முதலில் கருணாநிதி, பின்னர் ஸ்டாலின், இப்போது அவரது மகன். இந்த வாரிசு அரசியலை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

காங்கிரஸூம் திமுகவும் பெண்களை நாடாளுமன்றத்துக்கு வரவிடாமல் தடுத்தனர்.



மேலும், தமிழகத்துக்கான தொகுதி அதிகரிப்பையும் அவர்கள் நிராகரித்து விட்டனர்.

இருப்பினும், தமிழ்நாட்டுக்கும் நாட்டின் பெண்களுக்கும் நீதி வழங்குவோம் என்றும், காங்கிரஸ் - திமுகவின் திட்டத்தை முறியடிப்போம் என்று மோடி சார்பாக உறுதியளிக்கிறோம்.

எடப்பாடி பழனிசாமி தலைமையில், அதிமுகவுடன் இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியமைப்பதில் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

தமிழகத்தில் நாங்கள் சட்டம் - ஒழுங்கு நிலையை மேம்படுத்துவோம். பிரதமர் மோடியின் தலைமையில், தமிழகத்தின் இழந்த பெருமையை மீட்டெடுப்போம்" என்று தெரிவித்தார்.

# இலங்கை அதிபருடன் இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் சந்திப்பு

**கொழும்பு, ஏப்.20:**

இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் 2 நாள் அரசு முறை பயணமாக இன்று இலங்கை சென்றுள்ளார். 49 பேர் அடங்கிய தூதரக அதிகாரிகள் குழுவுடன் இலங்கை சென்ற சி.பி.ராதாகிருஷ்ணனை, விமான நிலையத்தில் அந்நாட்டின் விளையாட்டுத்துறை மந்திரி சுனில் குமார கமகே மற்றும் பல்வேறு முக்கிய அதிகாரிகள் நேரில் சென்று வரவேற்றனர்.

இந்தியாவின் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக சி.பி. ராதாகிருஷ்ணன் இலங்கைக்கு சென்றுள்ளார். தொடர்ந்து இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகேவை சி.பி. ராதாகிருஷ்ணன் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

குறிப்பாக இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வீட்டுவசதித் திட்டம் மற்றும் இலங்கையில் டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் டாலர் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், இலங்கையில் உள்ள தமிழர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.






# "தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்படவில்லை; நிறைவேற்ற முயற்சிப்போம்": மத்திய சட்ட அமைச்சர்

**ஊட்டி, ஏப்.20:**

"தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்படவில்லை. அது இன்னமும் நிலுவையில் உள்ளது. அதை நிறைவேற்ற ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம்" என மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்ட ஊட்டியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் மு.போஜராஜனுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொள்ள மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் இன்று ஊட்டி வந்தார். ஊட்டியில் ஜெயின் சமூகத்தின் 'வர்சிதப் விரதம்' நிறைவு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பஜனை பாடினார்.

மேலும், அந்த சமூக மக்களிடம் வாக்குகளை சேகரித்தார். தொகுதி மறுவரையறை மசோதா நிலுவையில் உள்ளது. அதை நிறைவேற்ற ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம் என மத்திய சட்டத்துறை தெரிவித்தார்.



இது குறித்து அவர் கூறும்போது, "எங்களது வேட்பாளர் மு.போஜராஜன் உங்களுக்குத் தெரிந்த ஒரு பிரபலமான நபர். ராஜஸ்தானி ஜெயின் சமாஜ் அமைப்பின் ஒரு நிகழ்ச்சி ஒரு ஆன்மிக நிகழ்ச்சி என்று சொல்லலாம். இருந்தாலும், இங்கே பாஜகவுக்கு ஆதரவாக வாக்களிக்க மக்கள் ஆர்வமாக உள்ளனர். அதாவது, ஒரு வெளிப்படையான மாற்றம் தெரிகிறது. அதை எங்களால் காண முடிகிறது. தமிழ்நாட்டில் 'இரட்டை இன்ஜின்' அரசாங்கத்தை அமைக்க மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்படவில்லை, அதை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டோம். நாங்கள் மூன்று மசோதாக்களை அறிமுகப்படுத்தினோம். ஒன்று 131-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா, இது பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கானது. பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா 2023-ஐ அமல்படுத்த விரும்புகிறோம். அதற்காக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதுதான் முக்கியமான மசோதா. அந்த மசோதாவுடன் இரண்டு மசோதாக்கள் இணைக்கப்பட்டிருந்தன. ஒன்று தொகுதி மறுவரையறை மசோதா, மூன்றாவது யூனியன் பிரதேச மசோதா. இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை.

எனவே, அந்த மசோதாவின் ஒரு பகுதியான பெண்கள் இடஒதுக்கீடு மசோதா தோற்கடிக்கப்பட்டபோது, தொகுதி மறுவரையறை மசோதா பரிசீலனைக்கு வரவில்லை. அது நிலுவையில் உள்ளது. அதற்கான ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம். இது ஒரு அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடு. நாங்கள் அதைச் செய்தே ஆக வேண்டும். 1950-களில் இருந்தே தொகுதி மறுவரையறை நடந்து வருகிறது. இதற்கு மேல் நாம் எவ்வளவு காலம் காத்திருக்க முடியும்? இதனால், எந்த மாநிலமும் நஷ்டமடையாது" என்றார்.



# திருக்குறள் குறள்-595

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு



நீர்ப்பூக்களின் தாளின்
நீளம் அவை நின்ற
நீரின் அளவினவாகும்,
மக்களின் ஊக்கத்தை
அளவினதாகும்
வாழ்க்கையின் உயர்வு.

## சிந்திக்க ஒரு நொடி



இலக்கு நிர்ணயம்
செய்த பின்
தயங்காதே
மின்னல்
வேகத்தில் செல்
வெற்றி உன்னிடம்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## பத்தி உலாத்தல், பூ பாவாடை சான்றுதல்



ஸ்ரீவித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. கோடை உத்ஸவ இரண்டாம் திருநாள் ஸ்ரீ பெருமாள் புறப்பாடு, பத்தி உலாத்தல், பூ பாவாடை சான்றுதல்.

## தே.மு.தி.க நிர்வாகி மூர்த்தி அ.தி.மு.க. வில் இணைந்தார்



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் போடி நாயக்கன்பட்டி தே.மு.தி.க நிர்வாகி மூர்த்தி அந்தக் கட்சியில் இருந்து விலகி அ.தி.மு.க பேரூர் செயலாளர் அசோக்குமார் முன்னிலையில் அ.தி.மு.க. வில் இணைந்தார். அவருக்கு அதிமுக வேட்பாளர் மாணிக்கம் சால்வை அணிவித்தார். உடன் பேரூர் துணைச் செயலாளர் சந்தனத்துரை மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

## சீர்காழி சட்ட மன்ற தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் வாக்கு சேகரிப்பு



**சீர்காழி , ஏப் , 20 :**
மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்ட மன்ற தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் வழக்கறிஞர் இரா. செந்தில் செல்வன் உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு சீர்காழி ஒருங்கிணைந்த நீதி மன்றத்தில் வழக்கறிஞர்களிடம் வாக்கு சேகரித்தார். மூத்த வழக்கறிஞர் எம்.சுதா வேட்பாளருக்கு சால்வை அணிவித்தார். சீர்காழி தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் மற்றும் தி.மு.க. வழக்கறிஞர்கள் உடன் உள்ளனர்.

# வாடிப்பட்டியில் மீனாட்சியம்மன்கோவில் சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



**வாடிப்பட்டி,ஏப்.20:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி 2 வார்டுகுலசேகரன்கோட்டையில் குலசேகரபாண்டியமன்னரால்கட்டப்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்த இயற்கை எழில்கொஞ்சும் சிறுமலை ஓடைக்கரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சிசுந்தரேசுவர் திருக்கோவில் சித்திரை திருவிழா நேற்று 19ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.25மணிக்கு பேரூராட்சி தலைவர் மு பால்பாண்டியன் தலைமையில் முன்னாள் பேரூராட்சி தலைவர் கிருஷ்ணவேணி முன்னிலையில் கொடியேற்றப்பட்டது.

இந்த கொடியேற்று விழாவை யொட்டி மீனாட்சிசுந்தரேசுவர், கொடிமரம், நந்தீஸ்வரர், பலிபீடத்திற்கும் சிறப்பு அபிஷேக அலங்கார அர்ச்சனைகள் செய்யப்பட்டது.

இந்தபூஜைகளை பட்டடர்கள் சர்வசாதகமாக குமரேசன்பட்டர் பிரதான ஆச்சாரியர் ஜெய்கணேஷ், அலங்காரபட்டர் கணேசன், கோவில் அர்சகர்கள் கிருஷ்ணகுமார் ஆகியோர் செய்தனர்.

தினந்தோறும் மாலை 6மணிக்கு மீனாட்சிஅம்மன் சிறப்பு அலங்காரங்கள் செய்யபட்டு முதல்நாள் சிம்மவாகனத்திலும், இரண்டாம்நாள் அன்ன வாகனத்திலும், மூன்றாம் நாள் காமதேனுவாகனத்திலும், நான்காம்நாள் பட்டுப்பல்லக் கிலும், ஐந்தாம் நாள் குதிரைவாகனத்திலும், ஆறாம்நாள் ரிஷபவாகனத்திலும், ஏழாம்நாள் யாளிவாகனத்திலும் அருள்பாலிக்கிறார்.

26ந்தேதிஞாயிற்றுக்கிழமை மதியம் 3மணிக்கு தவத்திரு ஏடுராதாகிருஷ்ணன் மண்டகப்படியிலிருந்து செங்கோல், வைரகிரீடம், தங்ககவசம் ஆபரணப்பெட்டி புறப்பாடு, இரவு 7.25 மணி முதல் 7.50மணிவரை மீனாட்சிஅம்மனுக்கு பட்டாபிஷேகம், 27ந்தேதி திங்கள்கிழமை காலை 8மணிக்கு போடிநாயக்கன்பட்டி பாமா ருக்குமணி சமேத கோபாலகிருஷ்ணன் கோவிலில் இருந்து சீர்வரிசையுடன் உற்சவர் புறப்பாடு மற்றும் சந்தைபாலம் பாலதண்டாயுதபாணி கோவில்களில் இருந்து சீர்வரிசை புறப்பாடு நடக்கிறது.

அதேபோல் மாலை 6மணிக்கு தாதம்பட்டி இரட்டைவிநாயகர் கோவிலிருந்து மேளதாளத்துடன் சுந்தரேசுவரை அழைத்துச்சென்று வல்லபகணபதிகோவிலில் மீனாட்சியம்மன் திக்விஜயம் நடக்கிறது.

அதன்பின் சுந்தரேசுவர் மீனாட்சிஅம்மன் மாலை மாற்றுஉற்சவத்தை தொடர்ந்து 108முளைப்பாலிகை மற்றும் 108 சீர்வரிசைதட்டுடன் ஊர்வலமாக 2கிமீதுhரம் நடந்துசென்று திருக்கோவிலை அடைகிறது.

28ந்தேதி செவ்வாய்;கிழமை காலை 9மணி முதல் 10.30மணிக்குள் மீனாட்சிசுந்தரேசுவர் திருக்கல்யாணம் நடக்கிறது. 12மணிக்கு திருமாங்கல்யம்சரடு அன்னதானம் வழங்கப்படும். மாலை 6மணிக்கு பரதநாட்டிய நிகழ்ச்சி நடக்கிறது.

29ந்தேதி புதன்கிழமை மாலை 6மணிக்குதேரோட்டம் நடக்கிறது. 30ந்தேதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு தீர்த்தவாரியுடன் திருவிழா நிறைவடைகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் திருப்பணிக்குழுவினர் மற்றும் கிராமபொதுமக்கள் செய்து வருகின்றனர்.

# ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பில் பிரச்சாரக் கூட்டம்







**திருவண்ணாமலை,ஏப்.20:**
திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் ராணி அவர்களை ஆதரித்து வந்தவாசி நகரில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பில் பிரச்சாரம் நடைபெற்றது.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அதிமுக பொறுப்பாளர் வழக்கறிஞர் திரு.ஜாகீர் உசேன் அவர்கள் தலைமையில் முஸ்லீம் சிறுபான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் வீதி வீதியாக சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்கள்.

சிறுபான்மை இஸ்லாமிய சமூகத்திற்கு அதிமுக இயக்கம் செய்த நன்மைகள் குறித்து தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன் அவர்கள் விளக்கமாக கூறினார்கள். அவருடன் அதிமுக வேட்பாளர் ராணி அம்மாள், அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார், அவை தலைவர் டி கே பி. மணி , ஒன்றிய செயலாளர்கள் லோகேஸ்வரன், ராஜேஷ் , முனுசாமி, தனசேகர்,சேர்மன் சக்கரபாணி ஹைடெக் பாபு ராஜசேகர், ஜல்லி குமார் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

வந்தவாசி நகர அதிமுக செயலாளர், ஹோட்டல் பாஷா அவர்கள் இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# ம.தி.மு.க.வின் திரு சா.செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிப்பு



**மொடக்குறிச்சி, ஏப்.20:**
நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் மொடக்குறிச்சி தொகுதியில் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ம.தி.மு.க.வின் திரு சா.செந்தில்நாதன் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து வருகிறார். குளூர் ஊராட்சி செங்கரைப்பாளையம் வெள்ளிமலைப்பாறை பகுதியில் பொது மக்களை சந்தித்து தனக்கு ஓட்டு போட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய அன்புடன் கேட்டுக் கொண்டார். அவருடன் காங்கிரஸ், திமுக, மதிமுக, கம்யூ. மற்றும் கூட்டணி கட்சி பிரமுகர்களும் வந்தனர்.

அனைவரையும் அந்தப் பகுதி மக்கள் வரவேற்றனர். பொதுமக்கள் வெற்றி வேட்பாளர் திரு சா.செந்தில்நாதன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் சிறப்பான வரவேற்பளித்து அவருக்கு ஓட்டுப் போடுவதாக உறுதியளித்தனர்.

நன்றி! வணக்கம்!

# ராமானுஜர் கோவிந்தராஜ முடி வைபவம்



மேல்கோட்டை ஸ்வாமி ராமானுஜர் கோவிந்தராஜ முடி வைபவம்.

# திவ்ய சேவை



ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 7ம் திருநாள் காலை திவ்ய சேவை.

# சிறப்பு உபன்யாசம்



**தஞ்சாவூர், ஏப்.20:**
தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (14.04.2026) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஸித்தன்வாழூர் ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீராம சாஸ்திரி அவர்களின் ஷட்பதீ ஸ்தோத்ரம் எனும் தலைப்பில் உபன்யாசம் நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர் . நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தஞ்சை ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர். செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

# மதுரை வாசகர் வட்டம் சார்பில் சிறப்புக் கூட்டம்





**மதுரை, ஏப்.20:**
மதுரை வாசகர் வட்டம் சார்பில் சிறப்புக் கூட்டம், தாமரை தண்ணீர் தொட்டி அருகில் உள்ள மாநகராட்சி சிறப்புப் பூங்காவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அமைப்பாளர் பா. சண்முகவேலு தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் பேரா. ஜி. ராமமூர்த்தி சென்ற மாத செயல்பாடுகளை விவரித்தார்.

ஹைகூ கவிஞர் இரா. இரவி, முன்னாள் தலைமைச் செயலாளர் இறையன்புவின் எழுத்துலகம் பற்றி சிறப்புரை ஆற்றினார். அவர் தன் உரையில், இறையன்பு அவர்கள் எளிமையுடன் பல சாதனைகள் புரிந்தவர்.

தன் கல்வி அறிவு மற்றும் அனுபவங்களுடன் பொதுமக்கள் மற்றும் கல்வியாளர்கள் பயனடையும் வண்ணம் நூற்றுக் கணக்கான நூல்கள் எழுதியுள்ளார்.

தன் வாழ்க்கையில் ஒழுக்கத்துடன் பணியாற்றி சமுதாயத்துக்கு சேவையாற்றி னார். அவரது சிறப்பான குணம், அவர் பிறருக்குச் செய்த உதவிகளை மறந்து விடுவார். தன் பணிக்காலம் முடிந்த பின்பு, அரசு அளித்த எந்தப் பதவியையும் ஏற்காமல், எழுத்து மற்றும் பேச்சாற்றலுடன் தமிழகத்தை வலம் வருகிறார். தமிழ்நாடு எழுத்தாளர்கள் பட்டியலில் தவிர்க்க முடியாத ஒருவர் என்று இறையன்புவின் பெருமைகளை எடுத்துரைத்தார்.

அடுத்த நிகழ்வாக, கவிஞர் இரா. இரவி எழுதிய இரு நூல்களின் அறிமுகம் நடைபெற்றது.

இரவி எழுதிய "சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் வெற்றி முழக்கம்" -- என்ற திறனாய்வு கட்டுரைகளின் சிறப்பை எழுத்தாளர் பா. சண்முகவேலு எடுத்துரைத்தார்.

இரவி எழுதி, முனைவர் M. சாலமன் பெர்னாட்ஷா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த "Let Thousand Flowers Bloom" - நூலினை பேரா. ஜி. ராமமூர்த்தி அறிமுகப்படுத்தி, இந்நூல் தமிழைப் போல் எளிய நடையில் உள்ளதாகவும், சமூக,பொருளாதார, காதல், மாற்றுத் திறனாளி, குழந்தைகள் குறித்தும் கருத்து உள்ளதாகக் கூறினார்.

முனைவர் வாசுகி, முனைவர் உ. அனார்கலி, வாசகர்கள் சப்ராபீபீ, பாஸ்கரன், கவிஞர் முருகேசன் வாழ்த்திப் பேசினர். ஆசிரியர்கள் சதாசிவம், கோவிந்தராஜ், தங்கராஜ், கூட்டத்திகான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

வாசகர் ஜெயசீலன் நன்றி கூறினார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### பெண்களுக்குக் கிடைக்கவிருந்த அதிகாரத்தை தடுத்துவிட்டு வெற்றி என்பதா? - தமிழிசை கடும் தாக்கு



சென்னை தி.நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மயிலாப்பூர் பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது: தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களே, பெண்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்த்து வாக்களித்திருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. தமிழக முதல்வரிடம் நான் ஒரு நேரடி கேள்வியைக் கேட்கிறேன். பெண்களின் உரிமை மறுக்கப்பட்டதை வெற்றி என்று கொண்டாடுகிறீர்களே... இதுதான் உங்கள் திராவிட மாடல் வெற்றியா?

நாடாளுமன்றத்தில் பெண்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை முடக்கிவிட்டு, எதை வெற்றியாகக் கொண்டாடுகிறீர்கள்? இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு, பெண்களுக்குக் கிடைக்கவிருந்த அதிகாரத்தை வழிமறித்துத் தடுத்துள்ளது திமுக.

பெண்கள் சட்டமியற்றும் இடத்திலும், முடிவெடுக்கும் அதிகாரத்திலும் அமர வேண்டும் என்பது பிரதமர் மோடியின் கனவு. ஆனால், பெண்களின் அதிகாரம் தங்களுக்குக் கீழேதான் இருக்க வேண்டும் என்பது முதல்வர் ஸ்டாலினின் எண்ணம் என்றார்.

### சமூக நீதி அரசை வெற்றிகரமாக நடத்தும் ஸ்டாலின்: தேஜஸ்வி யாதவ் புகழாரம்

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் ஸ்டாலின் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த பிஹார் எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் கலந்து கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு புத்தர் சிலையை வழங்கினார்.

கூட்டத்தில் தேஜஸ்வி பேசியதாவது: தமிழ்நாட்டில் அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோர் அரசியலுக்கு இலக்கணமாக இருந்தவர்கள். அந்த வழியில் மு.க.ஸ்டாலின் சமூகநீதி அரசாங்கத்தை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார். ஜனநாயகம் என்பது தேர்தல் மட்டுமல்ல. அரசாங்கம் எப்போதும் ஏழை, எளியவர்களுக்கானதாக இருக்க வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமைக்கு தமிழ்நாடு எடுத்துக்காட்டாக உள்ளது. தரமான கல்விக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னுதாரணமாக இருக்கிறது. கருணாநிதி, ஸ்டாலினின் அர்ப்பணிப்பு, அயராத முயற்சிகளால் இன்றைக்கு தமிழகம், இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக உள்ளது. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் தமிழகம் 2-ம் இடத்தில் உள்ளது. கல்வி, சுகாதாரம், தனிநபர் வருவாயில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. சமூகநீதி, சமூகக் கட்டமைப்பு மற்றும்மனிதநேயம் தான் அரசாங்கத்தின் அடிநாதம். மக்களவையில் கொண்டுவரப்பட்ட தொகுதி மறுவரையறை சட்டத்தை, அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆசியுடன் வெற்றிகரமாக தோற்கடித்துள்ளோம். இது நமது முக்கியமான வெற்றி. இவ்வாறு அவர் பேசினார்.

### திமுக - காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றி பெறும் - சோளிங்கரில் ராகுல் காந்தி பேச்சு

தமிழ்நாடு வளமான நாடாக வளர்ந்துள்ளது. சமூக நீதிக்கான நாடு தமிழ்நாடு. பாஜக தமிழகத்தை குறைத்து மதிப்பிடுகிறது.

இதற்கு, தமிழக மக்கள் பாடம் புகட்டுவார்கள். தமிழகத்தில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, கல்வி நிதி மற்றும் மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்டவற்றை தாமதப்படுத்தி வருகிறார்கள். நான் டில்லியில் உங்களுக்கான சேவகனாகவும் குரலாகவும் இருக்கிறேன். மோடி என்ன செய்தாலும் தமிழகத்தில் வெற்றி பெற முடியாது. திமுக - காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.

மோடி அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படுகிறார். ஏனென்றால், நரேந்திர மோடியின் நிதி அமைப்பை ட்ரம்ப் அறிவார். அதானிக்கும் மோடிக்கும் உள்ள தொடர்பை அவர் புரிந்துகொள்கிறார். அதேபோல நரேந்திர மோடி தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் கட்டுப்படுத்த நினைக்கிறார்.

அதற்காகத் தான் அவர் அதிமுக-வை தமிழ்நாட்டில் ஆட்சியில் அமர்த்த விரும்புகிறார். தற்போதைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரால் கட்டுப்படுத்த முடியாது என்று அவருக்குத் தெரியும். ஸ்டாலின் சுதந்திரமானவர், மோடியால் அவருக்கு அழுத்தம் கொடுக்க முடியாது"

இவ்வாறு அவர் பேசினார்.

## எடப்பாடி தொகுதியில் சுயேச்சை வேட்பாளருக்கு தவெக ஆதரவு: விஜய் அறிவிப்பு



எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சேலம் - எடப்பாடி தொகுதியில் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர் கூ.பிரேம்குமாரை ஆதரிப்பதாக தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட தகவல்: "என் நெஞ்சில் குடியிருக்கும் சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் கூ.பிரேம்குமார், நமது ரசிகர் மன்றத்தில் நிர்வாகியாகப் பயணித்தவர்தான். நம்முடைய சகோதரர்தான்.

எனவே, தற்போதைய சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நமது முன்னாள் நிர்வாகியான கூ.பிரேம்குமாரையும், அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டி சின்னத்தையும் நமது தமிழக வெற்றிக் கழகம் சார்பாக ஒருமனதாக ஆதரிக்க முடிவு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது முழு ஆதரவுடன் களம் காணும் நம் சகோதரர் கூ.பிரேம்குமாரை மனதளவில் நம்முடைய வேட்பாளராகக் கருதி, அவருக்குத் தேர்தல் ஆணையத்தால் அளிக்கப்பட்டுள்ள வரிசை எண் 12-இல் தொலைக்காட்சிப் பெட்டி சின்னத்தில் வாக்களிக்க வேண்டுகிறேன்.

நம் குடும்பத்தைச் சேர்ந்த அவரைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கழக நிர்வாகிகளையும் தோழர்களையும் எடப்பாடி தொகுதி மக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சின்னத்தை முடக்கி, குறுக்கு வழியில் வெற்றியடைய முயன்றவர்களுக்குச் சரியான பாடத்தைப் புகட்டும் விதத்தில் இவரது வெற்றி அமையட்டும்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

தவெக வேட்பாளர் வேட்புமனு நிராகரிப்பு:

முன்னதாக, சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டப்பேரவை தொகுதியில், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, திமுக வேட்பாளர் காசி, தவெக வேட்பாளர் அருண்குமார், நாதக வேட்பாளர் பிரியதர்ஷினி மற்றும் சுயேச்சைகள் உள்பட 36 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

வேட்பு மனு பரிசீலனையில் தவெக வேட்பாளர் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. எடப்பாடி தொகுதியில் தவெக சார்பில் வேட்பாளர் அருண்குமார் மற்றும் மாற்று வேட்பாளராக அவரது மனைவி நித்யா ஆகியோர் மனு தாக்கல் செய்திருந்தனர்.

அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் வேட்பாளரின் வேட்புமனுவை அதே தொகுதியைச் சேர்ந்த 10 பேர் முன்மொழிய வேண்டும் என்று விதிமுறை உள்ளது.

ஆனால், தவெக வேட்பாளர் அருண்குமாரின் மனுவில் 8 பேர் மட்டுமே முன்மொழிந்திருந்தனர். எனவே, தவெக வேட்பாளர் அருண்குமாரின் மனுவை தள்ளுபடி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர் நடராஜன் உத்தரவிட்டார்.

திமுக மற்றும் அதிமுகவில் இருந்து விலகிய அருண்குமார், திடீரென தவெகவில் இணைந்து எடப்பாடி தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், அவர் தனது வேட்புமனுவை வேண்டுமென்றே கவனக்குறைவாக தாக்கல் செய்துவிட்டதாக அக்கட்சி நிர்வாகிகள் குற்றம் சாட்டினர். அவரது மனு நிராகரிக்கப்பட்டதால், தமிழகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் போட்டியிடும் எடப்பாடி தொகுதியில், தவெக போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. இந்தச் சூழலில் சுயேச்சை வேட்பாளரை தவெக ஆதரித்துள்ளது.

## விஜய் ஆதரவாளர்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம்: அன்புமணி



விஜய் ஆதரவாளர்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கடலூரில் அவர் அளித்த பேட்டியில், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை திமுகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் தோல்வியடைய வைத்துள்ளனர். இது பெண்களுக்கு திமுக செய்யும் மிகப் பெரிய துரோகம். பெண் சிசுவை கருவிலே கொன்றதற்கு ஈடான ஒரு செயலை திமுக செய்திருக்கிறது. மசோதா நகலை ஸ்டாலின் எரித்தது குறித்து தேர்தல் ஆணையம் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

மகளிர் மசோதாவை தோற்கடித்துவிட்டு ஸ்டாலின் பட்டாசு வெடித்துக் கொண்டாடுகிறார். மகளிர் மசோதாவை தடுத்ததோடு மட்டுமல்லாமல் அதை கொண்டாடுகின்ற முதல்வரை பார்த்திருக்கிறீர்களா?. இந்த மசோதா நிறைவேறியிருந்தால் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 59ஆக உயர்ந்திருக்கும். அதில் 20 பெண்கள் 2029 தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு செல்வார்கள். 2031 பேரவைத் தேர்தலிலும் 117 பெண்கள் சட்டப்பேரவைக்கு வருவார்கள். விஜய்யின் நோக்கமும் எங்கள் நோக்கமும் திமுகவை வீழ்த்த வேண்டும் என்பதுதான். விஜய் தேர்தலில் ஓரளவிற்கு வாக்குகள் பெறுவார். ஆனால் தேர்தலில் வெற்றி பெற முடியாது.

விஜய் ஆதரவாளர்களுக்கு அன்பான வேண்டுகோள் வைக்கிறேன். விஜய் ரசிகர்கள் விஜய்க்குத்தான் வாக்களிப்பார்கள். விஜய் ஆதரவாளர்கள் அதிமுக கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். அவர்கள் தங்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம். திமுக கூட்டணியை வீழ்த்த வேண்டுமென்றால் அதிமுக கூட்டணிக்கு வாக்களியுங்கள்.

அதன்மூலம் திமுக ஆட்சி அகற்றப்படும். உங்கள் நோக்கமும் வெற்றி பெறும். திமுக எதிர்க்கட்சியாகக்கூட வரக்கூடாது. அதுதான் எங்கள் நோக்கமும்கூட இவ்வாறு குறிப்பிட்டார்.

## "இப்படிப்பட்ட ஆளை கட்சியில் வைத்திருப்பதே தப்பாப் போச்சு: செங்கோட்டையன் தாக்கிய இபிஎஸ்



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் அதிமுக வேட்பாளர் பிரபுவை ஆதரித்து பழனிசாமி நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது: கோபிசெட்டிபாளையம் தொகுதியில் பிரபு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். நல்லவர், கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவர். இப்போது இருக்கும் எம்எல்ஏ மாதிரி திமிர் பிடித்தவர் இல்லை. இதுவரை அடிமையாக இருந்தீர்கள். இனிமேல் சுதந்திரக் காற்றை சுவாசிப்பீர்கள்.

இரட்டை இலைக்கு வாக்களியுங்கள். இங்கு எம்எல்ஏ-வாக இருப்பவர் பற்றி பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர், தானாக எம்எல்ஏ ஆகவில்லை. அதிமுக நிர்வாகிகள் உழைப்பால் எம்எல்ஏ ஆனார். கோபிசெட்டிபாளையத்தில் இருந்து ஒருவரைக் கூட என்னைப் பார்க்க விடமாட்டார். மோசமான குணம் படைத்தவர். பிறர் நல்ல சட்டை போட்டுக்கொண்டால் கூட பிடிக்காது, பொறுக்காது. செங்கோட்டையன் இருக்கும்வரை யாராவது நிம்மதியாக வாழ முடிந்ததா? அனைவரது மனைவியும், தனது கணவன் நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் முதல்வராக ஜெயலலிதா இருக்கும்போது அமைச்சராக இருந்த செங்கோட்டையனின் மனைவியும், மகனும் தலைமைச் செயலகம் வந்து புகார் கொடுத்தார்கள். அது, கேவலமான புகார். என்ன புகார் என்று தெரியும் உங்களுக்கு.

நான் அப்போது கீழே தான் இருந்தேன். ஜெயலலிதாவிடம் அவர்கள் பேசினார்கள். படிக்கட்டில் இருந்து இறங்கியதும் அவரை பதவியைவிட்டு இறக்கிவிட்டார். பிறகு என்னை அழைத்து "இப்படிப்பட்ட ஆளை கட்சியில் வைத்திருப்பதே தப்பாப் போச்சு. இவரெல்லாம் மோசமான மனிதர்" என்றார் ஜெயலலிதா. அப்படிப்பட்ட ஆளை நான் முதல்வராக இருந்தபோது அமைச்சராக்கியது எனது தப்பு. என்னுடைய அமைச்சரவையில் வந்து கெஞ்சிக் கண்ணீர் விட்டார் மனுஷன். இப்போது வாய்க்கொழுப்பில் பேசுகிறார். நீங்கள் வடித்த கண்ணீர் தெரியாதா? "நீங்கள் முதல்வராக இருக்கும்போது நீங்களே எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்றால் யார் கொடுப்பார்கள்" என்று கெஞ்சினார்.

## உடனே எம்.எல்.ஏவாக ஆகிவிடுவீர்களா? சுந்தர் சி-க்கு நடிகர் பிரகாஷ்ராஜ் கேள்வி



தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெறவுள்ளது. தேர்தல் பிரசாரம் வருகிற 21-ந்தேதி மாலையுடன் முடிவடைகிறது. சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 3 நாட்களே இருப்பதால் தலைவர்கள் சூறாவளியாக சுற்றுப்பயணம் செய்து தங்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்த நிலையில், மதுரையில் திமுக வேட்பாளர்களை ஆதரித்து நடிகர் பிரகாஷ்ராஜ் பிரசாரம் செய்தார். அப்போது மதுரை மத்தி தொகுதி அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர். சி-க்கு நடிகர் பிரகாஷ் ராஜ் அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்து பேசினார்.

அவர் கூறியதாவது:- "கலைஞர் கருணாநிதி இந்த நாட்டுக்கு செய்திருக்கிற பணி அதிகம், இந்த மக்களை நேசித்து நேசித்து வாழ்ந்தது அதிகம், இந்த மக்கள் மண்ணுக்காக வாழ்ந்தது அதிகம். இந்த மக்களுக்காக இன்றைக்கும் பேசுகிறேன் என்றால் நன்மை செய்பவர்களைத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் எந்த கட்சிக்காரனும் கிடையாது, நான் எம்.எல்.ஏ ஆக தேவையில்லை, எம்.பி ஆக தேவையில்லை.

வேட்பாளராக ஆக்கப்படுவதற்கு மூன்று நாட்கள் முன்பு வரை சினிமா சூட்டிங்கில் இருந்தீர்கள். எந்த அரசியல் பிரச்சினைகளுக்கோ அல்லது மதுரை மக்களுக்காகவோ குரல் கொடுக்காமல், வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் எம்.எல்.ஏ. ஆக வேண்டுமென வந்துவிட்டால்... மதுரை மக்கள் என்ன ஏமாளிகளா?

புதிய நீதிக்கட்சியில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்..? அதன் கொள்கை என்ன?. சினிமாவில் இயக்குநர் ஆவதற்கு எத்தனை விஷயங்களை கஷ்டப்பட்டு கற்றிருப்பீர்கள். ஆனால், எம்.எல்.ஏவாக மட்டும் உடனே ஆகிவிடுவீர்களா?.

உங்கள் மனைவி 10 வருடங்களாக அரசியல் செய்து கேள்விகளை கேட்கிறார். அவருக்கு கிடைக்காத சீட் உங்களுக்கு எப்படி கிடைத்தது என யோசிக்க மாட்டீர்களா?. இந்த சீரழிவை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## முதல்கட்ட தபால் வாக்குப் பதிவு விறுவிறுப்பு: நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்த போலீஸார்



சென்னையில் காவல் துறையினருக்கான தபால் வாக்குப் பதிவு நேற்று விறுவிறுப்பாக நடைபெற்றது. போலீஸார் நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.

சென்னை மாவட்ட எல்லைக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், தேர்தல் பணிக்காக காவலர்கள், ஊர்க் காவல் படையினர் உட்பட மொத்தம் 22,248 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 2 கட்டமாக தபால் வாக்குப் பதிவு செய்ய தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

அதன்படி, முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. இதற்காக, வில்லிவாக்கம், அண்ணாநகர், பெரம்பூர் உள்ளிட்ட 16 தொகுதிகளிலும் தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தில் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காவலர்கள் அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்து ஆர்வத்துடன் வாக்களித்தனர். இந்த நடைமுறைகள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்றதோடு, வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய, முழுமையாக சிசிடிவி கேமராக்கள் மூலமாகவும் பதிவு செய்யப்பட்டன. விடுபட்ட காவலர்களுக்கான 2-ம் கட்ட தபால் வாககுப்பதிவு நாளை (20-ம் தேதி) நடைபெற உள்ளது. "தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள் 100 சதவீதம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும். யாரும் விடுபடாமல் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டும்" என்று சென்னை மாநகரக் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் வலியுறுத்தியுள்ளார்.

## பாலியல் அத்துமீறல்: அண்ணாமலை கண்டனம்

கரூர், ஏப்.20:

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:-

கரூர் மாவட்டம் குளித்தலையில், வீட்டின் வெளியே துணிகளை உலர வைத்துக் கொண்டிருந்த பெண்ணிடம், மது போதையில் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டிருக்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் பிரகாஷ் என்ற நபர்.

திமுகவும், அதன் கூட்டணிக் கட்சிகளும், பாலியல் குற்றவாளிகளின் கூடாரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பதை விட, அவர்களைக் காப்பாற்றுவதில்தான் திமுக அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

இதனால், வீட்டுக்குள் அத்துமீறி பாலியல் தாக்குதல் நடத்தும் அளவுக்கு சமூக விரோதிகளுக்கு, சட்டத்தின் மீதும், காவல்துறையின் மீதும் எந்த பயமும் இல்லாமல் போய்விட்டது.

நமது வீட்டுப் பெண்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால், வரும் தேர்தலில், திமுக ஆட்சி நிச்சயம் அகற்றப்பட்டே ஆகவேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மே 11-ந் தேதி ராமநாதபுரம் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை

ராமநாதபுரம், ஏப்.20:

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங்காலோன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பொது (பல்வகை) துறை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.154 பொது (பல்வகை)த் துறை நாள்: 03.09.2020-ன்படி, ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமத்தில், ஏர்வாடி தர்ஹாவில் அமைந்துள்ள அல்குத்துபுல் அக்தாப் சுல்தான் செய்யது இபுராஹீம் ஷாஹித் ஒலியுல்லா தர்ஹாவில் சந்தனக்கூடு திருவிழா 10.05.2026 பிற்பகல் தொடங்கி 11.05.2026 பிற்பகல் வரை நடைபெறுகிறது.

இதை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்திற்கு எதிர்வரும் 11.05.2026 திங்கள்கிழமை அன்று ஒருநாள் மட்டும் "உள்ளூர் விடுமுறை" அளித்தும், அதனை ஈடு செய்யும் பொருட்டு 23.05.2026 அன்று சனிக்கிழமை வேலைநாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், 11.05.2026 திங்கள்கிழமை அன்று ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சார்நிலை கருவூலகங்கள் அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறைந்தபட்ச பணியாளர்களோடு செயல்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் முருகன் கோவிலில் குவிந்த பக்தர்கள்.. 3 மணி காத்திருந்து சாமி தரிசனம்

திருச்செந்தூர், ஏப்.20:



அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். பொதுவாக விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் விழா நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், கார்களிலும் வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

அந்த வகையில் ஞாயிறு விடுமுறை தினமான கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைப் பெருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்

டேராடூன், ஏப்.20:



மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரைத் திருவிழா இன்று(ஏப். 19) காலை கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. ஆயிரகணக்காக பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான சித்திரைத் திருவிழா ஆண்டு தோறும் வெகுவிமர்சையாக கொண்டாப்பட்டு வருகிறது.

விழாவில் முக்கிய நிகழ்ச்சிகளான மீனாட்சியம்மன் திருக்கல்யாணம், அழகரின் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவத்தைக்காண பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள், மதுரையில் கூடுவார்கள்.

அந்த வகையில் சிறப்பு பெற்ற மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா இன்று காலை சுவாமி சந்நிதி முன்பாக உள்ள தங்க கொடிமரத்தில் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் வெகுவிமர்சையாக தொடங்கியது. முன்னதாக கொடிமரம் முன்பு மீனாட்சி, சுந்தரேஸ்வரர் பிரியாவிடையுடன் எழுந்தருள, சிறப்பு பூஜைகளைத் தொடர்ந்து, மங்கள வாத்தியங்கள் வேதமந்திரங்கள் முழங்கிட இன்று காலை 10.35 மணிக்கு மேல் 10.59 மணிக்குள் மிதுன லக்னத்தில் கொடி ஏற்றம் நடைபெற்றது. சித்திரை திருவிழா துவங்கியுள்ள நிலையில் அம்மனும் சுவாமியும் தினமும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் மீனாட்சி சுந்தரேசுவரர் பிரியாவிடையுடனும், மீனாட்சி அம்மன் தனியாகவும் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாசி வீதிகளில வலம் வருவர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் வருகிற 26-ஆம் தேதியும், திக்கு விஜயம் 27-ஆம் தேதியும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் 28-ஆம் தேதியும், தேரோட்டம் 29-ஆம் தேதியும், தீர்த்தவாரி 30-ஆம் தேதியும் நடைபெறும்.

# பரமத்திவேலூர் பேட்டை புது மாரியம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை

பரமத்தி வேலூர், ஏப்.20:



நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பேட்டையில் உள்ள புது மாரியம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. கடந்த 15 மற்றும் 16 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை லலிதா ரஹஸ்ய சகஸ்ர நாம லட்சார்ச்சனை நடைபெற்றது.

17ஆம் தேதி காலை 7 மணிக்கு 108 கலச பூஜையும், காலை 10 மணிக்கு சிறப்பு அபிஷேகமும், 11 மணிக்கு மகா ஆராதனை, தீபா ஆராதனை, பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும், மாலை 5 மணிக்கு திரிசதி அர்ச்சனையும் நடைபெற்றது. மாலை 6.30 மணிக்கு திருவிளக்கு பூஜையும் நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு திருவிளக்கு ஏற்றி வழிபட்டனர். சனிக்கிழமை காலை 7 மணி முதல் 11 மணி வரை மகாலட்சுமி அம்சமான வலம்புரி மற்றும் மகாவிஷ்ணு அம்சமான இடம்புரி சங்கு அபிஷேகமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு சப்தசதி பாராயணம் நடைபெற்றது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கணபதி பூஜை, தீப பூஜை, கலச பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சண்டிகா பரமேஸ்வரி ஹோமம் நடைபெற்றது.






## நலம் தரும் மருத்துவம்

### வயிற்றுப்போக்கா?: பாட்டி வைத்தியம்

வயிற்றுப்போக்கு என்பது ஒரு நாளைக்கு மூன்று, நான்கு முறைக்கு மேல் நீர் போன்ற மலத்தை வெளியேற்றும் ஒரு பொதுவான செரிமான கோளாறாகும். இதை பேதி, வயிற்றுக்கழிச்சல், டயரியா என்று பல பெயர்களில் குறிப்பிடுவது வழக்கம். இது பொதுவாக வைரஸ், பாக்டீரியா தொற்று அல்லது அசுத்தமான உணவு/ நீரால் ஏற்படுகிறது. வயிற்று வலி, குமட்டல், வாந்தி மற்றும் நீரிழப்பு ஆகியவை இதன் பொதுவான அறிகுறிகளாகும்.

வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்கு சிறந்த பாட்டி வைத்தியங்கள் சில உள்ளன. அவற்றை இப்பொழுது காணலாம்.

* பொட்டாசியம் மற்றும் பெக்டின் (PECTIN) சத்துக்கள் நிறைந்த கனிந்த வாழைப்பழம் ஒன்றை சாப்பிட, மலத்தை இறுகச் செய்து வயிற்றுப்போக்கை நிறுத்தும்.

* ஒரு துண்டு இஞ்சியை தோல் சீவி நன்கு தட்டி, தேன் கலந்து சாப்பிடுவது அல்லது இஞ்சியை தட்டி ஒரு கப் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து சிறிது ஆறியதும் அந்த தண்ணீரை குடிப்பது செரிமான அமைப்பை சரிப்படுத்தி வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கை நிறுத்தும்.

* தயிர் மற்றும் மோரில் உள்ள புரோபயாடிக்குகள் (PROBIOTICS) குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை அதிகரித்து, தொற்றை எதிர்த்து வயிற்றுப்போக்கை விரைவில் கட்டுப்படுத்தும்.

* மாதுளை பழத்தின் சாறை பருக நல்ல பலன் கிடைக்கும். அதேபோல் மாதுளையின் தோலை வெயிலில் நன்கு உலர்த்தி மிக்ஸியில் பொடி செய்து வைத்துக் கொண்டால், வயிற்றுப்போக்கு ஏற்படும் சமயம் இதனை சிறிது மோரில் கலந்து பருக வயிற்றுப்போக்கை உடனடியாக நிறுத்த உதவும்.

* மாங்கொட்டையை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து நன்கு ஊற விட்டு, வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும். நன்கு காய்ந்ததும் மாங்கொட்டையின் உள்ளிருக்கும் பருப்பை தட்டி மிக்சியில் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனை வயிற்றுப்போக்கு ஏற்படும் சமயம் ஒரு ஸ்பூன் அளவு அரை கப் மோரில் கலந்து பருக வயிற்றுப்போக்கு உடனடியாக நிற்கும்.

* வறுத்து பொடித்த சீரகப் பொடியை வெதுவெதுப்பான தண்ணீர் கலந்து குடிப்பது, வயிற்று உப்புசத்தை போக்கி, செரிமானத்தை மேம்படுத்தி வயிற்றுப்போக்கை குறைக்கும்.

* வெந்தயத்தை வெறும் வாணலியில் போட்டு நன்கு வறுத்து, சிறிது ஆறியதும் மிக்சியில் பொடித்து வைத்துக் கொள்ளவும். தேவைப்படும் சமயம் ஒரு ஸ்பூன் வெந்தய பொடியை அதிகம் புளிப்பில்லாத அரை கப் மோர் அல்லது தண்ணீரில் கலந்து பருக வயிற்றுப்போக்கை உடனடியாக நிறுத்தி விடும்.

* அரிசிக் கஞ்சி குடிப்பது உடலில் நீர்ச்சத்தை நிலை நிறுத்தி மலத்தை இறுக்கவும் செய்யும்.

# ஒரு சொட்டு எண்ணெய் இல்லாமல் சமையல் செய்யலாம்... சாப்பிடலாம்...

எண்ணெயில் பொரித்த பலகாரங்கள் மற்றும் கறி வகைகள் என்றால் நமக்கெல்லாம் எப்போதுமே கொள்ளைப் பிரியம் தான். ஆனால் உடல் எடையை குறைக்கவும் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் நினைக்கும்போது அந்த ஆசையை நாம் கஷ்டப்பட்டு அடக்கி வைத்துக்கொள்கிறோம்.

இனிமேல் அப்படி ஒரு கவலையே உங்களுக்கு வேண்டாம். நாம் வழக்கமாக பயன்படுத்தும் எண்ணெயில் ஒரு சிறு துளி மட்டும் சேர்த்து, வழக்கம் போல மொறுமொறுப்பான பிரெஞ்ச் பிரைஸ், கபாப் மற்றும் வறுவல்களைச் சாப்பிட ஒரு அற்புதமான சாதனம் மார்க்கெட்டில் கிடைக்கிறது.

அதுதான் அமேசானில் கடந்த மாதம் மட்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களால் வாங்கப்பட்ட பிஜியன் ஹெல்திஃப்ரை



டிஜிட்டல் ஏர் பிரையர் (PIGEON HEALTHIFRY DIGITAL AIR FRYER). இந்த சாதனம் எப்படி உங்களின் சமையலறையை ஒரு ஸ்மார்ட் கிச்சனாக மாற்றுகிறது என்பதைப் பற்றி இப்போது பார்ப்போம்.

இது கடைகளில் கிடைக்கும் சாதாரண ஏர் பிரையர் கிடையாது. இதில் உள்ள 360 டிகிரி அதிவேக காற்று சுழற்சி தொழில்நுட்பம், உணவின் அனைத்துப் பக்கங்களிலும் சூடான காற்றைப் பரவச் செய்து கிரிஸ்பியாக மாற்றிவிடுகிறது. இதற்கு நீங்கள் ஒரு ஸ்பூன் எண்ணெய் பயன்படுத்தினாலே போதுமானது. அதாவது வழக்கமாகச் செலவாகும் எண்ணெயில் 85 சதவீதத்தை இது சுலபமாக மிச்சப்படுத்துகிறது.

மேலும் இதில் 1200 வாட்ஸ் பவர் கொடுக்கப்பட்டுள்ளதால், சாதனம் சீக்கிரமாகவே சூடாகி உங்களின் சமையல் நேரத்தைப் பாதியாகக் குறைத்துவிடுகிறது. 80 டிகிரி முதல் 200 டிகிரி வரை இதில் வெப்பத்தை நாமே தொடுதிரை மூலம் ஈஸியாக செட் செய்துகொள்ளலாம்.

இதன் கொள்ளளவு 4.2 லிட்டர் என்பதால், ஒரு நடுத்தர குடும்பத்திற்குத் தேவையான ஸ்நாக்ஸை ஒரே முறையில் சுலபமாகச் செய்துவிட முடியும். உள்ளே இருக்கும் கூடை முழுவதும் தரமான நான்-ஸ்டிக் கோட்டிங் செய்யப்பட்டிருப்பதால், உணவுகள் அடியில் ஒட்டிக்கொள்ளும் என்ற டென்ஷனே உங்களுக்கு இருக்காது. அதேபோல சமைத்து முடித்தவுடன் இதை சுத்தம் செய்வதும் ஈஸியான ஒரு வேலை தான். இதிலுள்ள மிக முக்கியமான ஒரு சிறப்பம்சம் இதன் அப்பாயிண்ட்மென்ட் பங்க்ஷன் தான். இந்த டிஜிட்டல் டைமரை செட் செய்துவிட்டால், அதுவே உணவைச் சரியான பதத்தில் சமைத்துச் சூடாக வைத்திருக்கும்.

இவ்வளவு நவீன வசதிகள் கொண்ட இந்த பிரீமியம் சாதனம் அமேசானில் கம்மி விலையில் கிடைக்கிறது. இதன் அசல் விலை கிட்டத்தட்ட ஆறாயிரம் ரூபாய் என்றாலும், இப்போது 48 சதவீத பிரம்மாண்டமான தள்ளுபடியில் வெறும் 3099 ரூபாய்க்கு இது விற்பனை செய்யப்படுகிறது.



இதுமட்டுமில்லாமல் கருப்பு நிற டிஜிட்டல் மாடல் வெறும் 2799 ரூபாய்க்கும், பச்சை நிற மேனுவல் மாடல் 2699 ரூபாய்க்கும் கிடைக்கிறது. இரண்டு வருட வாரண்டியுடன் வரும் இந்த கேஜெட்டை வாங்க பல பேங்க் கார்டுகளுக்கு எக்ஸ்ட்ரா கேஷ்பேக் ஆஃபர்களும் இஎம்ஐ வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.

சலுகைகள் முடிவதற்கு முன்பாகவே அமேசானில் இந்த அட்டகாசமான ஏர் பிரையரை ஆர்டர் செய்து உங்களின் ஆரோக்கியமான உணவுப் பயணத்தை உடனே தொடங்குங்கள்.

# பழைய பொருட்கள்... புதிய காதல்




அப்பார்ட்மெண்டில் ஒரு சுவாரசியம்!

அடுக்குமாடி குடியிருப்பு வாழ்க்கை என்றாலே இயந்திரத்தனமானது என்ற பிம்பம் உண்டு. ஆனால், அங்குள்ள ஒவ்வொரு கதவுக்கும் பின்னால் ஒரு கதை ஒளிந்திருக்கும். அப்படி ஒரு சுவாரசியமான கதைதான் இது.

பழைய பொருட்களை வாங்கி, அதைச் சீர் செய்து புதுப்பிப்பதில் தீராத ஆர்வம் கொண்டவர் அந்த வாலிபர். ஒருநாள், ஆன்லைன் தளத்தில் பார்த்த பழைய தேக்கு மர மேஜை ஒன்றை விலைக்கு வாங்கினார். அந்த மேஜையைச் சுத்தம் செய்தபோது, அதன் ரகசிய அறை ஒன்றில் ஒரு பழைய டைரி மற்றும் சில புகைப்படங்கள் இருப்பதைக் கண்டார்.

அந்த டைரியில் இருந்த கவிதைகளும், ஒரு பெண்ணைப் பற்றிய வர்ணனைகளும் மிக உருக்கமாக இருந்தன. "யார் அந்தப் பெண்? ஏன் இந்த டைரி இங்கே இருக்கிறது?" என்ற தேடல் அவரிடம் தொடங்கியது. சுவாரசியம் என்னவென்றால், அந்த மேஜையின் பழைய உரிமையாளர் அதே அப்பார்ட்மெண்டின் மேல் தளத்தில் வசிக்கும் ஒரு பெரியவர்

தற்செயலாக அந்தப் பெரியவரின் பேத்தி, "தாத்தாவிற்குத் தெரியாமல் அந்த மேஜையை விற்றுவிட்டோம், அதை மீண்டும் வாங்க முடியுமா?" என்று வாலிபரைத் தேடி வந்தாள். பழைய டைரியின் மூலம் அந்தப் பெண்ணின் குடும்பப் பின்னணியையும், அவள் தாத்தாவின் காதலையும் ஏற்கனவே அறிந்திருந்த வாலிபருக்கு, அந்தப் பெண் மீது ஒரு இனம் புரியாத ஈர்ப்பு ஏற்பட்டது. பொருட்கள் வேண்டுமானால் 'செகண்ட் ஹேண்ட்' (SECOND HAND) ஆக இருக்கலாம், ஆனால் அதன் வழியே மலர்ந்த அந்த அன்பு புத்தம் புதியதாக இருந்தது.

ஒரு பழைய மேஜை, இரு வேறு இதயங்களை இணைக்கும் பாலமாக மாறியது.

நாம் தூக்கி எறியும் பழைய பொருட்களுக்குப் பின்னாலும் ஒரு அழகான ஆன்மா இருக்கக்கூடும். தேடிப் பார்த்தால் காதலும் கிடைக்கும்!

-லால்குடி வெ.நாராயணன்

# "மின் விளக்கு"



புற நகர்ப் பகுதியிலிருந்த அந்த மின்விளக்கு, தினமும் ஆறரை மணிக்கு ஒளிரும். அதன் கீழே, தினமும் ஒரு சிறுவன் உட்கார்ந்து படிப்பான்.

பலர் அப்பாதையைக் கடந்து சென்றாலும் யாரும் அவனை கவனிக்க மாட்டார்கள்.

அவ்வழியாக தினமும் பைக்கில் செல்லும் ஐ.டி.ஊழியர் குமார், அந்த இடத்திற்கு வந்ததும் தன் பைக்கின் வேகத்தை மட்டுப்படுத்தி சிறுவனை ஒரு பார்வை பார்த்து விட்டுச் செல்வார்.

ஒரு நாள் இரவு, நல்ல மழை.
அந்த மின்விளக்கு திடீரென அணைந்து போனது.
அவ்வழியாக வந்த குமார் அந்த இடம் காலியாக இருப்பதைக் கண்டு யோசனையுடன் கடந்தார்.

தொடர்ந்து சில நாட்கள் அந்த மின் விளக்கும் எரியவில்லை. சிறுவனும் படிக்கவில்லை.

குமார் உள்ளம் நொந்தார்.

பத்து நாட்களுக்குப் பிறகு,
அருகில் இருந்த டீக்கடையில் குமார் விசாரிக்க, "அந்தப் பையனா?... அவன் வீட்டுல மின்சார வசதியில்லி... ரோட்டு லைட்டுலதான் படிச்சிட்டிருந்தான்.. இது எரியாமப் போனதிலிருந்து அவன் படிப்பை விட்டுட்டு... வேலைக்குப் போயிட்டான்னு கேள்வி...” என்றார்.

அந்த வார்த்தை குமாரை உலுக்கியது.

நேரே மின்சார அலுவலகத்துக்கே போனார்.

"உடனே ஆகாது சாமி... லைட் வேணும்னு கேட்டிருக்கோம் வந்ததும் போடுவோம்" என்று பதில் வந்தது.

"அதான் எப்ப வரும்?"குமார் கேட்டார்.

"சொல்ல முடியாது... ரெண்டு மாசம் ஆனாலும் ஆகும்... ஆறு மாசம் ஆனாலும் ஆகும்" ஆத்திரமான குமார், சோலார் சிஸ்டம் கம்பெனியில் வேலை பார்க்கும் தன் நண்பன் சிவாவை அணுகி,
அடுத்த நாளே அங்கு ஒரு சோலார் லைட்டை தன் சொந்த செலவில் நிறுவினார்.
அடுத்த நாள், சிறுவன் மீண்டும் வந்தான், கையில் புத்தகத்துடன்.

குமாரின் செயலைப் பாராட்டிய சிவா,
" "குமார்... சில நேரங்களில் நாம் ஏற்றும் சிறிய ஒளி... ஒருவரின் முழு வாழ்க்கையையும் வெளிச்சமாக்கும்'" என்றான்.

-முகில் தினகரன்
கோயமுத்தூர்

# திருவிளையாடல் புராணம் 31



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## உலவாக்கிழி அருளிய படலம்

திருவிளையாடல் புராணத்தின் 31-வது படலமாகும். இது கூடல் காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தப் படலத்தில், மன்னன் குலபூஷண பாண்டியன் சிவபெருமானின் பக்தனாக இருந்தும், அவனுக்கு ஏற்பட்ட அகந்தையினால், சிவபெருமான் அவனுக்கு அறிவு புகட்டிய நிகழ்வு விவரிக்கப்படுகிறது.

குலபூஷண பாண்டியன் சிவபக்தியில் சிறந்தவனாக இருந்தான். தன்நாட்டு மக்களை கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தான். இதனால் அவனுக்கு தன்னைவிடச் சிறந்தவன் யாரும் இல்லை என்ற அகந்தை உருவானது.
இதனால் இறைவனார் குலபூஷண பாண்டியனின் அகந்தை அளித்து அவனுக்கு நற்கதி அளிக்க எண்ணினார். குலபூஷண பாண்டியனின் அகந்தை காரணமாக மதுரையில் மழை பொய்த்தது. தண்ணீர் இல்லாமல் பயிர்கள் சரிவர விளைச்சலைத் தரவில்லை. இதனால் மதுரை மக்களை பசித்துயர் வாட்டியது.



இதனைக் கண்ட குலபூஷண பாண்டியன் திருக்கோவிலை அடைந்து இறைவனிடம் “நான் தவறாது சிவவழிபாட்டினை மேற்கொண்டு வருகிறேன். மக்களையும் நல்ல முறையில் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்கிறேன். ஆனால் மதுரையில் மழைப்பொழிவு குறைந்ததால் பயிர்கள் சரிவர விளையவில்லை. மக்கள் பசியால் வருந்துகின்றனர். ஆதலால் தாங்கள் எங்களுக்கு நல்வழி காட்டுங்கள்” என்று மனமுருக வேண்டினான். பின் அரண்மனையை அடைந்து பணிகளைக் கவனித்து இரவில் தூங்கச் சென்றான். தூக்கத்திலும் குலபூஷண பாண்டியன் இறைவனை வேண்டினான். அவனது கனவில் தோன்றிய இறைவனார் “குலபூஷண பாண்டியா, இதோ இந்த உலவாக்கிழியைப் பெற்றுக் கொள். இதிலிருந்து அள்ள அள்ளக் குறையாத பொற்காசுகளை எடுத்து மதுரை மக்களின் துயரினைப் போக்கு.” என்று கூறினார்.
கண் விழித்த குலபூஷண பாண்டியன் தன் கையில் உலவாக்கிழி இருப்பதைக் கண்டான். உலவாக்கிழியை பார்த்ததும் குலபூஷண பாண்டியனின் மனதில் மழை இல்லாமல் போனதற்கான காரணம் மற்றும் மக்களின் துயர் எதற்கு ஏற்பட்டது என்ற எண்ணம் ஏற்பட்டது. பின்னர் களைப்பில் மீண்டும் தூங்கினான். அப்போது அவன் கனவில் தோன்றி சோமசுந்தரர் “குலபூஷண பாண்டியா, நீ என்னை காலந்தவறாமல் வழிபடுகிறாய். உன் மக்களை நன்கு பாதுகாக்கிறாய். ஆனால் உனக்கு உன்னைவிட சிறந்த பக்தன் உலகில் இல்லை என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அந்த அகந்தையே மதுரையில் மழை இல்லாமல் போனதற்கும், மக்களின் துயருக்கும் காரணம் ஆகும். உன்னுடைய அகந்தையால் உன்னுடைய மக்களும் துன்பமடைந்தனர்” என்று கூறினார்.
குலபூஷண பாண்டியன் கண்விழித்து தன்னுடைய தவறிற்கான காரணத்தை அறிந்ததும் அவனுடைய அகந்தை அழிந்தது. உலவாக்கிழியில் இருந்த பொற்காசுகளை எல்லோருக்கும் வழங்கினான்.
பின்னர் மதுரையில் மழை பொழிந்து மக்களின் துயர் நீங்கியது. இறுதியில் குலபூஷண பாண்டியன் இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தான்.
அகந்தை என்றைக்கும் துயரினைக் கொடுக்கும். ஆதலால் தான் சிறந்தவன் என்ற அகந்தை யாருக்கும் ஏற்படக்கூடாது என்பதே உலவாகிழி அருளிய படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# காகங்கள் தலையைத் திருப்பி ஒரு கண்ணால் பார்ப்பது ஏன் தெரியுமா?

எல்லோரும் காகங்களை அன்றாடம் பார்க்கிறோம். அவை, ஒரு இடத்தில் அமர்ந்து இரையைத் தேடும்பொழுதோ அல்லது உற்று கவனிக்கும் பொழுதோ தலையை ஒரு பக்கமாக சாய்த்துதான் பார்க்கும். அதனால் காகத்திற்கு ஒரு பக்கக் கண் தெரியாது என்று பலரும் நினைக்கிறோம். அப்படி அல்ல. காகங்களுக்கு இரண்டு கண்களிலும் பார்வை உண்டு. ஆனால், அவற்றுக்கு நம்மைப் போல் ஒரு பொருளை இரு கண்கள் கொண்டு பார்க்கும் ஆற்றல் கிடையாது. ஒரு கண்ணால்தான் அவற்றால் பார்க்க முடியும். எதனால் அப்படி? இதற்கு ஒரு பின்னணி கதை உண்டு.

ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர் மூன்று பேரும் வனவாச காலத்தில் இருந்தபொழுது, சித்ரகூடத்தில், சித்தாஸ்ரம பகுதியில் குடிலமைத்துத் தங்கியிருந்தனர். ஒரு நாள் சீதை, "இன்று என்ன நாள் என்று ஞாபகம் இருக்கிறதா?" என்று ஸ்ரீராமரிடம் கேட்டாள்.

"இல்லையே சீதா... எனக்கு ஞாபகம் இல்லை."
"இன்றுடன் நாம் வனவாசம் வந்து ஏழு வருடங்கள் முடிந்து விட்டன."

"அப்படியா? மனதுக்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கிறது. பாக்கி ஏழு வருடங்களையும் சுலபமாக நாம் கழித்து விடலாம் இல்லையா? நாம் இருவரும் ஏகாந்தமாய் சற்று நேரம் நதியோரத்தில் அமர்ந்திருக்கலாம் வா" என்றார் ராமபிரான். இருவரும் மந்தாகினி நதியின் கரையோரத்திற்கு வந்தனர். ராமர் சீதையின் மடியில் தலையை வைத்து படுத்துக்கொண்டார். களைப்பினால் தன்னை அறியாமல் உறங்கியே போனார். அப்பொழுது அங்கு ஒரு காகம் வட்டம் இட்டுக் கொண்டிருந்தது. சீதா பிராட்டியின் அருகே அடிக்கடி வந்து போனது. கைகளால் அந்த காக்கையை விரட்டினாள் சீதை. ஆனால், மீண்டும் மீண்டும் அவள் அருகே வந்த காக்கை, அவள் மார்பை ஒரு முறை கொத்தியது. பிராட்டி விரட்டினாள். மீண்டும் வந்து கொத்தியது. மீண்டும் விரட்டினாள். இரண்டு மூன்று முறைகள் ஆன பொழுது உறங்கிக் கொண்டிருந்த ஸ்ரீராமர் சற்று நெளிந்தார்.

தன்னால் ராமருக்கு உறக்கம் கெட்டுவிடப் போகிறதே என்று நினைத்த சீதா மாதா, காகம் கொத்தினால் கொத்தட்டும் என்றபடி பேசாமல் இருந்து விட்டாள். தொடர்ந்து காகம் கொத்தியதால் அவள் மார்பில் இருந்து இரத்தம் கசிய ஆரம்பித்துவிட்டது. கசிந்த இரத்தம் உறக்கத்திலிருந்து ராமரின் மேல் விழுந்தது. சட்டென்று ஏதோ ஒரு திரவம் பட்ட நிலையில் ராமர் விழித்துப் பார்த்தபொழுது அந்த காகம் சீதா மாதாவை கொத்திக் கொண்டிருந்தது தெரிந்தது. பொறுப்பாரா எம்பெருமான்?

தர்பாசனத்தில் இருந்து ஒரு புல்லை உருவினார். பிரம்மாஸ்திர மந்திரத்தை ஜபித்து அந்தக் காகத்தின் மேல் ஏவினார். பிரம்மாஸ்திரம் காகத்தைத் துரத்தியது. என்ன செய்வதென்று தெரியாமல் காக்கை மூவுலகங்களிலும் சஞ்சாரம் செய்து தனக்கு அடைக்கலம் தேடியது. கடைசியாக இந்திர லோகத்தில் சசி தேவியானவள், நடந்த விபரங்களைக் காக்கையிடம் கேட்டபொழுது, தனது மகனான ஜயந்தனே காக்கை வடிவில் காகாசுரனாக மாறி உலகிற்கு படியளக்கும் லட்சுமி தேவியின் அம்சமான சீதா பிராட்டிக்கே அபச்சாரம் செய்து விட்டான் என்று அறிந்தபொழுது, துடித்தாள்.

"நீ தகாத செயல் செய்ததற்கு மடிவதைத் தவிர வேறு வழியில்லை. பிரம்மாஸ்திரம் என்பது ஏவப்பட்ட பின் இலக்கை எட்டிய பிறகுதான் செலுத்தியவரிடம் வந்து சேரும். செலுத்தியவர் சாதாரண மனிதர் அல்ல. ஸ்ரீ ராமபிரான். மகாவிஷ்ணுவின் அம்சமானவர். அந்த அஸ்திரம் உன்னை தாக்காமல் விடாது. நீ அவரிடமே சரணடைந்துவிடு" என்றாள். காகாசுரன் படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு ராமரும் சீதையும் இருக்கும் இடத்தில், ”தாயே என்னை மன்னித்து விடுங்கள். காப்பாற்றுங்கள்” என்று கதறியபடி தரையில் விழுந்தான்.



கீழே விழுந்தபோது தனது காலடிகளை நோக்கி காகாசுரனின் தலை இருப்பதைக் கண்ட சீதை, அத்தலையை ராமனின் திருப்பாதங்களை நோக்கி திருப்பி வைத்து, அவனை மன்னித்து விடும்படி கூறினாள்.

"உன்னை மன்னித்தேன் காகாசுரனே. ஏவிய பிரம்மாஸ்திரத்தை, இட்ட பணியை செய்து முடிக்காமல் திரும்பிப் பெறும் வாய்ப்பு இல்லை. என்னால் கொடுத்த தண்டனையை வேண்டுமானால் எளிமைப்படுத்த முடியும். அதை வேண்டுமானால் செய்கிறேன்" என்று கூறிவிட்டு, " என்னவளை இரண்டு கண்களாலும் பார்த்துதானே சித்திரவதை செய்தாய்? இனி இரண்டு கண்களாலும் உன்னால் தீர்க்கமாகப் பார்க்க முடியாது. ஒரு கண் உனக்கு பின்னமாகப் போகட்டும்" என்று கூறினார். அந்த பிரம்மாஸ்திரம் காகாசுரனின் ஒரு கண்ணை சேதப்படுத்தியது. அதனால் ஒரு கண்ணில் பார்வை இருந்தும் இல்லாதது போல் ஆனது.

இந்த காரணத்தினால்தான் காகங்களுக்கு இரண்டு கண்களாலும் ஒரு பொருளை ஒரே சமயத்தில் பார்க்கும் சக்தி கிடையாது. ஒரு கண்ணால் மட்டுமே தீர்க்கமாகப் பார்க்க முடியும்.

ஜெய் ஸ்ரீராம்!



**ப.கோபிபச்சமுத்து,**
பாரதியார் நகர்,
புதுப்பேட்டை
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# ஷேக் பிஹ்காரி வரலாறு

ஜார்கண்டின் சோட்டாநாக்பூர் பகுதி, ஒரு துணிச்சலான இந்தியரான ஷேக் பிஹ்காரியின் பிறப்பிடமாகும், அவர் தனது மக்களுக்காகப் பேசியதற்காக ஆங்கிலேயர்களின் அட்டூழியங்களை எதிர்கொண்டார், இறுதியாக, தூக்கு மேடையை எதிர்கொண்டார், ஆனாலும் அவர் தேசியக் கதையிலோ அல்லது நவீன இந்தியாவின் வரலாற்றுப் புத்தகங்களிலோ பாடப்படாமல் இருக்கிறார்.

ஷேக் பிகாரியின் தந்தை ஷேக் புலந்து, சிறிய சுதேச மாநிலமான அவுர்கரில் ஒரு போர்வீரராக இருந்தார். ஒரு காலத்தில் அவுர்கரின் இளவரசர் ஒரு மானின் பால் குடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். ஜார்க்கண்டின் பழங்குடி நல ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிவின்படி, ஷேக் புலந்து இளவரசருக்காக ஒரு பாலூட்டும் மானைப் பிடித்தார். ராணி மகிழ்ச்சியடைந்து, வருவாய் வசூலுக்காக ஷேக் புலந்துவுக்கு 12 கிராமங்களை பரிசாக அளித்தார்.

அவருக்கு வெகுமதியாக ஒரு அரச வாள் மற்றும் தலைப்பாகை வழங்கப்பட்டது. அந்த வாள் இன்னும் ஜாரியாகரில் (கோவிந்த்பூர்) கிடைக்கிறது, மேலும் விஜயதசமியின் போது ஊர்வலத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது. ஷேக் பிகாரி 1819 ஆம் ஆண்டு இன்றைய ஓர்மன்ஜி காவல் நிலையத்தில் அமைந்துள்ள குடியா (கோதயா) கிராமத்தில் பிறந்தார். 1857 ஆம் ஆண்டு நாட்டில் சுதந்திரப் போர் வெடித்தபோது அவருக்கு 38 வயது. அவர் மிகவும் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான நபராக இருந்தார், மேலும் ஓர்மன்ஜி கட்டங்காவின் ராஜா திகாயித் உம்ராவ் சிங்கால் திவானாக நியமிக்கப்பட்டார். அவர் அனைத்து சமூகங்களிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்ட பர்காகர்-ஹட்டியாவைச் சேர்ந்த தாக்கூர் விஸ்வநாத் ஷாஹி நிறுவிய ஒரு தன்னார்வ அமைப்பான முக்திவாஹினியின் உறுப்பினராகவும் இருந்தார்.

1857 ஆம் ஆண்டு கலகத்தில் ராஜா உம்ராவ் சிங், அவரது தம்பி கன்சி சிங் மற்றும் அவர்களது திவான் ஷேக் பிகாரி ஆகியோர் காட்டிய மதிப்பு ஓர்மஞ்சி பகுதியில் நாட்டுப்புறக் கதையாகும். ஜூலை 31, 1857 அன்று ராஞ்சி மாவட்டத்தில் ஜமதார் மாதவ் சிங் மற்றும் சுபேதார் நாதிர் அலி கான் ஆகியோர் டோரண்டாவின் இராணுவத்தின் கிளர்ச்சியைத் தலைமை தாங்கினர்.


சுதுபாலு பள்ளத்தாக்கு மற்றும் ஓர்மன்ஜி ஆகியவை இந்தக் கிளர்ச்சியின் மையங்களாக இருந்தன. இராணுவ நடவடிக்கைகளில் திறமையான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட பிகாரி, சுபேதார் நாதிர் அலி மற்றும் ஜமாதர் மாதவ் சிங் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பில் பணியாற்றினார். பிரிட்டிஷ் கேப்டன் கிரஹாமும் அவரது மூன்று அதிகாரிகளும் ஹசாரிபாக் நோக்கி தப்பி ஓடினர், கிளர்ச்சியாளர்கள் அவர்களின் துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். இந்த துப்பாக்கிகளை ராஞ்சி நோக்கி திருப்பியவர் ஷேக் பிகாரி தான். ஆகஸ்ட் 2, 1857 அன்று, சுதுபாலுவின் இராணுவம் ராஞ்சி நகரத்தின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

சோட்டாநாக்பூர் ஆணையர், ET டால்டன் (டால்டோங்கஞ்ச் நகரம் அவரது பெயரிடப்பட்டது), மாவட்ட நீதிபதி டேவிஸ், நீதிபதி ஓகாஸ் மற்றும் பலாமு துணைப் பிரிவு அதிகாரி (SDO) பிரீச் ஆகியோர் பகோதருக்கு தப்பி ஓடினர். இதில், சாய்பாசா மற்றும் புருலியாவில் புரட்சியை நசுக்க ஆங்கிலேயர்கள் சீக்கிய வீரர்களின் உதவியை நாடினர். சீக்கிய வீரர்கள் செப்டம்பர் 2 முதல் செப்டம்பர் 4 வரை ஹசாரிபாக்கில் முகாமிட்டனர். இதற்கிடையில், ஷேக் பிகாரி ஹசாரிபாக்கை அடைந்தார், சீக்கிய இராணுவத்தின் மேஜர் பிஷன் சிங்கை அவர் வென்றார். இது சீக்கிய வீரர்கள் இந்திய புரட்சியாளர்களுடன் சேர வழிவகுத்தது. ஷேக் பிகாரி சந்தால் பர்கானாஸில் சந்தால் கிளர்ச்சிக்கு வழி வகுத்தார்.
1855 ஆம் ஆண்டில், சிடோவும் கன்ஹூவும் சந்தால் பர்கானாவில் கிளர்ச்சிக் கொடியை உயர்த்தினர்; அவர்கள் ஹசாரிபாக் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இருவரும் சிறையில் இறந்தனர். இருப்பினும், நாட்டுப்புறக் கதைகளின்படி, ஜூலை 30, 1857 அன்று, புரட்சியாளர்கள் ஹசாரிபாக் சிறைச்சாலையின் சுவரை உடைத்து சிடோவையும் கன்ஹூவையும் விடுவித்தனர். சுதுபாலு பள்ளத்தாக்கின் முற்றுகையை ஷேக் பிகாரியை நிர்வகித்த பிறகு, கிளர்ச்சியில் அவரது பங்கு வெளிச்சத்திற்கு வந்தது.

இதன் பிறகு திகாயித் உம்ராவ் சிங் மற்றும் ஷேக் பிகாரி ஆங்கிலேயர்களின் இலக்குகளாக மாறினர். டால்டன் இருவருக்கும் மிரட்டல் விடுத்தார், அவர்கள் அவரைப் பற்றி கவலைப்படவில்லை. ஆகஸ்ட் 10, 1857 அன்று, இருவரும் மற்ற புரட்சியாளர்களுடன் சேர்ந்து பாபு குன்வர் சிங்கின் நண்பருக்கு உதவ ஜகதீஷ்பூரிலிருந்து அணிவகுத்துச் சென்றனர். முக்திவாஹினி புரட்சிகரப் படை டோரண்டாவிலிருந்து புறப்பட்டு குரு (குடு) விதானம் வழியாக சார்தாவை அடைந்தது. செப்டம்பர் 30, 1857 அன்று, சத்ரா நகரில் உள்ள ஃபன்சிஹரி தலாப் அருகே 3,000 புரட்சியாளர்கள் கொண்ட ஒரு படை முகாமிட்டிருந்தபோது, மேஜர் ஆங்கிலேயர் தலைமையிலான பிரிட்டிஷ் இராணுவம் அவர்களைத் தாக்கியது.
அக்டோபர் 2 ஆம் தேதி கடுமையான போர் நடந்தது. சுபேதார் ஜெய்மங்கல் பாண்டே மற்றும் சுபேதார் நாதிர் அலி கான் ஆகியோர் தங்கள் படைகளை வழிநடத்தினர், ஷேக் பிகாரியும் இதில் ஈடுபட்ட போராளிகளில் ஒருவர். ஒரு மணி நேரப் போர் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது. வெற்றி பெற்ற இராணுவம் மறுநாள் 150 புரட்சியாளர்களை தூக்கிலிட்டது. அவர்களில் 77 பேர் உடல்கள் ஒரு கூட்டுப் புதைகுழியில் புதைக்கப்பட்டனர். ஜெய்மங்கல் பாண்டே மற்றும் நாதிர் அலி கான் இருவரும் அக்டோபர் 4, 1857 அன்று தூக்கிலிடப்பட்டனர். மற்றவர்களுடன், ஷேக் பிகாரி பிடிபடுவதிலிருந்தோ அல்லது கொல்லப்படுவதிலிருந்தோ தப்பினார், அவர் தனது பிரச்சாரத்தைத் தொடர்ந்தார். சந்தால் கிளர்ச்சியை அடக்கிய பிறகு, மேஜர் மெக்டொனால்ட் ஷேக் பிகாரியின் இராணுவத்தை எதிர்கொள்ள சட்டுபாலு பள்ளத்தாக்குக்குச் சென்றார். ஷேக் பிகாரி மற்றும் திகைத் உம்ராவ் சிங் ஆகியோர் பிரிட்டிஷ் இராணுவம் முன்னேறுவதற்கான வழியைத் தடுத்தனர்.

அவர்கள் பள்ளத்தாக்குக்குச் செல்லும் சாலையின் மீது இருந்த பாலத்தை சேதப்படுத்தினர், மரங்களை வெட்டி வழியைத் தடுக்க அவற்றைப் பயன்படுத்தினர், மேலும் ஒரு சாதகமான நிலையில் இருந்து ஆங்கிலேயர்களைத் தாக்கினர். அனைத்து தோட்டாக்களையும் தீர்ந்துபோன பிறகு, அவர்கள் மலையடிவாரத்தில் இருந்து முன்னேறி வந்த இராணுவத்தின் மீது கற்களை உருட்டத் தொடங்கினர், இருப்பினும் ஆங்கிலேயர்கள் ஒரு ரகசிய பாதை வழியாக அவர்களை அடைந்தனர். பிரிட்டிஷ் வீரர்கள் ஷேக் பிகாரி மற்றும் திகாயித் உம்ராவ் சிங்கைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஜனவரி 7 ஆம் தேதி, நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. திகாயித் உம்ராவ் சிங் மற்றும் ஷேக் பிகாரி தூக்கிலிடப்படவிருந்த நாளில், எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் சுட்டுபாலு பள்ளத்தாக்கிற்கு திரளத் தொடங்கினர். இந்தக் காட்சி ஆங்கிலேயர்களைப் பயமுறுத்தியது, மேலும் மெக்டொனால்ட்ஸ் அவர்களை ராஞ்சி-ஓர்மன்ஜி சாலையில் உள்ள மோர்ஹாபாடி தாகூர் மலையில் உள்ள ஒரே ஆலமரத்தின் இரண்டு கிளைகளில் தூக்கிலிட்டது.

புரட்சியாளர்களை அச்சுறுத்துவதற்காக இருவரின் உடல்களும் தூக்கிலிடப்பட்ட ஆலமரம் ஃபான்சியாரி பனியன் என்றும், மோர்ஹாபாடியில் உள்ள ஒன்று ஃபான்சி டோங்ரி என்றும் அழைக்கப்படுகிறது. அவர்களின் வீரம் மற்றும் தியாகத்தின் கதை உள்ளூர்வாசிகளின் நினைவிலும், ராஞ்சி நகரத்தின் ரவுண்டானாவில் உள்ள அவர்களின் சிலைகளிலும் பொறிக்கப்பட்டிருந்தாலும், பிகாரி மற்றும் அலி நாட்டின் பிற பகுதிகளில் அறியப்படாமலும், பாடப்படாமலும் உள்ளனர்.



# அடுத்து பரசுராம அவதாரம்




இந்தியில் அறிமுக இயக்குனர் அஷ்வின் குமார் இயக்கத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளியான படம் 'மகாவதார் நரசிம்மா'.

யாரும் எதிர்பாராத வகையில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் பெரும் வெற்றியை பெற்றது. தமிழ் உள்ளிட்ட மொழிகளிலும் படம் வெளியிடப்பட்டது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ரசிக்கும்படியாக அமைந்திருந்த இப்படம் ரூ. 300 கோடிக்கும் அதிகமாக வசூலித்து சாதனை படைத்தது.

2026 மார்ச் 15 இல் நடைபெற உள்ள 98வது ஆஸ்கர் அகாடமி விருதுகளுக்கான போட்டியில் சிறந்த அனிமேஷன் திரைப்படப் பிரிவில் தகுதி பெற்ற படங்களில் 'மகாவதார் நரசிம்மா' இடம்பிடித்தது.

ஹாலிவுட் அதிரடி படங்கள் மற்றும் ஜப்பானிய அனிமே தொடர்கள் சிறு வயதிலிருந்தே தன் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் இந்தப் படம் எனது குழந்தைப் பருவ நினைவுகள் மற்றும் நான் பார்த்த படங்களின் பாதிப்பில் உருவானது என்றும் முன்னொரு சந்தர்ப்பத்தில் படத்தின் இயக்குநர் அஷ்வின் குமார் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். இந்த படம் தற்போது நெட்பிளிக்ஸ் தளத்தில் காணக்கிடைக்கிறது.

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை விவரிக்கும் வகையில் படத்தின் அடுத்தடுத்த பாகங்களை உருவாக்க திட்டமிடப்பட்டது.

அந்த வகையில் விஷ்ணுவின் 10 அவராதங்களில் இரண்டாவது அவதாரத்திற்கான அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

அஸ்வின் குமார் இயக்கும் இந்த 'மகாவதார் பரசுராம்' படத்தின் அறிமுக வீடியோ வெளியாகியுள்ளது. இந்த படம் 2027ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியாகவுள்ளது.



ரசிகர்களின் மனம் கவர்ந்த முன்னணி நடிகைகளில் ஒருவர் சமந்தா. இவர் நடிப்பில் அடுத்ததாக மா இண்டி பங்காரம் திரைப்படம் வெளிவரவுள்ளது. இப்படத்தில் ஆக்ஷன் ஹீரோயினாக சமந்தா நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
நடிகை சமந்தா தனது லேட்டஸ்ட் பதிவுகளை இன்ஸ்டாகிராமில் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இந்த நிலையில், தற்போது தனது அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# அக்கா ஆகும் துவா படுகோன் சிங்



பாலிவுட்டின் நட்சத்திர ஜோடியான ரன்வீர் சிங் - தீபிகா படுகோன், தங்களது இரண்டாவது குழந்தையை எதிர்நோக்கி இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

கடந்த 2018ஆம் ஆண்டு ரன்வீர் சிங், தீபிகா படுகோன் திருமணம் செய்துகொண்டனர். இந்த ஜோடிக்கு 2024ம் ஆண்டு பெண்குழந்தை பிறந்தது. அவளுக்கு துவா எனப் பெயரிட்டுள்ளனர். சமீபத்தில் துவாவின் புகைப்படங்களை இணையத்தில் பகிர்ந்திருந்தனர். இந்நிலையில் இரண்டாவது குழந்தை குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

நடிகர் ரன்வீர் சிங் துரந்தர் வெற்றியைத் தொடர்ந்து அடுத்தடுத்த படங்களில் கவனம் செலுத்திவருகிறார். நடிகை தீபிகா படுகோன் அட்லீ இயக்கத்தில் அல்லு அர்ஜுனுடன் இணைந்து ராகா என்ற படத்தில் நடிக்க இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'ரஜினி 173' இயக்குநர் யார்? - நீடிக்கும் குழப்பம்



ரஜினி நடிக்கும் 173-வது படத்தின் இயக்குநர் யார் என்பதில் இன்னும் குழப்பம் நீடித்து வருகிறது. 'ரஜினி 173' படத்தினை சிபி சக்கரவர்த்தி இயக்குவார் என்று அறிவிக்கப்பட்டது. அவரும் படத்தின் கதை, திரைக் கதையினை இறுதி செய்து பணிகளைத் தொடங்கினார்.

ஆனால், முன்பு ஒப்புக் கொண்ட தெலுங்கு படத்தினை இயக்குவதற்காக வாங்கப்பட்ட தொகையினை அளிப்பதில் சிக்கல் உருவானது. இதனால் 'ரஜினி 173' படத்தினை சிபி சக்கரவர்த்தி இயக்க முடியாத சூழல் உருவாகி இருப்பதாக கூறப்படுகிறது.

தற்போது 'ரஜினி 173' படத்தினை அஸ்வத் மாரிமுத்து இயக்குவார் என திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரும் ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில் சிம்பு நடிக்கவுள்ள படத்தினை இயக்க ஒப்பந்தமாகியுள்ளார். அவரும் ஏஜிஎஸ் நிறுவனத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் வாங்கினால் மட்டுமே 'ரஜினி 173' படத்தினை இயக்க முடியும்.

இதற்காக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்த குழப்பத்தினால் 'ரஜினி 173' படத்தின் படப்பிடிப்பு எப்போது என்பதே தெரியாமல் உள்ளது. இதுவரை முதற்கட்டப் பணிகளுக்கே பல லட்சங்களை செலவு செய்துவிட்டது ராஜ் கமல் நிறுவனம். இதனால் விரைவில் அனைத்து பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்து 'ரஜினி 173' படத்தினை தொடங்க ராஜ் கமல் நிறுவனம் முனைப்பு காட்டி வருகிறது.



# தி மம்மி (2026) விமர்சனம்




தி மம்மி (2026) விமர்சனம் (3 / 5)

எகிப்தில் பத்திரிகையாளராக வேலை பார்த்து வரும் ஜாக், தனது மனைவி மற்றும் 8 வயது மகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார். ஒருநாள், பக்கத்து வீட்டுப் பெண் ஒருவர் அவரது மகளை கடத்திச் செல்கிறார். அதன் பிறகு அந்த குழந்தைக்கு என்ன ஆனது என்பது தெரியாமல் ஆண்டுகள் கடக்கிறது.

8 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு விமான விபத்தில் கிடைக்கும் ஒரு பெட்டிக்குள், காணாமல் போன அவரது மகள் உயிருடன் கிடைக்கிறார். ஆனால் அவள் இயல்பான நிலையில் இல்லாமல், மர்மமான மாற்றத்துடன் இருப்பது தெரிய வருகிறது. தனது மகளை மீண்டும் பழைய வாழ்க்கைக்கு கொண்டு வர முயலும் பெற்றோர், அதன் பின்னர் எதிர்கொள்ளும் அமானுஷ்ய சம்பவங்களே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்

மகளாக நடித்திருக்கும் குழந்தை நடிகையின் நடிப்பு படத்தின் முக்கிய பலம். அவரது உடல் மொழி, பார்வை, அசைவுகள் அனைத்தும் பயமூட்டும் வகையில் அமைந்துள்ளது. பெற்றோராக வரும் கதாபாத்திரங்களும், பதட்டம் மற்றும் பயத்தை நன்றாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இயக்கம்

மம்மி படங்கள் என்றாலே பொதுவாக சாகசம் மற்றும் பிரமாண்ட காட்சிகள் நினைவிற்கு வரும். ஆனால் இந்த படம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, முழுக்க ஹாரர் பாணியில் நகர்கிறது. இயக்குனர் லீ க்ரோனின், குடும்ப உணர்வுகளுடன் கலந்த ஒரு இருண்ட ஹாரர் அனுபவத்தை உருவாக்க முயற்சி செய்துள்ளார்.

படம் ஆரம்பத்தில் மெதுவாக நகர்ந்தாலும், கதையின் சூழ்நிலை உருவாக அதுவே உதவுகிறது. பின்னர் வரும் காட்சிகள் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக ஹாரர் காட்சிகள் ரசிகர்களுக்கு பிடிக்கும்.

ஒளிப்பதிவு மற்றும் இசை

ஒளிப்பதிவு மற்றும் பின்னணி இசை படத்தின் மனநிலையை உயர்த்துகிறது. இருண்ட காட்சிகள் மற்றும் அமைதியான பின்னணி இசை, suspense உணர்வை உருவாக்குகிறது.

அதே நேரத்தில், சில காட்சிகள் மிகவும் கொடூரமாகவும், பார்க்க சிரமமாகவும் உள்ளது.

இது எல்லோருக்கும் பொருந்தக்கூடிய படம் அல்ல. குறிப்பாக குழந்தைகளுடன் பார்க்க முடியாத படம்.

மொத்தத்தில், தி மம்மி ஒரு முழுக்க ஹாரர் அனுபவம் தரும் படம். வழக்கமான மம்மி படங்களை எதிர்பார்த்து சென்றவர்களுக்கு இது மாறுபட்ட அனுபவமாக இருக்கும்.

# மங்காத்தா 2-வுக்கு ரெடியான வெங்கட்பிரபு




விஜய்யின் 'கோட்' படத்தை இயக்கிய வெங்கட்பிரபு, அடுத்து சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தை இயக்க இருந்தார்.

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்க இருந்தது. டைம் டிராவல் கதையான இதன் விஎப்எக்ஸ் காட்சிகளுக்காக அமெரிக்கா சென்று வந்தனர். ஆனால் படத்தின் பட்ஜெட் அதிகம் என்பதால் தயாரிப்பு தரப்பில் அதைக் குறைக்கச் சொன்னதாகக் கூறப்பட்டது.


சிவகார்த்திகேயன் அடுத்து 'சேயோன்' படத்தில் நடித்து வருகிறார். இதனால் வெங்கட் பிரபு இயக்கத்தில் அவர் நடிக்கும் படம் டிராப் எனக் கூறப்படுகிறது. இதையடுத்து அவர் 'மங்காத்தா' படத்தின் 2-ம் பாகத்தை இயக்க இருக்கிறார் என்றும் அதற்கான டிஸ்கஷன் நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. அஜித், அர்ஜுன், த்ரிஷா, ராய் லட்சுமி, அஞ்சலி உள்பட பலர் நடித்து 2011-ல் வெளியான 'மங்காத்தா' சூப்பர் ஹிட் வெற்றியை பெற்றது.

நடிகை கல்யாணி ப்ரியதர்ஷன் தற்போது இந்திய அளவில் பேசப்படும் நடிகை ஆகிவிட்டார். அவருக்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டமும் இருகிறது.
லோகா படத்தின் ஹிட்டுக்கு பிறகு ஹிந்தியிலும் அவருக்கு பட வாய்ப்புகள் வந்திருகிறது.
தற்போது கல்யாணி ப்ரியதர்ஷன் விருது விழா ஒன்றில் ரெட் ஹாட் உண்டியல் ஹாட் ஆக கலந்துகொண்ட புகைப்படங்கள் வெளியாகி இணையத்தில் வைரல் ஆகி உள்ளது.


WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knowelge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318



உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
(ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
(ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
Sale
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872






### கல்லும் கதைப் பேசும்.!

ஒருமலையில் வெட்டியெடுத்த
இரு கற்கள்.. ஒன்றோடு
ஒன்று பேசியதை நான்
கேட்டேன்.!

ஒரு கல்.. படிக்கல்..
உள்ளே கருவறை கல்..
படிக்கல் பேசியதை
பாவலன் யான் கேட்டேன்!

என்னடா என்ன இது..
எல்லோரும் மிதித்திட
கண்ணீர் வருகிறதே..
என் கதை சோகக் கதை!

மனது வலிக்கிறது..
மழை வெயில் என்மீது
மனிதன் காலின் கீழ்..
மரண வேதனைகள்!

உள்ளே இருக்கும் கல்லே..
உன்னை கடவுள் என்றே
பாலூற்றி பூசை செய்து
பார்த்துக் கை கூப்பி..

எல்லோரும் வணங்கிடவே
பூ வைத்துப் பொட்டிட்டு
முன் விழுந்து பணிந்து
போற்றும்படி இருக்கின்றாய்!

கல்லிலே உன் நிலையோ
காண்பதற்கு பெரியது..
கடவுளே.. உன் வடிவம்
புண்ணியம்
செய்தாயோ?

எனக்கும் உனக்கும்
இடையில் ஏன் வேறுபாடு?
உன்னை வணங்குகிறார்..
என்னையோ மிதிக்கின்றார்..!
உள்ளிருந்த கல் சிரிக்கும்..
உள்ள நிலை உரைக்கும்!
அன்றொருநாள்
உளியொன்று..
ஓங்கி அடிக்கயிலே
ஒரு அடிக்கே நீ விழுந்தாய்.!

படிக்கல்லாய் கிடக்கின்றாய்..
என்னைப் பார்! எனக்கு
எத்தனை அடிப் பட்டேன்!
கண்ணை செதுக்கி..
கை..கால்கள் செதுக்கி..
வைத்துச் செய்ததனால்
வாங்கிய அடிகள் கோடி!

உளி அடிகள் பட்தனால்
ஒரு அடிக்கே நீ விழுந்தாய்.
காலில் மிதிப்பட்டாய்..
கதையினை கூற வந்தாய்!

உளி கொடுத்த
வலியேற்றேன்..
வழிபடும் சிலையானேன்!
வலி ஏற்றதாலே நான்
வாழ்வு பெற்றேன்!
வாழ்க்கைப் பாடம் இது!
வையகம் உணர்ந்திடுமோ!

இரண்டு கற்கள் பேசியது..
என் காதால்
கேட்டதனால்..
கேட்டதையேப்
பாட்டாக்கித்
தருகின்றேன் ஏற்பீரோ!



**வே.கல்யாண்குமார்.**




நல்லவேளையா நீங்க
முன்னாடியே
சொல்லிட்டீங்கனு
நெனச்சாலும்
வருவீங்கனு தான மனசு
சொல்லிச்சி.

மனசாட்சியே இல்லாதது
இந்த மனசுனு
நெனைக்கும்போது
அது மனசா இல்ல
நீங்களானுக்கூட
தெரியாம காத்துட்டு
இருந்துருக்குறோம்னு
நெனைக்கும்போதுதான்
இந்த மனசு கண்ணுக்கிட்ட
சொல்லி
விம்பிட்டு
இருக்கு
கண்மணி.



**துங்கன்**
கோயம்புத்தூர்



நகங்கள் பிறைகளாய்
தெரிய கைகள்
எழுதியது
அல்லாஹீ
அக்பர்.



**ஜயந்தி
சிவக்குமார்.**

### பூ மாலை

கருவறை அடைந்தும்
மோட்சம் கிடைக்கவில்லை
காய்ந்து சருகானேன்

### மீன்

வலுவிருந்தும் பயனில்லை
பிடிபட்டேன் : உணவானேன்
உன்னைத் தேற்ற

**ஓம் குமார் P N**

நீயிருக்கும் வரை
அந்த மலர்கள்
பிடிக்க போவதில்லை!

எல்லோரையும் எல்லா
நேரங்களிலும் பிடித்து
போவதில்லை இன்று
அதிகம் பிடிப்பவர்கள் நாளை
பிடிக்காமல் கூட போகலாம்
இப்பொழுது வரை வெறுத்து
கொண்டிருப்பவர்கள்
நாளை நட்பாக கூட மாறலாம்
இந்த காலம்
எல்லாத்துக்கும் அருமருந்து!
புரியாத புரிதல்களுக்கு
விடையளிக்கும் பெருவாழ்வு!!

உம்முன்னு இருந்தாலும்
ஏனோ என் கண்களுக்கு
ஜம்முன்னு தெரிகிறாய்
கம்முன்னு சென்றாலும்
Bun–ன்னு இருக்கிற
கன்னங்களில்
உம்மா கொடுக்கிறேன்
கனவுகளில்!

எத்திசை பார்வையிலும்–
அவள் ஏஞ்சலாக தான்
தெரிகிறாள்!

நின்முகம் கண்டே
நிறைவடைய வேண்டும்
இந்த அற்ப வாழ்வு!

ஒவ்வொருவர் வாழ்விலும்



என் குவியங்களில்
குவியலாய் நிறைந்திருப்பவள்
நீ மட்டும் தானடி!

ஒவ்வொருவருக்கும்
ஒருமுகமென்று அகம்
எண்ணாதே நீ காணாத
முகம் வரை அவன்
நல்லவனென்றே
பறை சாற்றி கொள்ளட்டும்!

தினம்,தினம் கனவுகளில்
களமாடி களவாடுகிறாள்?
எனது கற்பை!

எதுவும் உன்னுடையதும்
அல்ல என்னுடையதும் அல்ல
எல்லாம் அவனுடையது
அவன் எழுதிய தீர்ப்பின் படி
தறிகெட்டு ஆடுகிறோம்
ஆறடிக்குள் செல்லும் வரை!

காயப்பட்ட பிறகும்
அழகாய் தான் தெரிகிறது?
அந்த காதல்!

பிறப்புக்கும், இறப்புக்கும்
இடைப்பட்ட காலத்தில்
ரொம்பவும் ஆடுகிறான்
மனிதன்!

ஒரு தேவதை வருமாம்
ஏனோ வதையை வரமாய்
பெற்ற பிறகு தேவையா
"நீ" என தோணுகிறது!

சில நேரங்களில்
பட்ட பிறகும் சுட்ட
காதல் சுமைகளாய்
தெரிவதில்லை!

வாழ்க்கை முழுதும்
அழ போவதற்கான
ஒத்திகையா? பிறக்கும்
போது அழுவது!



**லி.நௌஷாத் கான்**

### கனவு :

கண் மூடி உறங்கயிலே
கண் விழித்து நடக்கும்
ஆழ் மனதின் ஆசைகள்!

சில போது துரத்தும்
சில நேரம் அழைக்கும்
தொட முடியாத நிழல்!

### நிசப்தம் :

வாகனங்கள் இரைச்சல்
வானை முட்ட,
வியாபாரக் கூச்சல்
காதையறுக்க,
ஓயாமல் ஒலிக்கும்
அலைபேசிகள்
எதுவும் எட்டாத
தூரத்தில்
புல்வெளி பரந்த காடுகளில்
நிசப்தம் தேடி ஓடுகையில்
உள்ளிருக்கும் பலநூறு
எண்ணங்களில்
மௌனமாய் கேட்குது
ஆயிரம் சத்தம்!
உள்முகமாய் பயணிக்கும்
முயற்சிகளில்,
அலைமோதும்
எண்ணங்களை
அறிந்து
கொண்டால்
வசமாகும்
உன்னில்
நிசப்தம்!



**மீனா சேகர்**

### "எச்சில் எழுப்பிய சந்தேகக் கேள்விகள்."

மெல்ல விரியும் பூவிதழ்;
செல்லச் சிரிப்பை உதிர்க்கும்
பூவையிதழ்;
இவைகளை வெல்லக்
கட்டியெனக் கொண்டாடும்
நாளிதழ்..!

பூவிதழுக்கும்
பூவையிதழுக்கும் உள்ள
வித்தியாசம்;

மலரும் பூவிதழை
எச்சில்படுத்தும்
மதுவண்டுக்குத் தெரியாது;
அப்பூவிதழ் கடவுளுக்கு
அர்ச்சிக்கப்படும் ரகசியம்;

பூவையிதழும் எச்சில் படுத்தப்
படுவதால் அவளுக்குரிய
நோய் எதிர்ப்பு சக்தி அப்
பாதிப்பிலிருந்து அவளை
விடுவிக்குமா? என வளரும்
சந்தேகம்..!




@@@@@@@
"தத்துவம் உண்மையா?
பொய்யா?"
நெடுநாளைய சந்தேகம்
அவனுக்கு;

தன் தோட்டத்திலுள்ள
வாழையும் தென்னையும்
குலை குலையாகக்
கனிகளைத் தருகின்றதே;
இவைகளை

ஒரு கவிஞன் வர்ணித்துப்
பாடும்பொழுது கிட்டாத
உற்சாகம் இளங்கன்னியின்
அமுத கலசங்களை
வர்ணித்துப் பாடும்பொழுது
மட்டும் அவனுக்கு
ஏற்படுகின்றதே.. அது ஏன்?
என்றான் அவன்..!

எல்லாம் அறிந்த ஒரு
வேதாந்தி அவனிடம்
சொன்னார் இப்படி;
ஒருவேளை பட்டினத்தார்
அன்று பாடிய "பிறந்த
இடத்தையும்; கறந்த
இடத்தையும்; நாடுதே பேதை
மனமே." எனும் தத்துவக்
கவி வரிகளுக்குரிய சரியான
விளக்கமாக இச் சந்தேகம்
இருக்குமோ? என்றார் அவர்.

**கவிச்சாரல் கொள்ளிடம்
காமராஜ்,
திருச்சி**




மதிப்புமிக்க வாக்குரிமையை
விலை பேச வேண்டாமே

யாரும் அழைக்க வேண்டிய
கட்டாயமில்லை

வெயிலைப் பற்றி
கவலையில்லை

கால்கடுக்க வரிசையில்
நின்றாலும் கடமையை
நிறைவேற்றிய கர்வம்

அழகான ஆள்காட்டி
விரலில் கருநீல மையினால்
வெற்றித்திலகம்

நீலப் பொத்தானை அழுத்தி
ஐந்தாண்டுக்கான
ஆட்சியாளரை
தேர்வு செய்த பெருமை

மிகப்பெரிய பணி
ஆற்றி முடித்த திருப்தி


வாக்களிப்போம்
வலிமைமிக்க
நாட்டைக்
காப்போம்



**நாகை
பாலா**

## நூல் விமர்சனம்

வெளிச்ச விதைகள் !
நூல் ஆசிரியர் :
கவிஞர் இரா. இரவி
மதிப்புரை :
முனைவர் ச. சந்திரா
வெளியீடு ;வானதி
பதிப்பகம்!
190 பக்கம் .விலை ரூபாய் 120.
23. தினதயாளு தெரு
தியாகராயர் நகர்
சென்னை 600 017.
பேச 044– 24342810 /
24310769
மின் அஞ்சல்
vanathipathippakam @gmail.
com




**நுழைவு வாயில்:**

ஹைக்கூ திலகம் இரா. இரவியின் ‘வெளிச்ச விதைகள்’ என்னும் நூல் அவரது வெளியீட்டு எண்ணிக்கையில் பதினாறு; பக்கங்களின் எண்ணிக்கையோ நூற்று எண்பத்தாறு; இடம் பெறும் கவிதைகளில் எண்ணிக்கையோ பன்னிரு ஆறு (12X6=72) ; நூலின் மொழிநடையோ தேனாறு; இடையிடையே பெண்ணாறு; மொத்தத்தில் வாசிப்போர் மனதோ பாலாறு.

‘ஹைக்கூ’ என்னும் மூன்று சக்கர வாகனத்தில் ஏறி, கருங்கல் சாலை, செம்மண் சாலை என வேறுபாடு, பாகுபாடு பாராது கரடுமுரடானப் பாதைகளில் பயணித்து, முட்டுச் சந்து வந்தாலும், முட்டாமலேயே பக்குவமாக, இலாவகமாகத் திரும்பி சீராக ஓட்டும் அனுபவசாலியே இரா. இரவி. இது இப்படியிருக்க, எட்டுச்சக்கர கனரக வாகனத்தில் ஏறி தமிழியம், அகவாழ்வியல், இயற்கை, சமூகவியல் என்னும் நால்வழிச் சாலையில் பயணிக்கின்றார் கவிஞர். எது முதல் எது வரை?

உதிரிப் பூக்கள் முதல் உறவுகள் வரை. சேய்மை முதல் தாய்மை வரை, பாரி முதல் ஓரி வரை, காகிதக் கப்பல் முதல் கனல் கக்கும் அணுஉலை வரை, சிலப்பதிகாரம் முதல் சிம்பொனி வரை, சோளக்கதிர் முதல் சோம்பித் திரிவோர் உண்ணும் பீட்ஸா வரை, ஏணி முதல் தோணி வரை, எட்டுக்கு எட்டு வீடு முதல் எட்டடுக்கு மாளிகை வரை என ஆதி முதல் அந்தம் வரையான அனைத்தையும் கருவாகக் கொண்டு கவிதை பல புனைந்திருக்கிறார் கவிஞர் இரா. இரவி.

**கவிஞர் கரங்களில்:**

கொடியில் காய்க்கும் பூசணிக்காய் வாய் திறந்து பேச முனைகின்றது. நெல்லிலிருந்து சொல்லுக்குத் தாவுகின்றன எழுத்துக்கள். நிலவோ விளம்பரத் தூதுவராய் உருமாறி மார்க்கெட்டிங் பண்ண கிளம்புகிறது. விளையாட்டு பொம்மைகள், கூட உயிர்பெற்று சமரசம் பண்ணத் துடிக்கின்றன. ஆதிரை கரங்களில் இருந்து அட்சயப் பாத்திரம் மீனவர் கரங்களுக்கு இடம் பெயர்கின்றது. பதக்கங்களோ இதழ் திறந்து பெண்ணியம் பற்றி விவாதம் செய்கின்றன. இப்படி இன்னும் பல பல... அஃறிணை உயிர்களெல்லாம் உயர்திணை உயிர்களைத் திருத்தும் பொருட்டு தங்கள் பணியினைச் செவ்வனேச் செய்கின்றன கவிஞர் இரா. இரவி கவிதைகளில் எனலாம்.

**அட்டைப்பட விளக்கம்:**

குவிந்து கிடக்கும் புத்தகங்களைப் புனிதமாக எண்ணி, உனக்கான எதிர்காலம் எப்பக்கத்தில் உள்ளது என்பதனைக் கண்டறிந்து நடந்தாயானால், உன் வாழ்வு சோலைவனம். இல்லையேல் உன் வாழ்வு பாலைவனம் என்பதனையே ‘வெளிச்ச விதைகள்’ என்னும் நூலின் முன் அட்டைப்படம் வாசகர்க்குச் சொல்ல வருகின்றது.

இலக்கிய உலகில் இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் இருபெரும் எழுத்து மேதைகளது (டாக்டர். வெ. இறையன்பு, முனைவர் இரா. மோகன்) நெஞ்சத்திலும் நீங்காது இடம் பெறுபவரே கவிஞர் இரா. இரவி என்பதனையே பின் அட்டைப்படம் பறைசாற்றுகின்றது.காலத்தோடு கைகோர்ப்பு:

கையேந்தி பவனில் அப்பொழுதே செய்து அப்பொழுதிலேயே வழங்கப்படும் துரித உணவைப் போல (Fast Food) நேற்றைய சாதனை இன்றைய கவிதையாய் கவிஞர் கரங்களில் உருமாறி விடும் என்பது மறுக்க முடியாத உண்மை. உதாரணத்திற்கு ஒன்றிரண்டு.....

“ஒற்றைப் பெண்ணாய் ஒலிம்பிக்கில் சாதித்தவர் ஒரே நாளில் உலகப்புகழ் பெற்றவர்”. (ப. 110) என சாக்சி மாலிக்கின் சாதனையை உடனுக்குடன் கவிதையாய் படிக்கிறார். இரா. இரவி. “ஓடிவந்து நீ உயரம் சென்ற போது உயரம் சென்றது நீ மட்டுமல்ல! இந்தியாவும் தான் (ப. 107) என்ற கவிதையை ‘தங்கக் கவிதை’ என்று கூறாமல் வேறு என்னவென்று கூறுவது?

**ஆச்சர்யக் குறியா? கேள்விக் குறியா?:**

கவிஞர் தன் மொழிநடைத் திறனில், கவிதையின் நடை ஓட்டத்தில் ஆச்சர்யத்தை வெளிப்படுத்துவதோடு, கேள்விகள் பலவும் எழுப்புகின்றனர். எடுத்துக்காட்டிற்கு இதோ! “விபத்தின் போது ஏற்றப்பட்ட இரத்தம் என்னச் சாதிக்காரனது எனத் தெரியுமா?” (ப.156). “யாரும் ஊரே யாவரும் கேளீர் என்று யாவருக்கும் சொன்னவனுக்கா எல்லைக்கோடு?” (ப.169).

**அம்மையப்பரா? அழகப்பரா?**

“கெட்டவன் ஆனாலும் விட்டுத்தர மாட்டான், நல்லவன் என்றே மற்றவரிடம் வாதாடுவாள்” (ப. 22). எனத் தாய்மையின் நிதர்சனத்தைப் பாராட்டுவதோடு நிற்காமல், பிற கவிஞர்களிடமிருந்து வேறுபட்ட, மாறுபட்டு தந்தையின் பண்புநலனை அழகாகப் பட்டியலிடுகிறார் கவிஞர் இரா. இரவி உதாரணத்திற்கு ஓரிரு வரிகள்!. “சோதனை பல வந்தபோதும் சோர்ந்திடாமல் சொக்கத் தங்கமாக வாழும் நல்லவர்” (ப. 25)

**கண்ணீர்க் கவிதை:**

மறைந்தும் மனதை விட்டு அகலாத கவிஞர் நா. முத்துக்குமார் பற்றிய கவிதை, வாசிப்போர் விழிகளிலிருந்து இரு சொட்டு கண்ணீர் வரவழைக்கும் இணையற்ற கவிதை.

“கொடிய தீயினுக்கும் உன்பாடல் கேட்க ஆசைவந்து கோரிக்கை வைத்ததோ இயற்கையிடம்? (ப. 152).

**படிம உத்திக்குச் சான்று:**

“பசியோடு பார்ப்ப வனுக்கு தோசை நீ பரவசத்தோடு பார்ப்பவனுக்கு பால்நிலா நீ” என்பதில் கண்முன் காட்சியாய் படிம உத்தியும், பாவேந்தர் பாரதிதாசனின் சாயலில் சமூக அவலமும் கவிஞர் இரா. இரவியால் ஒரே நேரத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது.

**முரண் நயம்:**

“கரி காசாகுது நெய்வேலியில்
காசு கரியாகுது தீபாவளியில்”

போகிற போக்கில்.... கவிதை நதியோட்டத்தின் நெளிவு. கழிவோடு, போகிற போக்கில் தனது அனுபவத்தையும் தேனாய்க் குழைத்துக் கொடுப்பதில் கவிஞர் இரா. இரவிக்கு நிகர் அவர் மட்டுமே! சாட்சிக்கு ஓரிரு வரிகள்....

“முக்கியமான காகிதத்தில் செய்து அடி வாங்கிய அனுபவ முண்டு! காகிதக் கப்பல்!” (ப. 173).

**இயைபுக் கவிதை:**

“விலங்கிலிருந்து மனிதன் வந்தது பரிணாமம் விலங்காக மனிதன் மாறிச் செல்வது அவமானம்” (ப. 135).

**மனமார...**

விதைகள் விருட்சமாக உருமாறுவது வெளிச்சத்தினால் மட்டுமே! நம் எண்ணங்கள் செயல்பாடாக மாறுவது பகுத்தறிவு ஒளியால் மட்டுமே! இதுவரை எப்படி இருப்பினும், அறியாமை என்னும் இருட்டுக்குள் ஒளிந்து கிடக்கும் எண்ணங்களை ஆறாம் அறிவு கொண்டு செதுக்கி வண்ணங்களாக ஒளியேற்ற முயல்வோமாக! என்பதனையே கவிதைகள் வழி கல்வெட்டாகப் பதிக்கின்றார் கவிஞர் இரா. இரவி.

‘காதல்’ என்னும் ஒரு வழிப்பாதையில் கவிதைப் பயணம் செய்வதை விட்டுவிட்டு, அறிவியல், அரசியல் என்னும் சுற்று வழிப்பாதை மறுத்து, சமூக அவலம் நீக்கும் வண்ணமாக தேசிய நெடுஞ்சாலையில் சீராகப் பயணித்தால் இலக்கிய உலகில் இரா. இரவி எட்டத் துடிக்கும் எல்லையைத் தொடலாம் என்பது என் போன்ற இணையதள வாசகியரின் தாழ்மையான கருத்து. கவிஞரின் பேரும் புகழும் அலைகடல் தாண்டி ஒலிக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்!.







## சிந்தனை செய்தலே சீர்!

நேரிசை வெண்பா!

அறத்தினைச்செய்வோம்
அருளுடன் வாழ்வோம்!

திறமாய் உழைப்போம்
தெளிந்தே... பொறுப்புடன்

எந்நாளும் காண்போம்
இனிமையுடன் எஞ்ஞான்றும்


சிந்தனை செய்தலே சீர்!

நல்லொழுக்கம் நற்பண்பு
நாளுமே கொண்டிலங்கிப்

பொல்லொழுக்கம்
நீக்கிப் பொலிவாக..
சொல்லொழுக்கம்

புந்தியுள் வைத்திடப்
பூரிப்பாய் எந்நாளும்

சிந்தனை செய்தலே சீர்!



## கல்லீரலைக் காப்போம்!

நச்சுகளை நீக்கும் கல்லீரல்
நன்னோயைப் போக்கும்
கல்லீரல்! இச்சைதனைக்
கட்டுப் படுத்திடுக
ஏற்றநல்ல உணவை
உண்டிடுக!


உடலுறுப்பின்
இரண்டாம் உறுப்பன்றோ
உயிர்காக்கும் கருவி
என்றிடலாம்!
கடுமையான சிக்கல்
தடுத்திடலாம் கல்லீரல்
ஆற்றல் மையமன்றோ!

கல்லீரல் குறித்த
நோய்களையே
காண்கின்ற காலம்
பார்த்திடலாம்!



நல்விதமாய் நாமும்
கல்லீரல்
நன்றேதான் காத்தே
மகிழ்ந்திடலாம்!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## சாந்தாய் மணத்தல் சரி!

நேரிசை வெண்பா!

அல்லவை நீக்குவோம்
அன்பையே ஆக்குவோம்
நல்லவை நோக்குவோம்
நாளுமே..எல்லோரும்
ஏந்துவோம் நல்லறம்
ஏய உணர்வோடு
சாந்தாய் மணத்தல் சரி!

அன்புடன் பண்பும்
அருளுடன் நேயமும்
இன்புடன் ஈகையில்
இல்லற..நன்மையில்
காந்தமாய் ஈர்த்திடக்
கண்ணாக எந்நாளும்
சாந்தாய் மணத்தல் சரி!

## பாரம்பரியம் காப்போம்!

நேரிசை வெண்பா!

பாரம் பரியத்தைப்
போற்றியே பாதுகாக்க
சீருடன் ஏற்ற
செயல்களை..ஊருடன்
ஒத்துழைத்தே கொண்டாடி
ஒண்மையாய்க் காண்பமே
வித்தாகும் நற்பழமை வீறு!

வரலாற்றுச் சின்னங்கள்
வண்ணமாய்க் காத்தல்
அரிய புதையலாய்
ஆங்கே..மரபுவழி
காணும் நினைவுச்சின்
னங்களைக் காத்திட
பேணுவோம் நல்வழி பீடு!

முனைவர்
இராம.வேதநாயகம்.



(மத்து)கயிற்றை இங்கும்
அங்கும் இழுக்கிறாள்
யசோதை
வயிற்றைக் காட்டிக் கொண்டு
நிற்கிறான் கண்ணன்
மத்தின் அசைவில் தயிரின்
ஒலியில் ஆவல் கொள்கிறான்
கண்ணன் ஆவல்
கொள்கிறான்

இப்படி அப்படி ததும்பும்
குமிழ்கள் ஒன்றாய்ச் சேர
பார்க்கிறான் வெண்ணெய்
உருண்டு திரளும்
காலம்தன்னை எண்ணி
கொண்டு யசோதை அருகில்
நிற்கிறான்...
கண்ணன் நிற்கிறான்

ஓசை அடங்கி
மத்தும் நிற்கும்
வேளை பார்க்கிறான்
வெண்ணெய் கிடைக்கும்
என்று எண்ணி
பானைதனை சற்றே எட்டிப்
பார்க்கிறான்...
கண்ணன் எட்டி பார்க்கிறான்

ததும்பும் வெண்ணெய்
சேராமலே அங்கும் இங்கும்
ஓடுதே ஆசை கொண்ட
கண்கள் மட்டும்
பானை யையே பார்க்குதே
சுற்றி வரும் வெண்ணெய்
பொருளும்
கையில் கிடைக்க வேணுமே
கையை நீட்டி கேட்க அவனும்
கூச்சப்பட்டு நின்றானே....
கண்ணன் நின்றானே

வாய்க்கு மானமில்லை
என்றால் வயிற்றுக்கு அதுவும்
கிடைக்குமே
வாயைத் திறந்து கேட்கவே
கூச்சம் அவனும்
கொண்டானே...கண்ணன்
கூச்சம் கொண்டானே..

கும்கும் என்று சுற்றிவரும்
வெள்ளைப் பொருளும்
என்னம்மா.. வெண்ணெய்
என்பது தெரியாமலே
வெகுளியாக கேட்கிறான்
கண்ணன் என்று
யசோதை நினைத்துக்
கொண்டாளே

வெண்ணெய் என்று
சொன்னால் அவனும்
விரும்பி கேட்டு மடக்குவான்
வெள்ளைபூதம் இதுவென்று
தாயும் சமர்த்தாய்ச்
சொன்னாளே சற்று தள்ளி
நிற்கவே யசோதை
மகனைப்பிடித்தாளே....
கண்ணன் இந்த பதிலையே
எதிரும் பார்க்கவில்லையே
ஆளைவிழுங்கும் பூதம்
என்றால் நானே வாயில்
விழுங்குவேன்
நாமிருவரும் தப்பி விடலாமே..
என்ற அவனின்
யோசனையால்
யசோதை இரக்கம்
கொள்ளவில்லை
சின்னஞ்சிறிய உருண்டைக்கா
கண்ணன் செய்யும்
தந்திரமா...

தள்ளி நிற்க சொன்ன
அன்னை
கர்வமாக சொன்னாளே
வெண்ணெய் கடைந்து
முடியும்வரை
கண்ணா நீயும் ஆடவேணும்...
இடது கையால் மத்தை நானும்
இழுக்கின்ற போது நீயும்
இடதுகாலை தூக்கிடவேணும்
வலது கையால் மத்தை நானும்
இழுக்கின்ற போது நீயும்
வலது காலை தூக்கிட
வேணும்

ஆட்டுவிக்கும் கண்ணன்
அன்று அன்னைமுன்னே
ஆடினான் காலை மாற்றி
மாற்றி ஆடினான்
ஆடிமுடித்த கண்ணன்
அவளை வெண்ணெய்
கொடுக்க வேண்டுகிறான்...
கண்ணன் வேண்டுகிறான்

உருண்டையாக்கி கண்ணன்
கைகளில் கிள்ளி கிள்ளி
வைத்தாளே...
கிள்ளி கிள்ளி தந்தாளே
குழந்தை நீயும்
என்றாளே...
யசோதை கண்ணா
குழந்தை நீ என்றாளே....



பானுமதி நாச்சியார்
சிவகிரி

## குறுங்கவிதைகள்

சிறிய இடைவெளிக்கு பின்
விட்ட இடத்திலிருந்து
ஆரம்பம் மூன்றாம் நாள் மழை
**********
நனைந்தும் குளிரவில்லை
நெருப்பை அணைக்கையில்
தீக்காயம் அடைந்த காற்று
***********
வெப்பச்சலன மழை
குளிர் இரவை நனைக்கையில்
வாய் திறக்கும் தவளைகள்.
**********
எடைக் கருவி மேடையின்
மேல் நின்றுத் தேடுகிறேன்
இருட்டில் தொலைத்த
'கேலரி'களை.
**********
நலம் விசாரித்த பட்டம்
தரை இறங்குவதற்குள்
மறைகிறது வானவில்.
***********
அதிகாலை திரும்பிய
மின்னொளி உடலெரிந்து
சிதறிக் கிடக்கும்
தீக்குச்சிகளை
வெளிச்சமிடுகிறது.
""""""""""""""""""""""""
திறந்த சன்னல்களில்
தலைக்காட்டி
மூடிய சாளரங்களைத்
தட்டியவாறே முன்னேறுகிறது
மழைசுமந்த காற்று.
""""""""""""""""""""""""""""""""""""""""""
பிராயசித்தம் தேடுகிறது
மாராப்பைப் மாறாக
பிரதிபலித்து
இடறி விழுந்த கண்ணாடி.
**********
சாலை விபத்து
காயமடைந்தோரைத்
தவிக்கவிட்டு
தப்பிவிட்டன நான்கு
நிழல்கள்.
"""""""""""""""""""""""""
பின்தங்கி விட்டன
பேத்தியின் கைப்பிடித்து
நடக்கையில்
வயோதிகமும் அசதியும்.
**********
பெயரிட்டதும் பெரும் வேகம்
மரங்களை சாய்த்து



முன்னேறும் சண்டமாருதமாய்
'மாறிய காற்று
***"*"*****
பட்டாம்பூச்சிகளை
படுத்தியவன்' படுத்துறங்கும்
கல்லறை மேல்
பல வண்ணப் பூக்கள்.
**********
வண்ணம் குழைப்பதற்குள்
'விர்'....ரென பறந்து விட்டது
வரைபலகை மேலிருந்த
பட்டாம்பூச்சி
**********
தரையை முத்தமிடுகின்றன
உதிரும் இலைகளுடன்
உதிர்க்கப் படாத நிழல்கள்.
""""""""""""""""""""""""""
மீண்டும் உயிர்த்தெழுகிறது
நேற்றிரவு உறங்குகையில்
மரித்த "மூன்றாம் அடி தேடல்'
**********
'இனி இவனை புதைக்கலாம்"
வீட்டாருக்கு சான்றிதழ்
வழங்கி விடைபெறுகிறது
ஆன்மா.
***********
பிறைநிலவு மறைந்ததும்
இருட்டுக்கு துணையாகிறது
பின்னிரவு மழை
***********
இடம் பெயர்ந்தன
'தி இந்து' வும் ஈஸிசேரும்
மூதியோர் இல்லத்தில் அப்பா



**********
ஆசையற்ற புத்தனை
செதுக்கியவனின்
ஆசை
"வீதிக்கொரு போதி'.
********
சரச் வாசலில் யாசகன்
உணவருந்துகையில்
பிரிந்த உயிர்
தொடரும் 'த லாஸ்ட் சப்பர்'

முனைவர்
வே. புகழேந்தி.

## முகமூடி மனிதர்கள்

மெய்யை போர்வையாக்கி
பொய்யை கோர்வையாக்கி
புன்னகையை போலியாக்கி
நேசத்தையே காசாக்கும்
இவர்கள் –
மெய்யான பொய் முகங்கள்!

சத்தத்தை சங்கீதமாக்கி
சரசத்தை கவிதையாக்கி
உடையை வறுமையாக்கி
பருவத்தை படமாக்கும்
இவர்கள் – கலைத்தாயின்
காவலர்கள்
வெள்ளித்திரையின்
கோணல்கள் !

வானவில்லை
வார்த்தைகளாக்கி
வாக்குகளை ஏணிகளாக்கி
கலவரத்தை விளம்பரமாக்கி
நிவாரணத்தை
நிர்வாணமாக்கும்
இவர்கள் – சுயநலத்தின்
நாற்காலிகள்
எதிர்பார்ப்புகளின்
ஏமாற்றங்கள் !

இரவுகளை விடியலாக்கி
வரவுகளை வாடிக்கையாக்கி
வாழ்க்கையை
வேள்வியாக்கி
வெளிச்சத்தை
பார்கத்துடிக்கும்
இவர்கள் –
உறவுகளின் முரண்பாடுகள்
தாலியைத்தீண்டா
மஞ்சள்கள் !

அறிச்சுவடிகளை
அடிகற்களாக்கி
ஆசைகளை
கட்டணங்களாக்கி
கல்வியை வியாபாரமாக்கி
கனவுகளை சுமக்க
வைக்கும் இவர்கள் –
கலைவாணியின் தேடல்கள்
கல்வித்துறையின்
காளான்கள் !

நோய்களை முதலாக்கி
நோயாளிகளை
நோட்டுகளாக்கி
மருத்துவமனைகளை
மாடிகளாக்கி
குணமாவதை
கேள்விக்குறியாக்கும்
இவர்கள் – விதியின்
வழித்தடங்கள்
வெள்ளுடையின்
கரும்புள்ளிகள் !


சட்டத்தை
கைப்பாவையாக்கி
கயவர்களை
கனவான்களாக்கி
கற்பழிப்பை விபச்சாரமாக்கி
கோடீஸ்வரனையும்
போண்டியாக்கும்
இவர்கள் –
தருமத்தின் தீண்டாமைகள்
நீதித்தாயின்
அவமானங்கள்!



நம்முள் –
எத்தனை
பசும்புலிகள் !
என்று மாறும்

இப்பொய்முகங்கள் ! ?

முனைவர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்



## நூலைப்படி.. தினமும் நூலைப்படி.!

படியப்பா.. படியப்பா..
தினமும் நூலைப் படியப்பா!
படிக்கட்டில் ஏற்றி வடும்
நூலேணியைப் பிடியப்பா!

கண்திறந்துப் படியப்பா
கருத்தோடுப் படியப்பா!
உனையுயர்த்தும் படிகளப்பா..
உணர்ந்துப் பார்த்துப்
படியப்பா!
நல்ல நல்ல நூல்களையே
.. தேர்ந்தெடுத்துப்
படியப்பா.. நூல்கள்தான்
தோழனப்பா.. நாளும்
படிக்க வேணுமப்பா.!

புத்தகத்தின்
உள்ளேதான் புத்துலகம்
இருக்குதப்பா.!புத்தியுள்ள
மனிதனுக்கு வெற்றி இங்கு
இருக்குதப்பா!
சக்தியுள்ள
தெய்வமப்பா.. புத்தகத்தை
வணங்கிடப்பா!எத்திசையும்
புகழ் மணக்கும் புத்தகங்கள்
பூக்களப்பா.!

எழுத்தறியா மாந்தர்களே
இல்லை என்ற நிலை
வரட்டும்.! பழுத்தக் கனிப்
சுவைதனையே.. புத்தகங்கள்
தினம் தரட்டும்.! அழுத்தங்கள்
புத்தகத்தைத்
திறக்கயிலே
மறையட்டும்.!
அன்றாடம் புத்தகத்தை
உனது கரம்
திறக்கட்டும்!



வே.கல்யாண்குமார்.

உயிரின் உடைமை
உடலது உடைமை உயிரெனும்
மடைமை சடலங் கண்டும்விடி
யாதோ

நான் வாழும் உலகம்
கல்லும் முள்ளும்
விசமும் பயங்கரமாய்
எனை பயம் காட்டுகின்றன!!

ஆட்கொல்லி புலிக்
கூட்டத்தில் அகப்பட்ட புள்ளி
மானாய் வாழ்வின் முடிவை
தனிமையாய் உணர்கிறேன்!!!

ஒரு இரைக்காய்
சண்டையிடும் விலங்குகளாய்
அதிகாரத்துக்காய்
குத்திக் குதரும்
மனித விலங்குகளாய்
காண்கிறேன்!!

நிறத்துக்காய் கட்சிக்
கொடிக்காய் கண் கொத்திப்
பாம்புபோல் தருணம் பார்த்து
தீண்ட பார்க்கும்
நச்சுப் பாம்புகளைப்
பார்க்கிறேன்!!

எதிலும் நடிப்பு
ஏமாற்றம், வஞ்சகம்
இரத்தம் குடிக்கும் பேய்கள்
நிறைந்த கிரகமாய் பூமியைக்
காண்கிறேன்!!

கை கொட்டிச் சிரிக்கும்
இறந்தவர் ஆத்மாக்கள்
தப்பினோம் பிழைத்தோம்
என்றுரைப்பது போல்
உணர்கிறேன்!!

ஆறுயிர் சினேகிதங்கள்
உடன் பிறந்த சகோதரங்கள்
ஆறுதலுக்காய் இவரும்
இல்லை சுயநலம்தான்
இங்கும் காண்கிறேன்!!

இறைவா மனிதம் வாழும்
பூமியாய் இதை மாற்றிடு !
இல்லையயேல் மனிதன்
வாழும் நல்ல பூமியில் எனை
விதைத்திடு!!


முனைவர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்




முப்பத்து மூன்று
சதவீதம் இட ஒதுக்கீடு
பெண்களுக்கு தரவேண்டும்
என்று சொல்லும்
இவர்களுக்கு
ஓர் உண்மை தெரியாது.

உன்னை பார்த்த
மறுநொடியில்
இதயத்தில் இம்மி
இடம் பாக்கி இன்றி
நூறு சதவீத
இட ஒதுக்கீட்டையும்
உனக்கே முழுமையாக
தந்தேன் என்பது

நாகை பாலா



வெரசாப் போ புள்ளே
என்று உன்னைச்
சொல்கிறார்..
கூடவே ஓடி வருகிறது
என் மனசும்.

வெள்ளந்தியா
வளந்துட்டான்னு
சொல்லிய பெருமூச்சு..
என்னந்தி செவப்பாச்சு
இன்னும்.

அழுவாச்சியா வளக்கல
அவளன்னு நெஞ்சு நிமித்தி
பார்க்கிறார்..
உன் உதடும்
கண்ணும்
சேர்ந்தே
சிரிக்குது
சாட்சியாய்.



ரிஷபன்



## பார்வை

மணலை அள்ளி அள்ளி
விளையாடும் மழலைக்கு
மணலில் கலந்திருக்கும்
தூசி தெரியவில்லை.
தும்பு தெரியவில்லை.
அழுக்கு தெரியவில்லை.
பொடிக்கற்கள் குத்துவதை
பொருட்படுத்தவில்லை.
மணலாக மட்டுமே
தெரிகிறது
மணல்
அதற்கு.
மனமொன்று
வேண்டும்
அதைப்போல்
எனக்கு.



கே. பி. ஜனார்த்தனன்

எழும்புமா என்றாவது?
துளிர் விடும் இலைக்கு
பொருந்தா பூ அது!
மலரின் கனத்தில்
தாழ்ந்து அழியும்

ஒளிரும் கதிரவனுக்கு?
தேவையா கொட்டும் முரசு?

வெள்ளித் திரை நடிகன்
நடிப்பில் நாளும் ஒரு
குறை கூறல் நாடகம்

இதன் நடுவே சமுதாய நீதி
பேசும் தனிக்குரல் ஒன்று!
எழும்புமா; என்றாவது?

சசிகலா விஸ்வநாதன்

## சுரண்டல்

வயதின் கூட்டல் வாழ்வின்
கழித்தல் விண்ணில்
சுழலும் புவிக்கோள்
மண்ணில் சுழலும்
மனக்கோள்
அகவை அதிகரிக்க அறிவு
வளர்ந்ததா? வாழ்வில்
இன்பம் மலர்ந்ததா?

பசிக்கின்ற வயிற்றுக்கு
உணவு வேண்டும்
உழைக்கின்றநமக்கெல்லாம்
உரிமை வேண்டும்.
தண்ணீருக்குப் போராடும்
காலம் வந்தது போல் வான்
முகில் நீருக்கும் போராடும்
காலம் வருமோ?

மூச்சை உள்ளடக்கி
உழைக்கின்ற நம்மைக்
காற்றுக்கூட கேலி பேசும்.

இங்கு சுதந்திரதேவியின்
சிம்மாசனம் கூடச்
சுரண்டப்படுவதால்
சிலர்கனவுகளெல்லாம்
நனவாகிவர
பலர்நனவுகளெல்லாம்
கனவாகிப் போனது!ஏன்...?

எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சிக்கோட்டை






















# ATTENTION
## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

















SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
RG Rajendra Prasath
Proprietor
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri ManjalMart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com



உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்



# 'கை' கொடுக்கும் 'கை'

நாம் செய்யும் செயல்களுக்கு 'கை' பயன்படுகிறது போல நாம் பேசும் பேச்சுக்கும் அப்பப்ப 'கை' பயன்படுது... அதுவும் விதவிதமா பயன்படுது... அது எப்படின்னு சொல்றேன்..!

எனக்கு இப்ப 70 வயசாகுது... 25 வருஷத்துக்கு முன்னாடி ஒரு மாசக் கடைசியில ஒரு நாளில் நடந்த நிகழ்வு அப்படியே உங்கள் கண் முன்னால்...!!!



அன்று காலையில என் பொண்ணு காலேஜுக்குப் போறப்ப "அப்பா... 'கை'ச்செலவுக்குப் பணம் கொடுங்க... நேத்தே கொடுக்க மறந்துட்டீங்க " ன்னு சொன்னாள்... நான் அவகிட்ட நூறு ரூபாயைக் கொடுத்துட்டு... நேத்து கொடுக்கலையே... எப்படிச் சமாளிச்சேன்னு கேட்டேன். என் பொண்ணு , " ஒரு தோழிக்கிட்ட அம்பது ரூபா 'கை'மாத்து வாங்கினேன் " னு சொன்னாள். அப்படிச் சொல்லிட்டு " ஏம்பா மாசக்கடைசியானாப் போதும் 'கை'யக்கடிக்குதுன்னே சொல்லிட்டுருக்கீங்களே " ன்னு ஆச்சரியமாக் கேட்டாள். நான், " பின்ன என்னடி செய்றது... உன் படிப்புச் செலவுக்கே அப்பப்ப நிறைய பணம் 'கை'ய விட்டுப் போகுதே " ன்னு சொன்னேன். அவளும் " சரி சரி எனக்கு காலேஜுக்கு டைம் ஆச்சு... நான் கிளம்பறேன்... வந்து பேசிக்கறேன் " னு சொல்லிட்டுப் போய் விட்டாள்.

நானும் ஆபீஸுக்கு கிளம்பிப் போனேன். போகும் போது ஒரு நண்பர் வீட்டுக்குப் போய் அவர்கிட்ட , "சம்பளம் வந்ததும் கொடுத்துடறேன்... அவசரமா ஆயிரம் ரூபா வேணும்"னு கேட்டேன். ஆனா அவரு 'கை'ய விரிச்சிட்டாரு... ஆபீஸுக்குப் போனதும் இன்னொரு நண்பர் எனக்கு ' கை ' கொடுத்தாரு... ஆயிரம் ரூபா கிடைச்சது... ஆனா சாயங்காலம் ஆபீஸ்லேர்ந்து பஸ்ல வரும்போது எவனோ ஒருத்தன் என் ஹேண்ட் பேக்ல பிளேடு போட்டு 'கை' வரிசையக் காட்டிட்டான்... என்ன செய்ய 'கை'க்கு எட்டினது வாய்க்கு எட்டலை... நடப்பதெல்லாம் நன்மைக்கேன்னு நினைச்சுக்கிட்டே வீடு வந்து சேர்ந்தேன்.

என் பொண்ணு காலேஜ் விட்டு வந்தவுடனே ராத்திரி ஏழு மணிக்கு என் கிட்ட , " அப்பா... நீங்க ஏதாவது சைடுல அம்மா பேர்ல பிஸினஸ் ஆரம்பிச்சா என்ன... 'கை' நிறைய பணம் கிடைக்குமே " ன்னு சொன்னாள். நான் அவக்கிட்ட , " பிஸினஸ் ஆரம்பிக்கணும்னா 'கை' வசம் கொஞ்சமாவது பணம் இருக்கணும்... இல்லாட்டி 'கை'த்தொழில் ஏதாவது தெரிஞ்சிருக்கணும்"னு சொன்னேன். என் பொண்ணு விடலை...
"அம்மாவுக்குத்தான் விதவிதமா ஸ்வீட் செய்றது 'கை' வந்த கலையாச்சே... ஏதாவது ஸ்வீட் ஸ்டால் ஆரம்பிக்கலாமே " ன்னு சொன்னாள். அதுக்கு நான், "ஏற்கனவே உங்கம்மாவை 'கை'ப்பிடிச்சவுடனேயே ஒரு ஸ்வீட் ஸ்டால் ஆரம்பிச்சேன்... அதுவும் ஒரு பார்ட்னரோடு சேர்ந்து ஆரம்பிச்சேன்... ஆரம்பிச்ச புதுசுல என்கிட்ட 'கை'யிருப்பு நிறைய இருந்துச்சு... அந்த பார்ட்னரும் முதல்ல எனக்கு வலது 'கை' மாதிரிதான் இருந்தான்... அப்புறம்தான் தெரிஞ்சது... அவனுக்கு 'கை' சுத்தம் இல்லைன்னு... நிறைய பணத்தை 'கை'யாடல் பண்ணிட்டான் " னு சொல்லிட்டுருக்கும் போதே... என் பொண்ணு கேட்டாள் , "அந்தப் பார்ட்னரை 'கை'யும் களவுமா பிடிச்சிருக்கலாமே " ன்னு... நான் அவகிட்ட , "நீ சொல்ற மாதிரியே அவனைப் பிடிச்சேன்... அதனால எங்களுக்குள்ள லேசா 'கை'கலப்பு கூட வந்துச்சு...என்ன செய்றது... அவனோ ஒரு 'கை'நாட்டு... பணத்தையெல்லாம் இஷ்டம் போல சொந்தக்காரங்களுக்கு கொடுத்து ஏமாந்துட்டான் " னு பழைய கதையச் சொல்லிட்டு.... என் பொண்ணை உற்சாகப் படுத்தினேன்...
"சரி சரி... அது இருக்கட்டும்... இப்ப ஒண்ணும் கெட்டுப் போகலை... நீ படிச்சு முடிச்சு நல்லபடியா வா... 'கை' மேல் பலன் நிச்சயம் கிடைக்கும் " னு சொன்னேன். என் பொண்ணும் என்கிட்ட , " நீங்க நினைக்கற மாதிரியே நான் படிச்சு முடிச்சு நல்ல வேலைக்குப் போய் ஒரு 'கை' பாத்துடுவேன் " னு நல்ல உறுதியோட சொன்னாள்.

அந்த நேரம் பக்கத்து வீட்டுல புதுசா குடி வந்திருந்த ஒரு பெண்மணி எங்க வீட்டுக்கு அவசரமா வந்தாங்க. அவங்க வந்து எங்கம்மாகிட்ட , "என் குழந்தைக்கு திடீர்னு சளி பிடிச்சு மூக்கு நல்லா அடைச்சிருக்கு... எனக்கு 'கை'யும் ஓடலை காலும் ஓடலை " ன்னு பதட்டப்பட்டு சொன்னாங்க. எங்கம்மா என்கிட்ட , " ஒரு 'கை' மருந்து இருக்கு... கொண்டு வர்றேன் " னு சொல்லிட்டு உள்ளே போனாங்க. அதுக்குள்ள என் மனைவி , " அத்தை... அந்த குழந்தை ஒரு 'கை'க்குழந்தை... மூச்சு விட முடியாம ரொம்ப கஷ்டப்படுது... நீங்க மருந்து தர வேண்டாம்" னு சொல்லிட்டு... வீட்டுக்கு வந்த பெண்கிட்ட , " பிள்ளையார் கோவில் பக்கத்துல ஒரு டாக்டர் இருக்காரு... அவரு நல்ல 'கை'ராசி டாக்டர்... அவர்கிட்ட போய் உடனடியா குழந்தையக் காட்டுங்க " ன்னு சொன்னாள்.

நானும் என் மனைவியும் அந்தப் பெண் கூட துணைக்குப் போனோம். டாக்டர் ஊசி போட்டு மருந்து கொடுத்ததுல குழந்தைக்கு நல்ல குணம் உடனடியா தெரிஞ்சது. குழந்தையோட அம்மா டாக்டர் கிட்ட , "டாக்டர்... ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு என்ன 'கை'மாறு செய்றதுன்னே தெரியலே " ன்னு சொன்னாங்க. டாக்டரோ, "நான் என் கடமையைத்தான் செஞ்சேன்... கடவுள் உங்களைக் 'கை'விடலை " ன்னு பெருந்தன்மையா சொன்னாரு.

கிளினிக்கை விட்டு வெளியே வந்தோம். அந்தப் பெண்ணையும் குழந்தையையும் அவங்க வீட்டுல விட்டுட்டு நானும் என் மனைவியும் எங்க வீட்டுக்குள்ள நுழைஞ்சோம். அந்த நேரம் டிவியில "ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ... உலகம் அறிந்திடாத பிறவியம்மா நீ " ன்னு பாட்டு ஒலிச்சது. நான் என் மனைவிக்கிட்ட , "பாட்டு ரொம்ப நல்லாயிருக்கே... எந்த சினிமாலே " ன்னு ஆர்வமாக் கேட்டேன். அதுக்கு என் மனைவி , " கை கொடுத்த தெய்வம் " னு சொன்னாள்.
நானும் உங்களுக்கு 'கை'கூப்பி வணக்கம் சொல்லி விடை பெறுகிறேன்.

She ~ டேய் உனக்கு அகநானூறு
&
புறநானூறு பத்தி தெரியுமா டா ?

Me ~ நேத்து பாக்கெட்ல நான் நூறு
வச்சிருந்ததையே மறந்துட்டு துணிய
துவைச்சிட்டேன் என் கிட்ட வந்து இதெல்லாம் கேக்குறியேடி..

==========================

தெருவில் போன சர்தாரை நாய் துரத்த எப்படியோ தப்பிச்சு மாடி ஏறினார்.

இதை மேலிருந்து கவனித்தவர் "ஏன் சிரிச்சிக்கிட்டே வரீங்க"

ஹி..ஹி... நான் ஹட்சில் இருந்து இப்ப ஏர்டெல்லுக்கு மாறிட்டேன் அதுக்கு தெரியல போல...

==========================

முடியாது என்று சொல்பவன் முட்டாள்...

முடியும் என்று சொல்பவந்தான் புத்திசாலி...

இப்ப சொல்லுங்க... என் "செல்"லுக்கு டாப்-அப் பண்ண முடியுமா... முடியாதா...?

==========================

"உங்க ஒரு கிட்னியை எடுத்தாத்தான் பிழைக்கலாம்!"

"நீங்களா... நானா டாக்டர்?"



==========================

Me ~ Hi Di ..சாப்டியா என்ன பண்ற?

She ~ Hi Da ..ம்ம் சாப்ட்டேன் நீ என்ன பண்ணிட்டு இருக்க?

Me ~ ஒரு அழகான பொண்ணுக்கு மெசேஜ் பண்ணிட்டு இருக்கேன்டி

She ~ அச்சோ நிஜமாவா.. அவ்ளோ அழகா நான்

Me ~ ச்சே ச்சே.. அவ Re-ply பண்ணலை அதான் உன்கிட்ட பேசுறேன்

She ~ ச்சைக்

## மீம்ஸ்











## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |




## ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?

===================

டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்

=============




மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவ்ங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,

==================

அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க

===================

டாக்டர்!டென்சன் ஆகாம இருக்கனும்னாா என்ன பண்ணணும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்

=============

பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?
அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம். பார்டர் எப்டி இருந்தா என்ன?

=================

சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO

==============

மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்

=============

டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?

=================

சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க? பலாக்காய்னு சொன்னா புரியாதா?

===============

எதுக்கு சார் அடிக்கடி " 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல

===============

முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும். மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்

====================

குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன். குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!

====================


இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!



# பன்முகம்



## மீன் வளர்ப்பு மன அழுத்தத்தை குறைக்கும்



மீன்கள் உயிரோட்டத்தையும் நேர்மறையையும் குறிக்கின்றன. எனவே, தொட்டியில் நீந்தும் மீன் நேர்மறை உணர்வலைகளை வெளியிடுவதாக நம்பப்படுகிறது. மேலும், மீன் தொட்டிகள் வீட்டின் அழகையும் வசீகரத்தையும் கூட்டுவதுடன் அமைதி உணர்வையும் உருவாக்குகிறது. வண்ணமயமான மீன்கள் கண்ணாடித் தொட்டிகளில் நீந்துவது ஓர் அழகான காட்சியாகும். இது, அந்த இடத்தை உத்வேகம் ஊட்டுவதாக மாற்றுகிறது. எனவேதான், பல்வேறு கலாச்சாரங்களிலும் மீன் வளர்ப்பது நன்மை பயக்கும் ஒன்றாக கருதப்படுகிறது.

மீன் தொட்டி வைத்திருப்பதால் அமைதியான சூழல் உருவாகி, கவலையும் மன அழுத்தமும் குறையும். ஏனெனில், மீன்களை நாம் கவனிப்பதும் ஒரு வகையான சிகிச்சை முறையாக உள்ளது. மீன் தொட்டிகளைப் பார்ப்பதில் நேரத்தை செலவிடுபவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வும் மேம்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.மீன்கள் சுறுசுறுப்பு, வலிமை, வெற்றியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. இரண்டு மீன்கள் இணையாக நீந்திச் செல்வது ஒற்றுமையைக் குறிப்பதாகும். மீன் தொட்டியை வீட்டில் வைப்பது மனநிலையை சீராக்குவதுடன் செல்வ செழிப்பையும் அதிகரிக்கும் என்று நம்பபடுகிறது.

அந்தவகையில், நல்ல அதிர்ஷ்ட மீனை வீட்டில் செல்லப் பிராணியாக வளர்ப்பதன் மூலம் நேர்மறையான உணர்வலைகளுடன் கூடிய மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் கிடைக்கிறது. மேலும், மீன்கள் கண்களை திறந்த நிலையிலேயே தூங்கும் தன்மை கொண்டது. இதனால் என்றும் விழித்துக் கொண்டிருப்பதால் தீய சக்தியை நுழைய விடாது. தீய சக்தியை உடன் இழுத்து, தீமையை ஏற்றுக் கொண்டு வீட்டில் இருப்பவர்களை காப்பாற்றுகிறது என்றும் நம்பபடுகிறது.

### மீன்களின் நிறம்

சிவப்பு நிறமீன்கள் வளமையையும், பச்சைநிற மீன்கள் வளர்ச்சியையும், மஞ்சள் நிற மீன்கள் செயல்திறனையும் வளர்க்கும். மீன்களை ஒற்றைப்படையாக வைக்க வேண்டும். 4 ஜோடிகளுடன் ஒருகறுப்பு மீனையும் வளர்த்தால் அதிர்ஷ்டம் எனப்படும்மீன் தொட்டியில் கருப்பு மீன் இருந்தால், அது வீட்டினுள் நுழையும் எதிர்மறை ஆற்றல்களை முற்றிலும் உறிஞ்சிவிடும். ஒருவேளை அந்த கருப்பு மீன் இறந்துவிட்டால், அது வீட்டில் உள்ள அனைத்து கெட்ட சக்திகளையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது என்று அர்த்தம்.

### வீட்டில் மீன் தொட்டி வைப்பதால் கிடைக்கும் நன்மைகள்

*சுறுசுறுப்பாக இருக்கும் மீன்களைத் தேர்ந்தெடுத்து தொட்டியில் விடவும். இது ஆற்றலின் சீரான ஓட்டத்தை உறுதி செய்யும்.

*மீன்கள் வீட்டின் நிதி நிலைமையை சரியாக வைத்து செல்வத்தை ஈர்க்கின்றன.

*மீன் வளர்ப்பு ஒரு அமைதியான சூழ்நிலையை உங்கள் வீட்டில் உருவாக்குகின்றன.

*மீன் தொட்டிகள் வெற்றி மற்றும் நல்லிணக்கத்திற்கு முக்கியமாக கருதப்படுகின்றன.

*மீன்கள் வாழ்வாதாரத்தையும் நேர்மறையையும் குறிக்கின்றன. எனவே, தொட்டியில் நகரும் ஒரு மீன் நேர்மறை அதிர்வுகளை வெளியிடும் என்று நம்பப்படுகிறது.

*வீட்டில் செல்வம் அதிகரிக்க வேண்டும் என்றால், மீன் தொட்டியில் கண்டிப்பாக 9 மீன்களாவது இருக்க வேண்டும். 9 மீன்களுக்கு குறைவாக மீன் வளர்க்க கூடாது.

## எப்போது நடக்கலாம்?



இதய பிரச்னை, ரத்தத்தில் அதிகளவு சர்க்கரை உள்ளவர்களுக்கு பின்விளைவு தராத மருந்தாக தினசரி நடைப்பயிற்சி வேலை செய்கிறது. உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை, ஒவ்வாமை உள்ள நோயாளிகளுக்கு மருத்துவர்கள் நீண்ட காலமாகவே தினசரி நடைப் பழக்கத்தை பரிந்துரைக்கின்றனர்.

ஆனால், நடக்க எது சரியான நேரம்..? காலையா அல்லது மாலையா?

எப்போது நடந்தால் பலன் அதிகமாக கிடைக்கும் என்று பலருக்கு கேள்வி கலந்த சந்தேகமாக உள்ளது. காரணம், சிலர் அதிகாலையில் நடந்தால் பலன் அதிகம் என்கிறார்கள். சிலர் மாலை நடைப் பயிற்சிக்கு 'ஓ' போடுகிறார்கள். ஒரு சிலர் எதற்கு வம்பு இரண்டு வேளையும் நடந்துவிடலாம் என்கிறார்கள். ஆனால், சமீபத்திய மருத்துவ ஆராய்ச்சியில் காலை - மாலை நடைப் பயிற்சி 'தனித்துவமான' பயன்களை கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

ஒவ்வொரு மனித உடலும் 'சர்க்காடியன் ரிதம்' (circadian rhythm) எனப்படும் இயற்கையான உடல் கடிகாரத்தில் இயங்குகிறது. சர்க்காடியன் ரிதம்' என்பது உடலினுள் இருக்கும் 24 மணி நேர உயிரியல் கடிகாரமாகும், இந்தக் கடிகாரம், ஒருவரின் தூக்கம்-விழிப்பு முறைகள், ஹார்மோன் வெளியீடு மற்றும் உடல் வெப்பநிலை உள்ளிட்ட உடல், மனம் மற்றும் நடத்தை மாற்றங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு இயற்கை சுழற்சி.

அதே சமயம், உணவு நேரம், எடுத்துக் கொள்ளும் மருந்துகள், பயணம் போன்ற காரணிகளாலும் பாதிக்கப்படலாம். இத்தகைய பாதிப்புகள் உடல்நலப் பிரச்னைகளுக்கு வழிவகுக்கும். மூளையில் இருக்கும் ஹைபோதாலமஸில் உள்ள 'சுப்ராச்சியாஸ்மாடிக் நியூக்ளியஸ்' (Suprachiasmatic nucleus - SCN) எனப்படும் செல்களின் குழு, 'சர்க்காடியன் ரிதத்'தை ஒழுங்குபடுத்துகிறது. மேலும், சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தத்தின் அளவினையும் வழிநடத்தும். அதிகாலை வேளையில், கார்டிசோல் என்ற மன அழுத்த ஹார்மோன்கள் உச்சத்தை அடையும். இதன் மூலம் சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தம் இரண்டும் உயரும். காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது இவை இரண்டும் உயராமல் பார்த்துக் கொள்ளும்.

ஆய்வுகளில் காலை உணவுக்கு முன் நடைப் பயிற்சி மேற்கொள்வதால், இன்சுலினை மேம்படுத்தும் என்று கூறப்படுகிறது. ரத்த அழுத்தத்தைக் குறைக்க காலை நடைப்பயிற்சி உதவும். மென்மையான நடைப்பயிற்சி, நாள் முழுவதும் ரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்கும். காலை நடைக்கு இத்தனை நன்மைகள் இருக்கிறதே என்று மாலை நடைப் பயிற்சியை ஒதுக்கிவிடக் கூடாது. பகல் மற்றும் இரவு நேர உணவிற்குப் பிறகு, ரத்தத்தில் சர்க்கரை அளவு கூடும்.


மாலை அல்லது இரவு நடைப்பயிற்சி மேற்கொள்வதால், சர்க்கரை அளவைக் குறைக்கும். இரவு உணவிற்குப் பிறகு 15-20 நிமிட நடைப்பயிற்சி கூட உணவுக்குப் பிறகு சர்க்கரை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி மாற்றங்களைத் தரும். மாலை நேரத்தில் ரத்த அழுத்தமும் இயற்கையாகவே குறையும். மேலும் இதயத்திற்கு நல்லது. காலை வேளையில் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு பகல் நேரத்தில் ரத்த அழுத்தம் குறையும் என்று ஆய்வில் கண்டறிந்துள்ளனர். அதே போல் மாலையில் நடைப்பயிற்சி மேற்கொள்வதால், இரவு நேரத்தில் ரத்த அழுத்தம் குறைவதாக கூறப்படுகிறது.

ரத்த சர்க்கரை அளவைப் பொறுத்தவரை, காலை நடைப்பயிற்சி ஒட்டுமொத்த வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. மதிய உணவுக்குப் பிறகு சர்க்கரை அளவு கூடும். மாலை நடைப்பயிற்சி ரத்தத்தில் சர்க்கரை அளவைக் குறைக்க உதவும். இரவு உணவிற்குப் பிறகு சர்க்கரை அளவு கூடாமல் இருக்க இரவு நடையும் அவசியம். நீரிழிவு ஆராய்ச்சியில், காலை நடையுடன் ஒப்பிடும் போது மதிய உணவுக்குப் பிறகு மாலை நடைப்பயிற்சிகள் சர்க்கரையை மிகவும் திறம்படக் குறைத்ததாகக் குறிப்பிட்டுள்ளன.

பொதுவாக நடைப்பயிற்சி இதயத்தை பலப்படுத்தி ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். இதன் மூலம் ரத்த அழுத்தம், கொழுப்பின் அளவும் குறையும். நடைப்பயிற்சி கலோரிகளை எரிப்பதால், உடல் எடை குறையும். ஆஸ்டியோபோரோசிஸைத் தடுக்கும். மூட்டு மற்றும் தசை வலியைக் குறைக்கும். நுரையீரல் திறனை அதிகரித்து, ஆக்ஸிஜன் விநியோகத்தை மேம்படுத்தும். செரிமானத்திற்கு உதவும்.

காலை சூரிய ஒளி உடலில் படும்போது, உடலில் வைட்டமின் டி உற்பத்தியாகும். வைட்டமின் டி எலும்பு ஆரோக்கியத்திற்கும் நோயெதிர்ப்பு செயல்பாட்டிற்கும் முக்கியமானது.

## கருப்பையைக் காக்கும் கருப்பட்டி!



உணவில் கருப்பட்டியை பயன்படுத்திவர, பற்களும், நரம்புகளும் உறுதியாகும். நீரிழிவு நோயாளிகள் கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டி கலந்து சாப்பிட்டு வர சர்க்கரையின் அளவு குறையும். அடிக்கடி சிறுநீர் போவது குறையும். கருப்பட்டி பெண்களின் கருப்பைக்கு மிகவும் ஏற்றது. சுக்கு, மிளகு கலந்து கருப்பட்டியை சேர்ந்து சாப்பிட தாய்ப்பால் நன்றாக சுரக்கும். குழந்தைக்கும் நல்ல ஊட்டச்சத்து கிடைக்கும். பாலுடன் கருப்பட்டி, பொடித்த மிளகு, மஞ்சள் தூள் ஆகியவை கலந்து குடித்தால் தொண்டைப்புண் சரியாகும். சிலருக்கு மூலநோய் அவஸ்தை இருக்கும். அவர்கள் இதனை பின்பற்றலாம். கருப்பட்டிக்கு வயிற்று புண்களை ஆற்றும் சக்தி உண்டு.

வாயு தொல்லையால் அவதிப்படுபவர்கள் ஓமத்துடன் கருப்பட்டியை சாப்பிட வேண்டும். நல்ல தீர்வு கிடைக்கும். கல்லீரலில் உள்ள நச்சுக்களை நீக்க கருப்பட்டியை சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். நாம் அன்றாடம் உபயோகித்து வரும் வெள்ளை சர்க்கரை உட்கிரகிக்கப்படுவதற்காக நம் உடலில் இருக்கும் சில வைட்டமின் சத்துகளை கூட எடுத்துக் கொள்ளும். அதாவது நம்முடைய உடலில் ஏற்கெனவே இருக்கும் சத்துக்களை உறிஞ்சிவிடுகிறது. அதனால் அதனை வைட்டமின் திருடன் என்பார்கள். ஆனால் கருப்பட்டி அப்படியல்ல. உடலில் உள்ள சத்துகள் அழியாமல் பாதுகாக்கிறது. மேலும், எலும்புகளுக்கும் பலம் சேர்க்கிறது. எனவே, வெள்ளை சர்க்கரை சாப்பிடுவதை தவிர்த்து, கருப்பட்டியைச் சேர்த்துக் கொள்வது நல்ல பலன்களை தரும்.

## நோய் தீர்க்கும் ஆசனங்கள்



யோகாசனப் பயிற்சிகள் செய்வதால் பல நன்மைகள் உண்டு. உடலை நல்ல நிலையில் வைத்திருப்பது மட்டுமின்றி நோய்கள் சேராமல் தடுக்கின்றன. இதனால் உடல் உள்ளுறுப்புகள் பலமடைகின்றன. வீண் சதைப் பிடிப்புகள் ஏற்படாது. சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல் அதிகப்படும்.பிராணாயாமம்: நுரையீரல் ஆரோக்கியமாகும். ரத்தம் எல்லா உடல் திசுக்களுக்கும் சென்றடையும். எனவே உடல் நன்முறையில் இயங்கும்.பதுமாசனம்: பதுமம் என்றால் தாமரை. தாமரை வடிவில் அமர்தல். ரத்த ஓட்டத்தை சீராக்கும். மூளையை நன்றாக செயல்பட உதவும். ஜீரண சக்தியை அதிகரிக்கும். செரிமான பிரச்னையை போக்கும்.

மயூராசனம்:வயிற்றுப் பிணிகள் நீங்கும். முக்குற்றங்களும் தன்னிலைப்படும். செரிமான உறுப்புகளுக்கு ரத்தம் சீராக பாயும்.

புஜங்காசனம்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். முதுகுத் தண்டுக்கு பயிற்சி கிடைக்கும்.

தனுராசனம்: பசியைத் தூண்டும். கல் பிணிகளுக்கு சிறந்தது.

சலபாசனம்:மலச்சிக்கலை போக்கும். வயிற்றின் உள் உறுப்புகளுக்கு பயிற்சி தரும். இதய நோய், நுரையீரல் நோய் உடையோர் இதை செய்யக் கூடாது.

சவாசனம்:களைப்பைப் போக்கும். உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரும்.

சிரசாசனம்:மூளைக்கு அதிகம் ரத்தம் பாய்ந்து மூளை பலப்படும். நரம்பு மண்டலத்தைத் தூண்டும். மாதவிடாய், கர்ப்ப காலங்களில் செய்யக் கூடாது.

சர்வாங்காசனம்: நரை, திரை, மூப்பை மாற்றி இளமையை உண்டாக்கும். உடலின் எல்லா உறுப்புகளும் பலப்படும். கருப்பை கோளாறு நீங்கும். தலைவலி, நாடி பலமின்மை,

மலச்சிக்கல் தீரும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

# நம் வாசவி அம்மன் சிறப்பு வழிபாடு



**ஈரோடு,ஏப்.20:**
ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் அட்சய திருதியை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வெள்ளி கவசத்துடன்,பிரசாதம், நெய் வேத்தியங் களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள் பெண்கள் அனைவரும் நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# நம் வாசவி அம்மன் தங்க கவசத்துடன் சிறப்பு வழிபாடு



**கடலூர், ஏப்.20:**
கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அட்சய திருதியை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, அனைத்து தெய்வங்களுக்கும் தங்க கவசம் அலங்காரத்துடன் , வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியம் இசைக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள் பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சீர்காழி ஸ்ரீகாழி கண்ணுடைய வள்ளல் சுவாமி அதிஷ்டானம் மஹா கும்பாபிஷேகம்

**சீர்காழி , ஏப் , 20:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் சமாது குட்டை (என்கிற) குமரக்கோவில், மேலத்தெருவில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கு சொந்தமான ஸ்ரீ காழி கண்ணுடைய வள்ளல் சுவாமி அதிஷ்டானம் உடன் ஸ்ரீபால விநாயகர் மற்றும் ஸ்ரீ பால முருகன் ஆலய அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. திரளான பக்தர்கள் கலந்துகொண்டார்கள். பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.



விழாவில் சிறப்பு விருந்தினர் களாக டாக்டர் முத்துக்குமார், சீர்காழி சட்ட மன்ற தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் சக்தி , அ.தி.மு.க. மாநில அம்மா பேரவை துணை செயலாளர் மார்கோனி , ஸ்ரீ காழி கண்ணுடைய வள்ளல் சுவாமி பக்தர் மயிலாடுதுறை மாவட்ட பா.ஜ.க. வர்த்தகர் பிரிவு மாவட்ட செயலாளர் ஜி.சுந்தரவடிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். மஹா கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை குமரக்கோவில் மேல தெரு (சமாது குட்டை ) தெருவாசிகள் மற்றும் இளைஞர் மன்றத்தினர் , சீர்காழி நகர் மன்ற முன்னாள் கவுன்சிலர் எஸ்.எஸ்.ஆர். இந்திரஜித், குமுதா டிபன் சென்டர் வீரமணி, சார்ஜா துரை , ஆட்டோ மகாலிங்கம் செய்தார்கள்.

# ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் மாணவர்களுக்கான கோடைகால இல்வச பயிற்சி வகுப்புகள் தொடக்கம்..!

**வந்தவாசி, ஏப் 20:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் மாணவர்களுக்கான கோடைக்கால இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள் ( இலவச ஓவியப் பயிற்சி, இந்தி, யோகா, கணினிப் பயிற்சி, திருக்குறள் வகுப்பு, ஸ்போக்கன் இங்கிலீஷ் பயிற்சி, சிலம்பம் உள்ளிட்டவை ) மைய வளாகத்தில் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை வகித்தார்.



ஓவிய ஆசிரியர் கலைச் சுடர்மணி பெ.பார்த்திபன் வரவேற்புரை ஆற்றினார். ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி, ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சு.நடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக, மேனாள் மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ்.குமார் பங்கேற்று, கோடைகாலத்தில் மாணவர்கள் வெளியே வெயிலில் இருந்து பாதுகாக்க இது போன்ற பயிற்சி வகுப்புகள் வழிசெய்யும். இந்த பயிற்சி வகுப்புகள் மாணவர்களுக்கு சிந்தனையை தூண்டும் வகையிலும், தன்னம்பிக்கை பயிற்சியையும் வழங்குகிறது.

எனவே மாணவர்கள் தங்களை மீத்திறன் மிக்கவர்களாக மாற்றிக் கொள்ள இப்பயிற்சி வழி வகுக்கும்.மேலும் பெற்றோர்களை மதித்து சகோதரத்துவத்துடன் அனைவரும் வாழ வேண்டும் என பேசினார். இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற கல்வித்துறை கண்காணிப்பாளர் ஜெயக்கண்ணு, ஆக்ஸ்போர்டு ஸ்போக்கன் இங்கிலீஸ் மைய ஆசிரியர் கு.சதானந்தன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக, கீழ்கொடுங் காலூர் மாணவன் சாய் வர்ஷன் நடத்திய மேஜிக் ஷோ நடைபெற்றது. மேலும் இலவச பயிற்சியில் கலந்து கொண்ட 75 மாணவர்களுக்கு இலவச கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இறுதியில் ஆசிரியர் மகாவீர் நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன்,**
**வந்தவாசி.**

# செய்யாறில் நூறு சதவீத வாக்குப்பதிவு வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி

## சார் ஆட்சியர் எல் .அம்பிகா ஜெயின் கொடி அசைத்து துவக்கி வைத்தார்

**செய்யாறு ஏப்.20:**
செய்யாறில் நூறு சதவீத வாக்குப்பதிவு வலியுறுத்தி பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் நூறு சதவீத வாக்குப்பதிவு வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி துவக்க விழா சார் ஆட்சியர் அலுவலகம் எதிரே நேற்று நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு சார் ஆட்சியர் எல். அம்பிகா ஜெயின் தலைமை தாங்கி ,விழிப்புணர்வு பேரணியை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வரும் 23ஆம் தேதி நடக்க உள்ள நிலையில் 100% வாக்குப்பதிவினை வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த சார் ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ஸ்கேட்டிங்,சிலம்பம்,சுருள்வாள் ,நாட்டியம்,மைண்ட் ஷோ உள்ளிட்ட நிகழ்வுகளை செய்த வண்ணம் விழிப்புணர்வு பேரணி பெரியார் சிலை வரை நடைபெற்றது.

பள்ளி மாணவர்கள் பங்கேற்று நடத்திய இப்பேரணி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்திருந்தது. மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருந்ததாக பலர் தெரிவித்தனர். வருவாய்த்துறை அலுவலர்கள், மாணவர்கள் படிக்கும் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள், உள்ளிட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர். மேலும் போலீசார் பேரணி செல்ல ஏதுவாக போக்குவரத்து சரி செய்திருந்தனர்.

# எ. வ. வேலு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்



திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியம் காஞ்சி ஊராட்சியில் திமுக ஆட்சி ஐந்தாண்டு சாதனைகளை எடுத்துரைத்து திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ. வ. வேலு அவர்கள், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பெ. சு. தி. சரவணன் அவர்கள் புதுப்பாளையம் ஒன்றிய காஞ்சி ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சி.வே.கணேசனுக்கு தொல். திருமாவளவன் வாக்குச் சேகரித்தார்



திட்டக்குடியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும்-சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் திட்டக்குடி பேருந்து நிலையம் அருகில் திருக்குறள் குளத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வேட்பாளர் சி.வே.கணேசனுக்கு வாக்குச் சேகரித்தார். வாக்குகள் சேகரித்ததோடு நில்லாமல், நாட்டின் அரசியலையும், பாசிச எதிர்ப்பு கொள்கைகளையும் எளிய மக்களிடம் பேசி சென்றார்.

# சின்னகரம் ஊராட்சியில் த வெ க விசில் சின்னத்தில் வாக்கு சேகரிப்பு



விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் விஜய் நிரஞ்சன் ஞாயிற்றுக்கிழமை காலை சின்னகரம், தாமனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விசில் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## ரவுசு மணி

**தேவைப்படுபவனுக்கு கிடைக்காது...**

**கிடைத்தவனுக்கோ அனுபவிக்கவே முடியாது...**

**இதுதான் இறைவனின் விளையாட்டு...**



V.முத்து ராமகிருஷ்ணன்

# ராசிபுரத்தில் ரூ.53 கோடியில் அதிநவீன அரசு மருத்துவமனை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் முயற்சி பலனளிக்கிறது

**இராசிபுரம் ,ஏப்.20:**
ராசிபுரம் தொகுதியில், ரூ.53 கோடி மதிப்பீட்டில் ஆறு அடுக்குகளுடன் அதிநவீன வசதிகளுடன் கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்து, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. ஒரு சாமானிய மனிதனின் அடிப்படை தேவைகளில் முக்கியமானது மருத்துவ வசதியாகும். வளர்ந்து வரும் ராசிபுரம் போன்ற பகுதிகளுக்கு உயர்தர மருத்துவ கட்டமைப்பு அவசியமாக இருந்து வந்த நிலையில், இதுவரை ராசிபுரம் மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு நகரப் பகுதியில் உள்ள பழைய அரசு மருத்துவமனையே முக்கிய ஆதாரமாக இருந்து வந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த மருத்துவமனை குறுகிய பரப்பளவில், அடிப்படை வசதிகளுடன் மட்டுமே இயங்கி வந்ததால், உயர் தர சிகிச்சைகள் பெற முடியாத சூழல் நிலவியது. இதனால் அவசர மற்றும் மேம்பட்ட சிகிச்சைக்காக மக்கள் சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், சென்னை போன்ற நகரங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இது பொதுமக்களுக்கு கூடுதல் செலவு, நேர விரயம் மற்றும் சில சமயங்களில் உயிரிழப்பு அபாயத்தையும் ஏற்படுத்தியது. இந்த நிலையை மாற்றும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசில், ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டாக்டர் மா. மதிவேந்தன் முன்னெடுத்த நடவடிக்கையின்படி, ரூ.53 கோடி மதிப்பீட்டில் ஆறு அடுக்குகளுடன் அனைத்து அதிநவீன மருத்துவ வசதிகளும் கொண்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.



இந்த மருத்துவமனையில் மேம்பட்ட சிகிச்சை வசதிகள், அவசர சிகிச்சை பிரிவு, நவீன உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.தற்போது கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. இந்த புதிய மருத்துவமனை மூலம் ராசிபுரம் மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு உயர்தர சிகிச்சைகள் அருகிலேயே கிடைக்கப்பெற்று, மருத்துவ சேவையில் பெரிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் உயிர் பாதுகாப்பை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த முக்கிய திட்டத்திற்காக டாக்டர் மா. மதிவேந்தன் அவர்களுக்கு பொதுமக்கள் பலரும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.தொழிலதிபர் நந்தகுமார் பேருதவி புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் நெற்றியில் மூன்றாம் பிறை சந்திரன் தோன்றும் நிகழ்வு

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்

**செய்யாறு ஏப்.20:**
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மூன்றாம் பிறை சந்திர தரிசன நிகழ்வும், மகா ஆரத்தி தரிசனமும் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த காஞ்சிபுரம்-வந்தவாசி நெடுஞ்சாலையில் உள்ள கூழமந்தல் அடுத்து உள்ள உக்கலில் பிரசித்தி பெற்ற மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் எழுந்தருளி உள்ளது.

இக்கோயிலில் அமாவாசை முடிந்து மூன்றாம் நாள் அம்பாள் நெற்றியில் மூன்றாம் பிறை சந்திரன் தோன்றி மறையும் அரிய நிகழ்வு நடைபெறும். நேற்று முன்னாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் யாக வேள்வி பூஜையினை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார் பால சன்னியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர் .மேலும் புனித கலச புறப்பாட்டிற்கு பின்னர் மூலவரான அம்பாள் நெற்றியில் மூன்றாம் பிறை சந்திரன் தோன்றும் நிகழ்வு நடைபெற்றது.

பின்னர் சிறப்பு அபிஷேகமும்,அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருள் பாலித்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

# சுற்றுலா: ராணிபுரம் மலைகளின் இயற்கை அழகு சொர்க்கம்!



ராணிபுரம் மலைவாசஸ்தலம் காத்தர்கோடு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு அழகான இடமாகும் ஒரு காலத்தில் மடத்துமலை என்று அழைக்கப்பட்டது. கேரளாவின் ஊட்டி என்று அழைக்கப்படும் ராணிபுரம் மலைகள் குளிர்ந்த காலநிலை ஆழமான காடுகள் மற்றும் வசீகரிக்கும் மலையேற்றம் புகழ் பெற்றது. செழிப்பான புல்வெளிகள் அடர்ந்த பசுமையான காடுகள் மற்றும் குளிர்ந்த காற்று ஆகியவை இராணிபுரம் மலையை சுற்றுலா பயணிகளுக்கு விருப்பமுள்ள இடமாக மாற்றுகிறது.

மலைகளால் சூழப்பட்ட இந்த ராணிபுர கிராமம் கடல் மட்டத்திலிருந்து 700 மீட்டர் உயரத்தில் உள்ளது இது டிரெக்கிங் செல்வதற்கு பெஸ்ட் ஸ்பாட் ஆகும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத இயற்கை அழகை கண்டு ரசிக்கலாம்.

மேற்கு தொடர்ச்சி மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு தாயகமாக ராணிபுரம் திகழ்கிறது காடுகள் காட்டுபூக்கள் பரந்த புல்வெளிகள் சூழ்ந்துள்ள ராணிபுரத்தை அழகிய ராட்சஷியாக இயற்கை ஆர்வலர்கள் கருதுகின்றனர்.



சுற்றுலா வாசிகளை ஈர்க்கும் வகையில் வனவிலங்கு சரணாலயமும் உள்ளது அவை கேரளாவில் வனவிலங்குகளை அதன் இருப்பிடத்திலேயே பார்க்கும் வாய்ப்பை தருகிறது.

கேரளாவின் பழமையான கோட்டைகளில் ஒன்றான பீகல் கோட்டையையும் இந்தப் பகுதியில் மாலை நேரத்தில் செல்கையில் அரபிக் கடலின் சூரிய அஸ்தமனத்தில் அழகிய காட்சியைகண்டு ரசிக்கலாம்.

காவேரி நதியின் ஆரம்ப மையமாக கருதப்படும் தலைக்காவேரி கோவிலும் மலையின் பள்ளத்தாக்கில் தான் அமைந்துள்ளது.

தனித்துவமான பசுமையான ஷோலா காடுகள் மற்றும் அழகிய புல்வெளிகள் பார்ப்பதற்கு ரம்யமாக இருக்கும் யானை வழித்தடம் இப்பகுதியில் மற்றொரு கண்கவர் இடமாகும் யானைகள் கூட்டம் தங்கள் இயற்கையான வாழ்விடங்களில் சுற்றி திரிவதை பார்த்து மகிழலாம்.

**பன்றிமலை:**

திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் இந்த மலை இருக்கிறது நீர்வீழ்ச்சிகள் நீரோடைகள் பசுமையான சூழ்நிலை என இந்த இடம் பார்ப்பதற்கு ரம்யமாக இருக்கும் ஒருநாள் பயணத்திற்கு ஏற்ற இடம்தான் பன்றிமலை.

**மஞ்சு மலை:**

கிருஷ்ணகிரி மாவட்டம் அன்செட்டில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் இந்த மஞ்சுமலை இருக்கிறது. ட்ரக்கிங் கேம்பிங் செய்வதற்கு இது ஏற்ற இடம் ஆகும். குளிர்ச்சியான வானிலையும்நமக்குபுத்துணர்வை கொடுக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### துணை ராணுவத்தில் 223 தலைமை காவலர் பணியிடங்கள்: ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்!



இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள துணை ராணுவத்தில்(சாஸ்திர சீமா பால்) காலியாக உள்ள 223 தலைமை காவலர் (ஸ்டீவர்ட்), தலைமை காவலர் (தகவல் தொடர்பு), தலைமை காவலர் (மின் பணியாளர்) மற்றும் தலைமை காவலர் (கால்நடை) ஆகிய குரூப் 'சி'பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்களிடம் இருந்துவரும் 20 ஆம் தேதிக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உடற்தகுதி: மேற்கண்ட பணிகளுக்கு ஆண்கள் 170 செ.மீ. உயரமும். பெண்கள் 157 செ.மீ. உயரமும் பெற்றிருக்க வேண்டும். ஆண்களின் மார்பளவு சாதாரண நிலையில் 80 செ.மீ. அகலமும், விரிவடைந்த நிலையில் 85 செ.மீ. அகலமும் இருக்க வேண்டும். ஆண்கள் 1.6 கி.மீ. தூரத்தை 6½ நிமிடங்களிலும், பெண்கள் 800 மீட் டர் தூரத்தை 4 நிமிடங்களிலும் ஓடி கடக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: விண்ணப்பதாரரின் உடற் தகுதி, உடற்திறன் தகுதி, மருத்துவத் தகுதி மற்றும் எஸ்எஸ்பியால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்கு தேர்வு செய்யப்படுவர். மேற்கண்ட தேர்வுக்கான நுழைவுச் சீட்டு இணையதளத்தில் வெளியிடப்படும். அதை பதிவிறக்கம் செய்து தேர்வில் கலந்து கொள்ளவும். நேர்முகத் தேர்வின்போது அனைத்து அசல் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ.100. கட்டணத்தை ஆன்லைன் முறையில் செலுத்தவும். பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: www.ssb.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 20.4.2026

# விஜய், வெற்றிபெறும் அளவுக்கு வாக்குகள் பெற மாட்டார் - அன்புமணி ராமதாஸ்

**கடலூர், ஏப். 20:**

விஜய் ஆதரவாளர்கள் அதிமுககூட்டணியான தங்களுக்கு அளியுங்கள் என அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கடலூரில் பாமக தலைவர் அன்புமணி செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது;

"மகளிர் இடஒதுக்கீடு மசோதா நகலை முதல்வராக இருந்து கொண்டு எரித்தது தேசத்துரோக செயல். இதற்கு தண்டனை வழங்க வேண்டும். இதனை பட்டாசு வெடித்து கொண்டாடிய முதல்வர் ஸ்டாலின் மனநிலையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தொகுதி மறுவரையால் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் 50 சதவீதம் உயரும்.

ஸ்டாலின் தங்கை மட்டும் தான் எம்.பி ஆக வேண்டுமா? ஒடுக்கப்பட்ட பெண்கள் எம்பி ஆகக்கூடாதா? பெண்களுக்குதுரோகம் இழைத்து விட்டு பட்டாசு வெடித்து கொண்டாடுகிறார் ஸ்டாலின். மறுவரையறைக்கும் மக்கள் தொகைக்கும் சம்பந்தமில்லை.

திமுகவுக்கு திராவிட மாடல் மீது நம்பிக்கை இல்லை. 8000 ரூபாய் கூப்பன் மீது மட்டும் தான் நம்பிக்கை உள்ளது. திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என விஜய் கட்சி துவங்கினார். விஜயகாந்தும் அதே காரணம் தான். தற்போது பிரேமலதா, திமுகவில் இருந்து தங்கள் கூட்டணிக்கு ஆதரவாக உள்ளார்.

விஜய் ஆதரவாளர்கள் தங்கள் வாக்குகளை வீணாக்காதீர்கள். அந்த வாக்குகளை அதிமுக கூட்டணியான தங்களுக்கு அளியுங்கள். திமுக வீழ்த்தப்பட வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுது நடக்கும். விஜய் வாக்குகள் பெறுவார். ஆனால் வெற்றி பெற முடியாது.

திமுக அகற்றப்பட வேண்டும் என்றால் அவரது ஆதரவாளர்கள் அதிமுக கூட்டணிக்கு வாக்களித்தால் நிறைவேறும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# கீழடியில் குறுகிய வாய் கொண்ட சுடுமண் பானை கண்டெடுப்பு

**சிவகங்கை, ஏப்.20:**



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் யூனியனை சேர்ந்த கீழடி பகுதியில் மத்திய-மாநில அரசுகள் சார்பில் ஏற்கனவே 10 கட்ட அகழாய்வு பணிகள் நடந்து முடிந்துள்ளது. 2,600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் கிடைக்கப்பெற்று கீழடியில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், சுற்றுலா பயணிகள், பள்ளி மாணவ-மாணவிகள் என தினமும் ஏராளமானோர் வந்து பார்வையிட்டும், 'செல்பி' எடுத்தும் மகிழ்கின்றனர். இதேபோல் கீழடியில் அகழாய்வு நடைபெற்ற இடத்திலேயே திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திறந்தவெளி அருங்காட்சியகத்தை தினமும் பொதுமக்கள். சுற்றுலா பயணிகள், மாணவ, மாணவிகள், வெளிநாட்டினர் என பார்வையிட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, 11-ம் கட்ட அகழாய்வு பணிகள் திறந்தவெளி அருங்காட்சியகம் அருகே 2 குழிகள் தோண்டி பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழடி அகழாய்வு தள இயக்குனர் ரமேஷ் தலைமையில் தொல்லியல் துறை மாணவர்கள், 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், கீழடி 11ம் கட்ட அகழாய்வில் மிகச்சிறிய வித்தியாசமான வடிவிலான குறுகிய வாய் கொண்ட சுடுமண் பானை கண்டெடுக்கப்பட்டு உள்ளது. இதுவரை கீழடியில் இது போன்ற பானை கண்டெடுக்கப்படவில்லை. கெண்டி மூக்கு பானை, சிவப்பு நிற முடியுடன் கூடிய பானை என அடுத்தடுத்த அகழாய்வில் கிடைத்தாலும் தற்போது கிடைத்த பானை அதில் இருந்து புதிய வடிவத்தில் உள்ளதாக கருதப்படுகிறது.\

# கோடை விடுமுறை: நீர்நிலைகளுக்கு செல்லாமல் மாணவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் - கல்வித்துறை அறிவுரை

**சென்னை, ஏப்.20:**

தமிழகத்தில்உள்ளஅனைத்துபள்ளிமாணவர்களுக்கும் கடந்த 16-ந்தேதியுடன் தேர்வுகள் நிறைவு பெற்று 45 நாட்களுக்கு கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் பள்ளிகள் ஜூன் மாதம் 1-ந் தேதி திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

மேலும் பள்ளி மாணவர்கள் கோடை விடுமுறையில் பாதுகாப்பாக இருக்க பெற்றோர்களுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மாணவர்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். விளையாடும்போது அதிக அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். மேலும் மாணவர்கள் வெயிலில் விளையாடுவதை தவிர்க்க வேண்டும்.

நீச்சல் தெரியாமல் கடல், குளம், கிணறு, ஆறுகளுக்கு சென்று குளிப்பதால் பெரும் அசம்பாவிதம் ஏற்படலாம். எனவே மாணவர்களை நீர்நிலைகளுக்கு சென்று குளிப்பதற்கு பெற்றோர்கள் அனுமதிக்கக்கூடாது. மாணவர்கள் இசை, நட னம், ஓவியம் போன்றவற்றை கற்று தனித்திறமையை மேம்ப டுத்த வேண்டும் என கல்வித்துறை அதிகாரிகள் அறிவுரை வழங்கி உள்ளனர்.

# தலையணையால் அமுக்கி தையல் தொழிலாளி கொலை: மனைவி, கள்ளக்காதலனுடன் கைது

**திண்டுக்கல், ஏப்.20:**



திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பகுதியை சேர்ந்த ரவிக்குமார் (வயது 28), தையல் தொழிலாளி. அவருடைய மனைவி கார்த்திகா (25). இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். ரவிக்குமார் திண்டுக்கல் அருகே ரெட்டியபட்டியில் வாடகை வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்தார். அந்த பகுதியில் உள்ள தையல் கடையில் அவர் வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த 16-ம் தேதி வழக்கம்போல் வேலைக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்த ரவிக்குமார், சாப்பிட்டுவிட்டு தூங்கினார். மறுநாள் காலை (நேற்று முன்தினம்) படுக்கை அறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இதுகுறித்து தகவல் அறிந்ததும் திண்டுக்கல் தாலுகா போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது ரவிக்குமாரின் காது, வாயில் இருந்து ரத்தம் வழிந்தபடி இருந்தது. இது போலீசாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனவே அவரது மனைவி கார்த்திகாவிடம் போலீசார் துருவித் துருவி விசாரணை நடத்தினர். இதில் ரவிக்குமாரை, அவரது மனைவியே கள்ளக்காதலனுடன் சேர்ந்து கொலை செய்த அதிர்ச்சி தகவல் வெளியானது.

இதைத்தொடர்ந்து போலீசார் சந்தேக மரணம் என்பதை கொலை வழக்காக மாற்றி கார்த்திகா, விக்னேஷ், நாகராஜ் ஆகிய 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# ரூ.10 ஆயிரம் காசோலை மாதிரி பிரசாரம்: அ.தி.மு.க.வினர் மீது நடவடிக்கை கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு

**சென்னை, ஏப்.20:**



சென்னையில் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு வாக்களிக்க கோரி ரூ.10 ஆயிரம் காசோலைகள் போன்ற மாதிரி துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வினியோகித்து அ.தி.மு.க.வினர் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

சென்னை பெருங்குடியை சேர்ந்த வக்கீல் சுந்தர வடிவேல் ஐகோர்ட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்களிக்க கோரி, ரூ.2 ஆயிரம், ரூ.10 ஆயிரம் எனக் குறிப்பிட்டு, காசோலைகள் போன்ற துண்டு பிரசுரங்களை அச்சடித்து மக்களுக்கு வினியோகித்து அ.தி.மு.க.வினர் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

அ.தி.மு.க.வுக்கு வாக்களித்தால் பணபலன்கள் கிடைக்கும் என மக்கள் மத்தியில் தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர். இந்த செயல், மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி ஊழல் நடவடிக்கை ஆகும். இதை அனுமதித்தால் தேர்தல் நடவடிக்கைகள் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விடுவார்கள்.

எனவே இதுதொடர்பாக விசாரணை நடத்தி, காசோலை போல மாதிரி துண்டுபிரசுரங்கள் அச்சடித்து வினியோகிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் இந்த துண்டுபிரசுரங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# சென்னை மெட்ரோ ரயிலில் அதிக சத்தத்துடன் பாட்டு கேட்டால் ரூ.500 வரை அபராதம்



**சென்னை, ஏப்.20:**
மெட்ரோ ரயில்களில் பயணிக்கும்போது, செல்போனில் அதிக சத்தத்துடன் வீடியோ பார்த்தாலோ அல்லது பாட்டு கேட்டாலோ ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படும் என, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மெட்ரோ ரயில்களில் பயணிக்கும் போது, பயணிகள் சிலர் தங்களது மொபைல் போனில் 'ஹெட்போன்' பயன்படுத்தாமல் அதிக சத்தத்துடன் பாடல்கள் கேட்பது. ரீல்ஸ் போன்ற வீடியோ பார்ப்பது. 'கேம்' விளையாடுகின்றனர். இது, சக பயணியருக்கு தொந்தரவை ஏற்படுத்துகிறது. இது குறித்து, பயணிகள் சிலர் புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயிலில் பயணிக்கும் போது, செல்போனில் அதிக சப்தத்துடன் வீடியோ பார்த்தாலோ அல்லது பாட்டு கேட்டாலோ ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மெட்ரோ ரயில் சட்டம் 2002 பிரிவு 59-ன் படி. சக பயணிகளுக்குத் தொந்தரவு விளைவிப்பதோ அல்லது அவர்களின் வசதிக்கு இடையூறு ஏற்படுத் தும் வகையில் செயல்படுவதோ தண்டனைக்குரிய குற்றமாகும். குறிப்பாக, மொபைல்போனில் உரத்த குரலில் உரையாடுதல், ஹெட்போன் இன்றி இசை அல்லது வீடியோக்களைப் பார்ப் பது போன்றவை விதிமீறல்களாகும்.

தண்டனைக்குரிய குற்றம்: இந்த செயல்கள் வாயிலாக அதிகப்படியான இரைச்சலை ஏற்படுத்தும் வகையில், மற்றவர்களுக்கு இடையூறு விளை விப்பதும் தண்டனைக்கு உரிய குற்றமாகக் கருதப்படும். இச்சட்டத்தின்படி, விதியை மீறும் பயணிகளுக்கு ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படலாம். மேலும், தேவைப்பட்டால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் மெட்ரோ வளாகத்தில் இருந்து அவர்கள் வெளி யேற்றப்படவும் வாய்ப்புள்ளது.

எனவே, சக பயணியரின் பயணச் சூழலைக் கருத்தில் கொண்டு, அனைவரும் ஹெட்போன்களைப்பயன்படுத்த வேண்டும். மெட்ரோ ரயில் மற்றும் அதன் வளாகத்துக்குள் உரத்த குரலில் உரையாடுதல் மற்றும் 'ஸ்பீக்கர் மோட்' பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### மத்திய பிரதேசத்தில் பட்டப்பகலில் வங்கியில் புகுந்து ரூ.15 கோடி மதிப்புள்ள நகை, ரொக்கம் கொள்ளை

**போபால், ஏப்.20:**
பட்டப்பகலில் வங்கியில் புகுந்து ரூ.15 கோடி மதிப்புள்ள நகைகள், ரொக்கம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் மத்திய பிரதேசத்தில் நடந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் சிங்க்ராவ்லி மாவட்டத்தில் மகாராஷ்டிர வங்கிக் கிளை உள்ளது. இந்த வங்கிக் கிளைக்கு நேற்று முன்தினம் பிற்பகலில் 2 பேர் வாடிக்கையாளர்கள் போல வந்தனர். அவர்கள் உள்ளே வந்தவுடன் அடுத்ததாக 3 பேர் உள்ளே நுழைந்தனர். உள்ளே வந்ததும் 5 பேரும் தங்களிடமிருந்த துப்பாக்கிகளை எடுத்து மேலே சுட்டு வாடிக்கையாளர்களை பயமுறுத்தினர். அனைவரையும் துப்பாக்கி முனையில் மிரட்டி வங்கி மேலாளரை அழைத்து லாக்கர் சாவிகளைக் கேட்டனர். அவர் தரமறுத்த போது அவரது தலையில் துப்பாக்கியின் பின்பகுதியால் தாக்கி சாவியைப் பிடுங்கினர். இதில் வங்கி மேலாளர் தலையில் காயமடைந்தார். 2 பேர் லாக்கர் ரூமில் நுழைந்து, வங்கிக் கிளையில் பொதுமக்கள் அடகு வைத்திருந்த நகைகளை அள்ளினர். மீதமிருந்த 3 பேரும் வாடிக்கையாளர்கள், வங்கி ஊழியர்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி வைத்திருந்தனர்.

20 நிமிடங்களில்.. அவர்கள் உள்ளே புகுந்த 20 நிமிடங்களில் தங்க நகைகள், ரொக்கத்தை கொள்ளை அடித்துக் கொண்டு தப்பிவிட்டனர். போலீஸார் வருவதற்குள் அவர்கள் தப்பியோடிவிட்டதாக வங்கி மேலாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து சிங்க்ராவ்லி போலீஸ் எஸ்.பி. மணீஷ் காத்ரி கூறும்போது, "பட்டப்பகலில் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. 9 முதல் 10 கிலோ எடையுள்ள தங்க நகைகள், ரூ.20 லட்சம் ரொக்கம் என மொத்தம் ரூ.15 கோடி மதிப்புள்ள பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

வந்தவர்களில் ஒருவர் மட்டுமே ஹெல்மெட் போட்டு வந்துள்ளார். மற்றவர்கள் அனைவரும் முகங்களை மறைக்காமலேயே வந்துள்ளனர். அருகில் இருந்த கடைகளில் வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான முகங்களை வைத்து அவர்களைத் தேடி வருகிறோம். நகைகளைக் கொள்ளை அடித்ததும் அவர்கள் மோட்டார் சைக்கிள்களில் தப்பியோடி உள்ளனர்" என்றார்.

### தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட 4 பேரை கைது செய்தது போலீஸ்



**புதுடெல்லி, ஏப்.20:**
டெல்லி போலீஸ் சிறப்புப் பிரிவு துணை ஆணையர் பிரவீன் குமார் திரிபாதி கூறியதாவது:

மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் பிஹார் மாநிலங்களைச் சேர்ந்த சிலர் ஆன்லைன் மூலமாக தீவிரவாத குழுவை ஏற்படுத்தி வருவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து இந்த கும்பலை கண்காணித்து வந்தோம். இதையடுத்து மகாராஷ்டிராவின் தானேவைச் சேர்ந்த மொசைப் அகமது என்ற சோனு, மும்பையைச் சேர்ந்த முகமது ஹமாத், ஒடிசாவின் புவனேஸ்வரைச் சேர்ந்த ஷேக் இம்ரான், பிஹாரின் கதிஹாரைச் சேர்ந்த முகமது ஷோகைல் ஆகிய 4 பேரை கைது செய்தோம். இவர்கள் தீவிரவாத அமைப்பு மற்றும் முஸ்லிம் நாடு உருவாக்கும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்கள். ஜாகிர் நாயக் போன்ற மத பேச்சாளர்களின் உரைகளால் ஈர்க்கப்பட்டவர்கள். இவர்கள் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட தயாராகி வந்ததோடு, ஆன்லைன் மூலம் பிறரையும் தீவிரவாத இயக்கத்தில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சமூக ஊடகங்கள் மூலம் இந்த கும்பல் தீவிரவாத கொள்கைகளைப் பரப்புதல், பயிற்சி திட்டம், நிதி திரட்டுதல் பற்றி விவாதங்கள் நடத்தியுள்ளனர். ஒருவர் டெல்லி செங்கோட்டை, இந்தியா கேட் ஆகிய இடங்களுக்கு கடந்த டிசம்பரில் சென்று ஆய்வு நடத்தியுள்ளார். இவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், செல்போன்களை பறிமுதல் செய்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விளையாட்டு செய்திகள்

### ஹம்பர்க் ஓபன் ஸ்குவாஷ்: கால் இறுதி சுற்றில் வீர் சோட்ரானி தோல்வி

**ஹம்பர்க், ஏப்.20:**
ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் ஹம்பர்க் ஓபன் ஸ்குவாஷ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையர் கால் இறுதி சுற்றில் இந்தியாவின் வீர் சோட்ரானி, போட்டித் தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள பிரான்ஸின் பாப்டிஸ்ட் மசோட்டியுடன் மோதினார்.

69 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாப்டிஸ்ட் மசோட்டி 12-10, 9-11, 14-12, 9-11, 11-6 என்ற செட் கணக்கில் வீர் சோட்ரானியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.

### பயிற்சியாளர்களுக்கு கருத்தரங்கம்

**சென்னை, ஏப்.20:**
தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களிலும் கோடைகால கிரிக்கெட் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. 21 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்த பயிற்சி முகாம் யு-14, யு-16 மற்றும் யு-19 வயதுக்குட்பட்ட மாவட்ட அளவிலான கிரிக்கெட் வீரர்களின் திறன், உடற்தகுதி மற்றும் ஒட்டுமொத்த செயல்பாட்டை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

இந்த முகாமுக்கு பயிற்சியாளர்களைத் தயார் செய்யும் வகையில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நேற்று பயிற்சியாளர்களுக்கான கருத்தரங்கை நடத்தியது.

இந்தக் கருத்தரங்கை பிசிசிஐ-சிஓஇ நிலை-3 பயிற்சியாளரா எம்.சஞ்சய் நடத்தினார். பிசிசிஐ ஜூனியர் தேர்வுக் குழுவின் தலைவர் எஸ்.சரத்தும் பங்கேற்று தனது கருத்துகளைப் பயிற்சியாளர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

டி.என்.சி.ஏ அகாடமியின் இணை இயக்குனர் எம். சண்முகம், தலைமை உடற்பயிற்சி நிபுணர் நந்தகுமார், உடற்தகுதி மற்றும் மனவலிமை பயிற்சியாளர்கள் மானவ் கிஷோர், சண்முக பிரியங்கா ஆகியோரும் பயிற்சியாளர்களிடையே உரையாற்றினர். தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் பயிற்சியாளர்களுக்கான கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

### சீனியர் டிவிஷன் கால்பந்தில் ஏஜிஓ வெற்றி

**சென்னை, ஏப்.20:**
சென்னை கால்பந்து சங்கம் சார்பில் சீனியர் டிவிஷன் போட்டிகள் செனாய் நகரில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கால்பந்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஏஜிஓ - இந்தியன் வங்கி அணிகள் மோதின. இதில் ஏஜிஓ அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் ரக் ஷித் (26-வது நிமிடம்), ஷமீர் (46-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் தளபதி ஸ்டாலின் எஃப்சி - தாவூத் மெமோரியல் எஃப்சி அணிகள் மோதின. இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிடைந்தது. தளபதி ஸ்டாலின் அணி தரப்பில் 57-வது நிமிடத்தில் ஆகாஷ் கோல் அடித்தார். தாவூத் மெமோரியல் அணி தரப்பில் 79-வது நிமிடத்தில் கிஷோர் கோல் அடித்தார்.

# மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி; தென்மாநிலங்களுக்கோ, பெண்களுக்கோ எந்த நன்மையும் இல்லை - ஜெகன் மோகன் ரெட்டி



**அமராவதி, ஏப்.20:**
நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீது நேற்று மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் மசோதாவை நிறைவேற்றுவதற்கு தேவையான பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காததால் மசோதா தோல்வி அடைந்ததாக சபாநாயகர் அறிவித்தார்.

இந்நிலையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்ததால் தென்மாநிலங்களுக்கோ, பெண்களுக்கோ எந்த நன்மையும் இல்லை என ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்-மந்திரி ஜெகன் மோகன் ரெட்டி விமர்சித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

"எதிர்க்கட்சிகள் தங்களைத் தாங்களே சுயபரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் எதை சாதித்துவிட்டார்கள்? உண்மை என்னவென்றால், நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மூலம் தென்னிந்தியாவிற்கான மக்களவை இடங்களின் எண்ணிக்கை குறையும். அதே சமயம், மகளிர் இட ஒதுக்கீடு மசோதா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனால் தென்மாநிலங்களுக்கோ, பெண்களுக்கோ எந்த நன்மையும் இல்லை. 2026 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வந்தால், தெற்கின் நிலைமை இன்னும் மோசமாகும்; குடும்பக் கட்டுப்பாடு விஷயங்களில் ஒழுக்கமாக இருப்பதற்காக தென்மாநிலங்கள் மேலும் தண்டிக்கப்படும்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரூ.12,500 கோடியில் குழாய் வழியாக எல்.பி.ஜி. வினியோக திட்டம்: ஆயத்த பணிகள் தீவிரம்



**புதுடெல்லி, ஏப்.20:**
நாட்டில் தற்போது திரவநிலை எரிவாயு (எல்.பி.ஜி.) இறக்குமதி முனையங்களில் இருந்து சுத்திகரிப்பு ஆலைகளுக்கு டேங்கர் லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இதுபோல சிலிண்டர்களில் கியாஸ் நிரப்பும் ஆலைகளுக்கும் லாரிகளிலேயே கொண்டு செல்லப்படுகிறது. சாலை மார்க்கத்தில் இவை கொண்டு செல்லப்படுவதால் போக்குவரத்தில் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஆபத்தான ஒரு பயணமாகவும் இருக்கிறது.

இதனை தவிர்க்க இறக்குமதி முனையங்கள், சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் நிரப்பு ஆலைகள் ஆகியவற்றை குழாய் வழி மூலம் இணைக்க திட்டம் தீட்டப்பட்டது. டேங்கர் லாரிகளில் எடுத்துச் செல்லாமல் இறக்குமதி முனையங்களில் இருந்தே எல்.பி.ஜி. குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்பட்டு விடும். இதனால் எந்த பிரச்சினையும் ஏற்படாது.

இந்த திட்டத்தை இந்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் முன்னெடுத்து உள்ளது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக. 9 எல்.பி.ஜி. குழாய் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளன. இந்த குழாய் வழிகளுக்கான ஏலத்தை அது நடத்தி இருக்கிறது.

இதில் தற்போது, 4 வழித்தடங்களுக்கான ஏல முன்மொழிவுகள் இறுதி செய்யப்பட உள்ளன. இதற்கான ஆயத்த பணிகள் நடந்து வருகின்றன. இந்த குழாய் வழி அமைப்பின் மொத்த நீளம் 2,500 கி.மீ. ஆகும். இது செர்லபள்ளி-நாக்பூர், ஷிக்ராபூர்-ஹூப்ளி-கோவா, பாரதீப்-ராய்ப்பூர் மற்றும் ஜான்சி-சிதர்கஞ்ச் ஆகிய வழித்தடங்களில் அமைக்கப்படுகிறது. இதற்கான உத்தேச முதலீடு ரூ.12,500 கோடி ஆகும். இந்த திட்டம், தடையற்ற, அதிக அளவிலான எல்.பி.ஜி. போக்குவரத்தை சாத்தியமாக்கும் என்றும், வினியோகச் சங்கிலியில் பாதுகாப்பையும், செயல்திறனையும் மேம்படுத்துவது மட்டுமல்லாமல், மற்ற போக்குவரத்து முறைகளை விட மிகவும் சிக்கனமானதாகவும் இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

## வணிகச் செய்திகள்

### மெட்டா நிறுவனத்தில் விரைவில் 16,000 ஊழியர்கள் பணிநீக்கம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், மென்லோ பார்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு மெட்டா நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனம் வாட்ஸ் அப், பேஸ் புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்களை நிர்வகித்து வருகிறது. தற்போது மெட்டா நிறுவனத்தில் சுமார் 79,000 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களில் 16,000 பேரை அடுத்த சில மாதங்களில் பணிநீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. முதல்கட்டமாக மே மாதம் 8,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர்.

இதுகுறித்து மெட்டா நிறுவன வட்டாரங்கள் கூறும்போது, "நிறுவனத்தின் பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. இதனால் நிறுவனத்தின் ஊழியர்களில் 20% பேரை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏஐ தொழில்நுட்பத்தால் ஊழியர்களின் தேவை குறைந்து வருகிறது. மேலும் நிறுவனத்தின் செலவும் படிப்படியாக குறைந்து வருகிறது" என்று தெரிவித்தன.

கரோனா பெருந்தொற்று காரணமாக மெட்டா நிறுவனத்தில் 21,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அதன்பிறகு தற்போது அந்த நிறுவனம் மீண்டும் மிகப்பெரிய எண்ணிக்கையில் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய இருக்கிறது. மெட்டா மட்டுமன்றி பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்து உள்ளன.

# தலைமை தேர்தல் ஆணையரை பதவிநீக்க கோரி மீண்டும் நோட்டீஸ் அளிக்க எதிர்க்கட்சிகள் திட்டம்



**புதுடெல்லி, ஏப்.20:**
நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) அமல்படுத்தும் விவகாரத்தில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பதவி நீக்க தீர்மானத்தை கொண்டு வந்தனர். ஆனால் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனும் அந்த தீர்மானத்தை நிராகரித்தனர்.

தற்போது தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததை அடுத்து தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமாரை பதவி நீக்க கோரி மீண்டும் தீர்மான நோட்டீஸ் தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். மேலும், காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி மற்றும் திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த குறைந்தது ஐந்து மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரைப் பதவியிலிருந்து நீக்கும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான புதிய அறிவிப்பை வரைவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும், இந்த அறிவிப்பு எந்த அவையில் தாக்கல் செய்யப்படும் அல்லது கடந்த முறை செய்தது போல் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தப்படுமா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# பிகார் புதிய அரசு மீது ஏப்.24-இல் நம்பிக்கை வாக்கெடுப்பு



**பாட்னா, ஏப்.20:**

பிகாரில் முதல்வர் சாம்ராட் சௌதரி தலைமையிலான புதிய அரசு மீது ஏப்.24-இல் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

பிகார் முதல்வராக பதவி வகித்து வந்த ஐக்கிய ஜனதா தளம் தலைவா நிதீஷ் குமார், மாநிலங்களவை எம்.பி.யாக அண்மையில் தோ்வானார். முதல்வா் பதவியில் இருந்து அவா் கடந்த ஏப்.14-இல் விலகியதையடுத்து, துணை முதல்வராக இருந்த பாஜகவின் சாம்ராட் சௌதரி புதிய முதல்வராக தோ்வு செய்யப்பட்டாா். பிகாரின் 24-ஆவது முதல்வராக அவா் கடந்த ஏப்.15-இல் பதவியேற்றாா். அவருடன் ஐக்கிய ஜனதா தளம் மூத்த தலைவா்கள் விஜய் குமாா் சௌதரி, பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோா் துணை முதல்வா்களாகப் பதவியேற்றனா்.

சாம்ராட் சௌதரியின் அமைச்சரவை விரைவில் விரிவாக்கம் செய்யப்படும் என எதிா்பாா்க்கப்படுகிறது.

இந்நிலையில், மாநில அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘முதல்வா் சாம்ராட் சௌதரி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, சட்டப் பேரவையில் ஏப்.24-ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு கோரவுள்ளது. இதையொட்டி, அன்று ஒரு நாள் அமா்வு நடைபெறும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வா் மாற்றத்தின் பின்னணி: கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பிகாா் பேரவைத் தோ்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களுடன் ஆட்சியைத் தக்கவைத்தது. பாஜக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்ததுடன் (89), தொடா்ந்து இரண்டாவது தோ்தலாக ஐக்கிய ஜனதா தளத்தைவிட (85) அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

அதேநேரம், மாநில முதல்வராக 10-ஆவது முறையாக நிதீஷ் குமாா் பதவியேற்றாா். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக முதல்வராகப் பதவி வகித்துவந்த அவா், கடந்த மாா்ச் மாதம் மாநிலங்களவைத் தோ்தலில் போட்டியிட்டு எம்.பி.யானாா்.

பாஜக தலைமையில் புதிய அரசு பதவியேற்க வழிவிடும் வகையில், முதல்வா் பதவியில் இருந்து நிதீஷ் குமாா் ராஜிநாமா செய்தாா்.

## மகளிர் மசோதா நிறைவேறாதது அரசின் தோல்வி அல்ல: மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கருத்து

**புதுடெல்லி, ஏப்.20:**

மக்களவையில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல் படுத்த வகை செய்யும் மசோதா நிறைவேற்றப்படாதது அரசின் தோல்வி அல்ல என்று மத்தியஅமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்பு கூட்டம் கடந்த 16-ம் தேதி தொடங்கிது. அன்றைய தினம் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த வகை செய்யும் அரசியல் சாசன திருத்த (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகியவை மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பிறகு நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் மசோதா தோல்வி அடைந்தது. இந்நிலையில், 3-ம் நாளான நேற்று மக்களவை கூடியதும், சபாநாயகர் ஓம் பிர்லா நிறைவு உரையாற்றினார். இத்துடன் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்தது. இதையடுத்து, நாடாளுமன்றம் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் கூறும்போது, “எங்களிடம் பெரும்பான்மை உள்ளது. ஆனால், அரசியலமைப்பு திருத்த மசோதாவை நிறைவேற்ற தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை எங்களுக்குக் கிடைக்க வில்லை. இதனால் வாக்கெடுப்பின் போது மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்தது.

எனினும், இதை அரசின் தோல்வியாகக் கருதக் கூடாது. இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டதால், பெண் களின் கோபத்தை காங்கிரஸ் கட்சி எதிர்கொள்ள வேண் டியிருக்கும். பெண்களுக்கு எதிரானவர்கள் என்ற பெய ரால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்க்கட்சிகள் அனுபவிக்க வேண்டியிருக்கும்” என்றார்.

## “நேருக்கு நேர் விவாதிக்கத் தயாரா?” பவன் கல்யாணுக்கு பிரகாஷ் ராஜ் சவால்

**ஹைதராபாத், ஏப்.20:**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா தொடர்பாக ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் வெளியிட்ட கருத்துக்கு, நடிகர் பிரகாஷ் ராஜ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பொய்களைப் பரப்புவதை நிறுத்துமாறு கூறியுள்ள அவர், இது குறித்துப் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு பவன் கல்யாணுக்கு சவால் விடுத்துள்ளார்.

முன்னதாக சனிக்கிழமை எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்த பவன் கல்யாண், “நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுத் தடுத்துள்ளன. இதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்தை விட அரசியல் கணக்குகளுக்கே அவர்கள் முக்கியத்துவம் அளிப்பது தெளிவாகிறது. பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய ஆட்சிமுறைக்கான நீண்டகால நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் தாமதப்படுத்துகின்றன” என்று சாடியிருந்தார். பவன் கல்யாணின் இந்தப் பதிவிற்குப் பதிலடி கொடுத்துள்ள பிரகாஷ் ராஜ், “பிரதமர் மோடியைத் திருப்திப்படுத்துவதற்காக குடிமக்களிடம் பொய் சொல்வதை நிறுத்துங்கள். மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2023-லேயே அங்கீகரிக்கப்பட்டது. அதை இப்போதும் நிறைவேற்ற முடியும். ஆனால், உங்கள் தரப்பினர் தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்றவே துடிக்கிறார்கள்.

தொகுதி மறுவரையறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், ஆந்திரா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பலவீனமடையும். உங்களைத் துணை முதல்வராக்கிய ஆந்திர மக்களின் சுயமரியாதையையும், மாநில உரிமைகளையும் அடகு வைக்காதீர்கள். இது குறித்து உங்களுக்கு விளக்க நான் விவாதத்திற்குத் தயார். நீங்கள் தயாரா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## “என்டிஏ ஆட்சி அமைந்ததும் திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவோம்” - ராஜ்நாத் சிங்



**தென்காசி,ஏப்.20:**

“தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்தவுடன் திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவோம்,” என்று மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சுப்பிரமணிய சுவாமி பக்தர்கள் பூஜை செய்யும் உரிமைகளையும் பறிக்கிறார்கள். திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் தீபம் ஏற்றச் சென்ற பக்தர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர். உயர் நீதிமன்றம் திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற அனுமதி அளிக்க வேண்டும் என்று சொல்லியது. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்தவுடன் திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவோம்.

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு கொண்டுவரும் மசோதாவை திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் தடுத்து நிறுத்தின. தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாக உள்ளது.

மாநிலத்தில் கடன் தொகை 10.27 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் கடன் மட்டும் உயர்ந்துள்ளது. ஆனால் மக்களுக்கு எதுவும் நடக்கவில்லை. மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு நிதி தரவில்லை என்று பொய் செல்கின்றனர் என்றனர்.

## காங்கிரஸை அவமதிக்கும் உரை: ஜெய்ராம் ரமேஷ் கண்டனம்

**புதுடெல்லி, ஏப்.20:**

பிரதமர் மோடியின் உரை காங்கிரஸை அவமதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் உரைக்கு கண்டனம் தெரிவித்து எக்ஸ் தளத்தில் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட பதிவில், ‘மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் மசோதா தோல்வியடைந்ததற்காக நாட்டு மக்களிடம் பிரதமர் மன்னிப்புக் கோருகிறார். ஆனால், மகளிரின் பெயரைப் பயன்படுத்தி பாகுபாடான தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை வஞ்சகமாகத் திணிக்க முயன்றகே அவர் உண்மையாக மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்கும் மேலாக நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்ட சட்டத்தை, ஒரே நாளில் கூட்டாட்சித் தத்துவம் மற்றும் ஜனநாயகத்தை பலவீனமடையச் செய்யும் விதமாக அமல்படுத்த முயன்ற பிரதமர் மோடி தலைமையிலான அரசின் நாடகத்தை நாடே அறியும்.

தற்போதைய மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் மசோதாவை உடனடியாக அறிமுகப்படுத்த பிரதமர் மோடி தயாரா?

மக்களவையில் தனது அரசு பெரும் பின்னடைவைச் சந்தித்ததை மூடி மறைக்க நாட்டு மக்களிடம் உரையாற்றும் பிரதமர் மோடி, செய்தியாளர்களைச் சந்தித்து இதுகுறித்து விளக்கமளிக்க இப்போதும் அஞ்சுகிறார்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அரிய நோய் பாதித்த சிறுமியின் மருந்துக்கு ஆந்திர அமைச்சர் லோகேஷ் ரூ.6 கோடி நிதியுதவி

**கர்னூல், ஏப்.20:**

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம், பெல்துர்த்தியை சேர்ந்த சுரேஷ் - புஷ்பலதா தம்பதிக்கு கடந்த ஆண்டு ஏப்.12-ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந் தைக்குப் பிறந்தது முதலே ‘ஸ்பைனல் மஸ்குலர் அட் ராபி’ (எஸ்எம்பி) எனும் அரிய வகை நோய் இருந்தது.

மேலும் நோய்க்குச் சிகிச்சை அளிக்க தேவைப் படும் ஒரு ஊசியின் மதிப்பு ரூ.16 கோடி எனவும் அந்த மருந்து வெளிநாட்டில் இருந்து வரவழைக்க வேண்டும் என்றும்மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக குழந்தை புனர்விகாயின் பெற்றோர் சமூக வலைதளங் கள் மூலம் உதவி கோரினர். இதில் கடந்த ஓராண்டில் ரூ.10 கோடி மட்டுமே வசூலானது. இதுகுறித்து தகவல் அறிந்த ஆந்திர கல்வித் துறை அமைச்சர் நாரா லோகேஷ், ஹைதராபாத்தில் அக்குழந்தை கிசிச்சை பெறும் மருத்து வமனைக்கு சென்றார். குழந்தையின் பெற்றோரை நலம் விசாரித்த அவர், மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். தானே வழங்குவதாக உறுதி அளித்தார். இதையடுத்து வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ஊசி மருந்தை நேற்று அவர் நேரில் வழங்கினார். அந்த ஊசி புனர்விகா க்கு செலுத்தப்பட்டது. அப்போதுகுழந் தையின் பெற்றோர் அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

## விசாரணை நீதிபதிகளை உயர் நீதிமன்றம் பகிரங்கமாக விமர்சிப்பது சரியல்ல: உச்ச நீதிமன்றம்



**புதுடெல்லி, ஏப்.20:**

விசாரணை நீதிமன்ற நீதிபதிகளை உயா்நீதிமன்ற நீதிபதிகள் பகிரங்கமாக விமா்சிக்கும் போக்கு சரியல்ல என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

வாடகைக்கு குடியிருப்பது தொடா்பான குற்ற வழக்கு ஒன்றில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஜாமீனை கொல்கத்தா உயா்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.

அந்த உத்தரவை உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோா் அடங்கிய அமா்வு அண்மையில் ரத்து செய்தது. அப்போது அந்த அமா்வு கூறியதாவது: வழக்கு விசாரணையை மேற்பாா்வை செய்யும்போது அல்லது மேல்முறையீடு மற்றும் மறுஆய்வு விசாரணைமேற்கொள்ளும்போது விசாரணை நீதிமன்ற நீதிபதிகள் குறித்து எதிா்மறையான கருத்துகளை உயா்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவிப்பது வாடிக்கையாகி வருகிறது.

மாவட்ட நீதித் துறையில் பணியாற்றும் நீதிபதிகளின் பாதுகாவலராக உயா்நீதிமன்றம் இருக்க வேண்டும்.

விசாரணை நீதிமன்ற நீதிபதியின் உத்தரவில் குறைபாடுகள் இருந்தால், உடனடியாக அவருக்கு எதிராக பாதகமான அல்லது இழிவுபடுத்தும் கருத்துகளை உயா்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவிக்கக் கூடாது.

இதுபோன்ற கருத்துகள் அல்லது கடுமையான விமா்சனங்கள் மாவட்ட நீதித் துறை நம்பிக்கையை இழக்க வழிவகுப்பதுடன், சம்பந்தப்பட்ட நீதிபதியின் தொழில்முறைவாழ்க்கையையும் சீா்குலைக்கக் கூடும் என்று தெரிவித்தது.

## தேர்தல் விதிகளுக்கு மத்தியில் பிரதமர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் மோடி: கார்கே கடும் தாக்கு



**புதுடெல்லி, ஏப்.20:**

தேர்தல் நடத்தை விதிகளுக்கு மத்தியில் பிரதமரின் அதிகாரத்தை மோடி தவறாகப் பயன்படுத்துவதாக காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து, கார்கேவின் சமூக ஊடகப் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, “கடந்த 12 ஆண்டுகளாக நாட்டு மக்களுக்காக எதையும் செய்யாத பிரதமர் மோடி, தனது அதிகாரபூர்வ உரையில் அப்பட்டமான பொய்கள் நிறைந்த ஓர் அரசியல் பேச்சாக மாற்றியுள்ளார். தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது, எதிர்க்கட்சிகளைத் தாக்கும் நோக்கில், தனது அதிகாரத்தை பிரதமர் மோடி தவறாகப் பயன்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இது ஜனநாயகத்துக்கும் அரசியலமைப்புக்கும் இழைக்கப்படும் அநீதியாகும்.

உரையில், காங்கிரஸை 59 முறையும், பெண்களை ஒருசில முறை மட்டுமே பிரதமர் மோடி குறிப்பிட்டார். இதுவே, அவரது முன்னுரிமை குறித்து விளக்குகிறது.

பாஜகவின் முன்னுரிமை, பெண்கள் அல்ல; காங்கிரஸ்தான். ஏனெனில், காங்கிரஸ் சரியான பக்கம் நிற்கிறது. காங்கிரஸ், எப்போதும் பெண்களுக்கானஇடஒதுக்கீட்டை ஆதரித்து வருகிறது. 2010-ல் மாநிலங்களவையில் பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றிய கட்சி நாங்கள்தான். அந்த மசோதாவை மக்களவையில் பாஜகவால் நிறைவேற்ற முடியவில்லை.

2023-ல் மற்றொரு மசோதாவை அவர்கள் கொண்டு வந்தனர். அதையும் காங்கிரஸ் ஆதரித்தது. அந்த மசோதா இன்னும் நிலுவையிலேயே உள்ளது.

உண்மையில், மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா விவாதத்தின்போதே இது அறிவிக்கப்பட்டது. இதனைச் செய்ததும் அதே பிரதமர்தான்.

பாஜகவின் சொந்த மசோதாவை அறிவிக்க 3 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதே, இந்தியாவின் நாரி சக்தி (பெண்கள் சக்தி) மீதான அவர்களின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. மக்களிடம் பொய் கூறுவதை மோடி நிறுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# ரூ. 12,980 கோடி நிதி தொகுப்புடன் ‘பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்’: மத்திய அமைச்சரவை ஒப்புதல்



**புதுடெல்லி, ஏப்.20:**

தொடர் கடல்சார் காப்பீடு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ரூ. 12,980 கோடி நிதி தொகுப்புடன் கூடிய ‘பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்’ என்ற உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்குவதற்கான பரிந்துரைக்கு மத்திய அரசு சனிக்கிழமை ஒப்புதல் அளித்தது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்காசியபோர்காரணமாக இந்தியசரக்குகப்பல்கள்மற்றும் இந்தியா நோக்கி வந்த சரக்கு கப்பல்களின் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டு, ஏற்றுமதியாளர்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தனர். பாதிப்பிலிருந்து அவர்கள் மீளும் வகையில் சிறப்பு காப்பீட்டுத்திட்டங்களைமத்திய அரசு அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது, உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

இந்திய கொடி பொருத்திய அல்லது இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள கப்பல்கள் மற்றும் இந்தியாவிலிருந்து புறப்படும் அல்லது இந்தியா நோக்கி வரும் சரக்கு கப்பல்களுக்கு ஓர் இறையாண்மை உத்தரவாதத்தை அளிக்கும் விதமாக ‘பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்’ என்ற உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்கமத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதி தொகுப்பு, நிலையற்ற கடல் வழிப் பாதைகளைக் கடக்கும் சர்வதேச நாடுகளிலிருந்து இந்திய துறைமுகங்களுக்கு சரக்குகளை ஏற்றி வரும் கப்பல்கள் மற்றும் இந்திய துறைமுகங்களிலிருந்து சர்வதேச நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு மலிவு விலை காப்பீடு தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யும். குறிப்பாக, கப்பலின் உடல் பகுதி, இயந்திரங்கள் பழுது, சரக்குகள் பாதிப்பு மற்றும் போர் அபாயங்கள் உள்ளிட்ட அனைத்து கடல்சார் அபாயங்களையும் உள்ளடக்கியதாக இந்தத் தொகுப்பு இருக்கும் என்று குறிப்பிட்டார்.

உ.பி., ஆந்திரத்தில் ரூ. 24,815 கோடியில் ரயில் வழித்தட திட்டம்: உத்தர பிரதேசம், ஆந்திர மாநிலங்களில் ரூ. 24,815 கோடிமதிப்பில் இரண்டுபல்வழி ரயில் பாதைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்தத் திட்டத்தின் கீழ், உத்தர பிரதேசத்தில் காஜியாபாத்திலிருந்து சித்தாபூர் வரை 403 கி.மீ. தொலைவுக்கு 3-ஆவது மற்றும் 4-ஆவது ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளது. ஆந்திர மாநிலத்தில் ராஜமுந்திரி முதல் விசாகப்பட்டினம் வரையிலான 198 கி.மீ. தொலைவுக்கு 3-ஆவது மற்றும் 4-ஆவது ரயில் வழித் தடங்கள் அமைக்கப்பட உள்ளன. இது, இந்த இரு மாநிலங்கள் மார்க்கமான ரயில் போக்குவரத்தை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவில் பயங்கர தீ விபத்து: 200 வீடுகள் எரிந்து நாசம்!



**மலேசியா, ஏப்.20:**

மலேசியாவில் நிகழ்ந்த பயங்கர தீ விபத்தில் 200 வீடுகள் எரிந்து நாசமாகின.

மலேசியாவின் சபா மாகாணத்தில் உள்ள கடலோரக் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் சுமார் 200 வீடுகள் எரிந்து நாசமாகின. நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மாநில செய்தி நிறுவனமான பெர்னாமா தெரிவித்துள்ளது.

இது குறித்து மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் படைத் தலைவர் ஜிம்மி லாகுங் கூறியதாவது, பலத்த காற்று மற்றும் வீடுகள் மிக நெருக்கமாக இருந்ததே தீ மிக வேகமாகப் பரவக் காரணமாக அமைந்தது. மேலும், கடல் நீர் மட்டம் குறைவாக இருந்ததால் தீயை அணைக்கத் தேவையான தண்ணீரைப் பெறுவதிலும் சிரமம் ஏற்பட்டது என்றார்.

இந்தத் தீ விபத்து சபாவின் புகழ்பெற்ற 'நீர் கிராமங்களில்' ஒன்றில் நிகழ்ந்துள்ளது. இக்கிராமங்களில் வீடுகள் மரத்தினால் செய்யப்பட்டு, தூண்களின் மேல் கட்டப்பட்டிருக்கும்.

இங்கு நாட்டின் மிகவும் ஏழ்மையான சமூகத்தினர், நாடற்றவர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகள் மற்றும் தற்காலிக மறுவாழ்வு வசதிகளை வழங்க கூட்டரசு அரசாங்கம் சபா அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு வருவதாகப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்தார்.

## உக்ரைனில் 10 ஆயிரம் அரிய கலைப்பொருட்கள் மாயம்: ரஷியா கைவரிசை

**கீவ், ஏப்.20:**

உக்ரைனின் கெர்சன் நகரில் உள்ள கலை அருங்காட்சியகத்தில் இருந்த அமெரிக்கா முதல் ஜப்பான் வரையிலான சுமார் 14 ஆயிரம் அரிய படைப்புகளில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்கள் மற்றும் சிலைகளை ரஷியப் படைகள் லாரிகளில் ஏற்றிச் சென்றுள்ளன.

உக்ரைன் படைகள் மீண்டும் இப்பகுதியைக் கைப்பற்றிய பிறகு அருங்காட்சியகத்துக்குள் சென்ற அதன் இச்யக்குநர் அலினா டோட்சென்கோ, காலி அலமாரிகளைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார். "வெற்று அறைகளைப் பார்த்ததும் என் கால்கள் தளர்ந்துவிட்டன, ஒரு குழந்தையைப் போல சுவரோரம் அமர்ந்து அழுதுவிட்டேன்" என அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

அதிர்ஷ்டவசமாக, போருக்கு முன்பே அவர் அனைத்து கலைப் பொருட்களையும் டிஜிட்டல் முறையில் புகைப்படம் எடுத்து அந்த தரவுகளை மறைத்து வைத்திருந்தார். தற்போது அந்த ஆதாரங்களைக் கொண்டு, சர்வதேச போலீஸ் உதவியுடன் மாயமான கலைப்பொருட்களை மீட்கும் முயற்சியில் உக்ரைன் தீவிரம் காட்டி வருகிறது.

## போர்நிறுத்த உடன்பாடுக்கு இடையே தெற்கு லெபனானில் இஸ்ரேல் புதிதாக தாக்குதல்



**ஜெருசலேம், ஏப்.20:**

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு எதிரான போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்தது. இதனால், பதிலடியாக லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் பொதுமக்கள் பலர் பலியானார்கள். உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது.

இந்த நிலையில், லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோருடன் சிறந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, இரு தலைவர்களும் தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொள்ள முடிவு செய்துள்ளனர் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கூறினார்.

தீவிர ராஜதந்திர முயற்சிகளின் விளைவாக இது ஏற்பட்டு உள்ளது. அந்த பகுதியில் பதற்றம் தணிந்துள்ளது என்றும் இதன்படி, 10 நாள் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது என்றும் டிரம்ப் சமீபத்தில் கூறினார். இதனால், லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே 10 நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு அமலில் உள்ளது. இந்த சூழலில், தெற்கு லெபனானில் நேற்று காலை 2 இடங்களை குறி வைத்து இஸ்ரேல் வான்வெளி தாக்குதல்களில் ஈடுபட்டது. இதில் பல்வேறு கிராமங்களில் இயந்திர துப்பாக்கிகளை கொண்டும், எறிகுண்டுகளை கொண்டும் தாக்குதல் நடத்தினர்.

ஹிஸ்புல்லா போராளிகள் சிலர் மஞ்சள் கோட்டை அணுகினார்கள். அதனால், தாக்குதல் நடத்தப்பட்டது என பெய்ரூட் நகரை அடிப்படையாக கொண்ட செய்தியாளர் ஒருவர் கூறினார். இதேபோன்று, மஞ்சள் கோட்டின் தெற்கே சுரங்கத்திற்கான நுழைவு பகுதியை நெருங்க முயன்ற நபரை நோக்கி மற்றொரு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சுரங்க நுழைவு வாசல் சேதமடைந்தது.

எனினும் இது, போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல் ஆகாது என இஸ்ரேல் ராணுவ செய்தி தொடர்பாளர் கூறினார்.

எனினும், லெபனானுக்கு எதிரான போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது என ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நயீம் காசிம் இஸ்ரேல் மீது குற்றச்சாட்டாக கூறியுள்ளார்.

## ஈரான் - அமெரிக்கா அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை எப்போது? - வெளியான தகவல்

**தெஹ்ரான், ஏப்.20:**

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்கான தேதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று ஈரானின் துணை வெளியுறவுத் துறை அமைச்சர் சயீத் கதிப்சாதே தெரிவித்தார். இரு தரப்புக்கும் இடையிலான ஒரு 'புரிந்துணர்வு திட்டம்' முதலில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஈரான், அமெரிக்கா இடையிலான மிகப்பெரிய போருக்குப் பின்னர் கடந்த வாரம் இஸ்லாமாபாத்தில் நடந்த அமெரிக்க - ஈரான் பேச்சுவார்த்தைகள், எவ்வித உடன்பாடும் எட்டப்படாமலேயே முடிவடைந்தன. இதனையடுத்து இந்த வார இறுதியில் மீண்டும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியிருந்தார்.

எனினும்,பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் இஸ்லாமாபாத்தில் அவற்றை ஒருங்கிணைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு பார்த்தால், அத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு குறைவுதான் என்று சில தூதரக அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர்.

இதுகுறித்து தெற்குதுருக்கியின் அன்டலியா மாகாணத்தில் நடைபெற்ற ஒரு தூதரகக் கருத்தரங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சயீத் கதிப்சாதே, "இரு தரப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு திட்டத்தை இறுதி செய்வதில்தான் நாங்கள் இப்போது கவனம் செலுத்தி வருகிறோம். தோல்வியடைவது உறுதி என்று தெரிந்த, மேலும் மற்றொரு கட்ட மோதல் தீவிரமடைவதற்கு ஒரு சாக்காக அமையக்கூடிய எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் நாங்கள் ஈடுபட விரும்பவில்லை.

புரிந்துணர்வு திட்டத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளும் வரை, பேச்சுவார்த்தைக்கான தேதியை எங்களால் நிர்ணயிக்க முடியாது. உண்மையில்,பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டிருந்தது.

ஆனால், ஈரானை சர்வதேச சட்டங்களிலிருந்து விலக்கு பெற்ற நாடாகச் சித்தரிக்க முயன்ற அமெரிக்காவின் அதிகபட்ச கோரிக்கைகள் தான் ஒரு உடன்பாட்டை எட்டுவதைத் தடுத்துவிட்டது" என்று கூறினார். மேலும், "சர்வதேச சட்டங்களிலிருந்து விலக்கு பெற்ற நாடாக இருப்பதை ஈரான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். நாங்கள் எதற்கெல்லாம் கட்டுப்படுகிறோமோ, அவை அனைத்தும் சர்வதேச விதிமுறைகள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கும்" என்றார்.

## இஸ்ரேல்தான் அமெரிக்காவின் சிறந்த கூட்டாளி: டிரம்ப்



**வாஷிங்டன், ஏப்.20:**

சர்வதேச கச்சா எண்ணெய் விநியோகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மீண்டும் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அனைத்து வணிகக் கப்பல்களின் போக்குவரத்தையும் நிறுத்தியது.

முன்னதாக, அமெரிக்க மத்தியஸ்தம் செய்த இஸ்ரேல்-லெபனான் இடையேயான 10 நாள்கள் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணையைத் தற்காலிகமாக திறப்பதாகஈரான் வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இதன் விளைவாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சுமார் 10 சதவீதம் வரை சரிந்தது. ஆனால், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தனது கடல்வழி முற்றுகையைத் தொடர்ந்தது. இதையடுத்து, நீரிணையைத்திறப்பதாக அறிவித்த 24 மணி நேரத்துக்குள்ளேயே ஈரான் தனது முடிவை மாற்றிக் கொண்டு நீரிணையை மீண்டும் மூடியுள்ளது. இதனால், தற்போது நீரிணையின் இருபுறமும் சுமார் 20,000 மாலுமிகளுடன் நூற்றுக்கணக்கான கப்பல்கள் நடுக்கடலில் சிக்கித் தவிக்கின்றன.

ஈரானிடம் உள்ள 440 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கைமாற்றுவது தொடர்பாக இருதரப்புக்கும் இடையே இன்னும் இணக்கம் ஏற்படவில்லை. இந்நிலையில், ஈரானின் இந்த அதிரடி நடவடிக்கையால், 2 வார கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா என்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வரும் புதன்கிழமைக்குள் நிரந்தர அமைதி ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், மீண்டும் முழு அளவிலான போர் வெடிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. இருதரப்புக்கும் இடையே நிலவும் இந்த முட்டுக்கட்டையை விலக்க பாகிஸ்தான் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே, இஸ்ரேல் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தன்னுடைய சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"மக்களுக்கு இஸ்ரேலை பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், இஸ்ரேல்தான் அமெரிக்காவின் சிறந்த கூட்டாளி என்பதை நிரூபித்துள்ளது.

அவர்கள் துணிச்சலானவர்கள், தைரியமானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள் மற்றும் புத்திசாலிகள்.

மோதல் மற்றும் நெருக்கடியான தருணங்களில் தங்கள் உண்மையான முகத்தை வெளிப்படுத்திய மற்றவர்களைப் போல இல்லாமல், இஸ்ரேல் கடுமையாகப் போராடுகிறது.

மேலும், எப்படி வெற்றிபெற வேண்டும் என்பதை நன்றாக அறிந்துள்ளது!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## வடகொரியா ஏவுகணை சோதனையால் பரபரப்பு; உஷார் நிலையில் ஜப்பான், தென்கொரியா



**டோக்கியோ, ஏப்.20:**

ஆசிய கண்டத்தில் அமைந்துள்ள வடகொரியா நாட்டில் இருந்து இன்று காலை 6 மணியளவில், பல்வேறு பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை ஏவி அந்நாடு சோதனையில் ஈடுபட்டது. அவை ஜப்பானின் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு அருகே சென்று விழுந்துள்ளன. இதனால், அந்த பிராந்தியத்தில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

இதனை தொடர்ந்து ஜப்பான் படைகள் உஷாராகியுள்ளன. இந்த தகவலை அந்நாட்டு பிரதமர் சனே தகாய்ச்சி உறுதி செய்ததுடன் இதுபற்றி அவர் கூறும்போது, பாலிஸ்டிக் ரக ஏவுகணைகள் ஏற்கனவே ஜப்பானின் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு வெளியே விழுந்திருக்க கூடும் என நம்பப்படுகிறது.

இந்த தகவலை ஜப்பான், அமெரிக்கா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் தற்போது ஒருங்கிணைந்து ஆய்வு செய்து வருகின்றன என கூறினார்.

உடனடியாக தகாய்ச்சி தலைமையில் அவசரகால கூட்டமும் கூடியது. தகவல்கள் எல்லாவற்றையும் சேகரித்து, பகுப்பாய்வு செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள தொடர்புடைய அமைச்சகங்களுக்கு உத்தரவிட்டு உள்ளேன் என்று தகாய்ச்சி கூறியுள்ளார். வடகொரியாவின் சோதனையால் ஜப்பான் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

## ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா அனுமதி

**மாஸ்கோ, ஏப்.20:**

ஈரான் மீதான அமெரிக்காவின் போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தது.

இதனை கட்டுப்படுத்த ரஷிய எண்ணெய்க்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கக் கோரி இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வந்தன. முன்னதாக, இனி தளர்வுகள் வழங்கப்படாது என்று கூறி வந்த அமெரிக்கா, தற்போது தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க நிதித்துறை வெளியிட்டுள்ள உத்தரவில், "ஏப்ரல் 17-ந்தேதிக்கு முன்னதாகவே கப்பல்களில் ஏற்றப் பட்ட ரஷிய பெட்ரோலியப் பொருட்களை வாங்குவதற்கான தளர்வு அடுத்த மாதம் 16-ந்தேதி வரை நீட்டிக்கப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த திடீர் முடிவால் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போர்நிறுத்த உடன்பாடு விதிமீறலில் ஈடுபட்டால்... இஸ்ரேலுக்கு ஹிஸ்புல்லா எச்சரிக்கை

**பெய்ரூட், ஏப்.20:**

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல், 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது. எனினும், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்தது. இதனால், லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் மக்கள் பலர் பலியானார்கள். உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது. இந்த நிலையில், லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோருடன் சிறந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, இரு தலைவர்களும் தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொள்ள முடிவு செய்துள்ளனர் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கூறினார்.

தீவிர ராஜதந்திர முயற்சிகளின் விளைவாக இது ஏற்பட்டு உள்ளது. அந்த பகுதியில் பதற்றம் தணிந்துள்ளது என்றும் இதன்படி, 10 நாள் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது என்றும் அவர் கூறினார்.

## கட்டணம் செலுத்தி செல்லும் கப்பல்களுக்கு முன்னுரிமை: ஈரான் அறிவிப்பு

**தெஹ்ரான், ஏப்.20:**



ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதனால், பதற்றம் சற்று தணிந்தது.

எனினும் ஈரான், அமெரிக்கா இடையே நிரந்தர போர் நிறுத்தத்திற்காக பாகிஸ்தானில் கடந்த வாரம் 21 மணிநேரம் நீடித்த தொடக்க கட்ட அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகவில்லை. இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என அமெரிக்கா தெரிவித்தது. இதனை தொடர்ந்து, ஈரானிய துறைமுகங்களை முற்றுகையிடுவதுடன், நீடித்த பொருளாதார நெருக்கடி நீடிக்கும் என அமெரிக்கா தெரிவித்தது. இதனால், மேற்காசிய பகுதியில் மீண்டும் பதற்றம் கூடியுள்ளது.

ஈரான் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அப்படியில்லாமல் அதிருப்தி ஏற்படும் வகையிலான வழியை தேர்ந்தெடுக்கும் என்றால், அவர்களை முற்றுகையிடுவதுடன், உள்கட்டமைப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகள் மீது குண்டுகள் வீசி தாக்கப்படும் என்று டிரம்ப் எச்சரிப்பும் வெளியிட்டார்.

எனினும், ஹார்மூஸ் ஜலசந்தியில் ஈரான் முன்பே வரையறுத்துள்ள வழியின் மூலம் கப்பல் போக்குவரத்து நடைபெறும் என்றும் ஈரானின் துறைமுகங்களை முடக்கும் அமெரிக்காவின் நடவடிக்கை தொடர்ந்து நீடிக்கும் என்றால், அதற்கு பதிலடி நடவடிக்கைகளை எடுப்போம் என ஈரான் எச்சரித்தது.

ஹார்மூஸ் ஜலசந்தியின் பாதுகாவலர் நாங்களே என்றும் அதனை கடந்து செல்லும் அனைத்து கப்பல்களும் தங்களுடைய முன் அனுமதியை பெற வேண்டும் என்றும், நாடுகளின் கப்பல்கள் அங்கீகரிக்கப்பட்ட ஈரானிய வழிகளிலேயே செல்ல அனுமதிக்கப்படும் என்றும் ராணுவ கப்பல்களுக்கு தொடர்ந்து தடை விதிக்கப்படும் என்றும் ஈரான் தெரிவித்தது.

எனினும், முற்றுகையை தொடர்ந்து, அமெரிக்க படைகளின் உத்தரவை ஏற்று 21 கப்பல்கள் திரும்பி ஈரானுக்கே சென்றுள்ளன என அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்கா மற்றும் ஈரான் என இருதரப்புக்கு இடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட போதிலும் அதனை மீறும் வகையில் அமெரிக்கா தொடர்ந்து செயல்படுகிறது என ஈரான் குற்றச்சாட்டு தெரிவித்தது.

இதனை தொடர்ந்து ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மீண்டும் மூடியது. இதன் தொடர்ச்சியாக, ஹார்மூஸ் ஜலசந்தியை கடந்து செல்ல கூடிய கப்பல்களுக்கு ஈரான் மீண்டும் கட்டுப்பாடுகளை விதித்தது. இது அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சூழலில், ஈரானை சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் சி.என்.என். செய்தியாளரிடம் பேசும்போது, ஹார்மூஸ் ஜலசந்தியின் புதிய ஒழுங்கு முறைகளை ஏற்று, பாதுகாப்பு சேவைகளுக்கான கட்டணம் செலுத்த கூடிய கப்பல்களுக்கு முன்னுரிமை கொடுக்க ஈரான் முடிவு செய்துள்ளது என்று கூறினார்.

# பட்டாசு ஆலையில் வெடி விபத்து: 23 பேர் பலி!





# உதயநிதியை முதல்வராக்க விரும்புகிறார் மு.க.ஸ்டாலின்: அமித்ஷா

# இலங்கை அதிபருடன் இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் சந்திப்பு

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைப் பெருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்

# மலேசியாவில் பயங்கர தீ விபத்து: 200 வீடுகள் எரிந்து நாசம்!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 20.04.2026 திங்கட்கிழமை | இலவச இ–பேப்பர்